# ஓர்மத்தின் உறைவிடம்

# இஸ்ரேல்



ஐங்கரன் விக்கினேஸ்வரா

# ஓர்மத்தின் உறைவிடம்
# இஸ்ரேல்

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இந்நூலில் வெளியான
கட்டுரைகளை
பிரசுரித்த யாழ் ஈழநாடு,
காலைக்கதிர், மாலை முரசு,
வீரசேகரி, திக்குரல், கனடத
முரசு, உலகத்தமிழர், சுபீட்சம்,
உதயம் ஆசிரியர்களுக்கு
மிகுந்த நன்றிகள்

**ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்**

ஐங்கரன் விக்கினேஸ்வரா

முதற்பதிப்பு: 2024 சித்திரை

© ஐங்கரன் விக்கினேஸ்வரா

வடிவமைப்பு : க.பரணீதரன்

வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய்

பக்கம்: 108

விலை: 500.00

அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Ormathin Uraividam Israel

Ainkaran Wigneswara

First Edition: 2024 April

© Ainkaran Wigneswara

Layout : K.Bharaneetharan

Published by Jeevanathy, Kalai aham, Alvai

Pages: 108

Price: 500.00

Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-72-6

ஜீவநதி வெளியீடு - 351

# சமர்ப்பணம்



மண்ணில்
22.12.1968

விண்ணில்
21.12.2021

## சிவநாதன் சூரியகுமார்

தன்னலங் கருதா என்றுமாய்
மண்ணலங் காத்த மகுடம் சூரி !
போரழித்த தாய்மண்ணில் கணனியால்
எதிர்காலத்தை செதுக்கிய சிற்பி சூரி !

# உள்ளே...

1. இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல்: வரலாற்றில் யூத தேசம் எங்கெல்லாம் உருவாக இருந்தன?
2. இஸ்ரேல் தேச உருவாக்கம் : முடிவிலா துயரின் முடிவில் உருவான தேசம்
3. 1973 யோம் கிப்பூர் போர்: தனித்து நின்று அரபு படைகளை வென்ற போர்
4. ஒப்பரேஷன் என்டபே அதிரடி மீட்பு : பாலஸ்தீன பேரிரில் பிணைக் கைதிகள் விவகாரம்
5. காசா போரில் இஸ்ரேல் கற்கும் பாடம் : ஈராக் – ஆப்கான் போரில் அமெரிக்க படிப்பினைகள்
6. சுரங்க பாதையை அழிக்க நுரை குண்டுவீச்சு திட்டம்: காசாவில் ஹமாஸின் முதுகெலும்பு உடைக்கப்படுமா?
7. ஹமாஸ் – இஸ்ரேல் போரினால் லாபம் யாருக்கு? ஆயுத நிறுவனங்களின் இலாபங்களுக்காக மக்கள் அழிவா?
8. இஸ்ரேலின் நவீன "டிஜிட்டல் ஆர்மி": விலைக்கு வாங்கப்பட்ட பிரபலங்கள்!
9. கட்டார் இராஜ தந்திரம் போரை நிறுத்துமா? காசா யுத்த நிறுத்தமும் பிணைக் கைதிகள் விடுவிப்பும்
10. இஸ்ரேல் வலதுசாரி நெதன்யாகு அரசு: ஆட்சி கவிழ்க்கப்படுவது சாத்தியமா?
11. ஈரானை போருக்கு இழுக்கும் ஷ்ரோன் தாக்குதல்: இஸ்ரேலின் வலதுசாரி நெதன்யாகு அரசின் திட்டம்!
12. சிறிலங்கா போரில் இஸ்ரேலின் பங்களிப்பு: ஐ.நா. சபை மூலம் விசாரிக்க வேண்டுதல்!
13. இனப்படுகொலையும் சர்வதேச சட்டங்களும்: மானுட வரலாற்றின் துயரமான அத்தியாயங்கள்
14. அரபு – சர்வதேச அமைதிப்படை: மீண்டும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு?
15. எகிப்தின் போர் நிறுத்த திட்டம்: ஹமாஸ் மறுதலிப்பால் யாருக்கு அழிவு
16. லெபனானில் திறக்கப்படும் போர்முனை? ஹில்புல்லா மீது இஸ்ரேல் தாக்குதல்:

# முன்னுரை

## உலக அரசியலை புரிய வைக்கும் எழுத்துக்கள் :

*ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு பங்காளனாக, செயற் பாட்டாளனாக தன் பயணத்தை தொடங்கிய ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள், எழுத்து வழியாக மிக நெடுங் காலமாக ஈழ விடுதலைக்கும் இலக்கியத்திற்கும் பெரும் பங்களிப்பை செய்து வருபவர். இன்றுவரை எழுத்தாகட்டும், மனிதாபிமானச் செயல்களாகட்டும் துடிதுடிப்பான ஒரு இளைஞனாகவே எனக்கு எழுத்துக்களின் வழியும் செயற்பாடுகளின் வழியும் தென்படுகின்றார்.*

*கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் என்று இடையறாத பயணத்தை தொடர்கின்ற ஐங்கரன், ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் வெளிவந்த முக்கிய இலக்கிய நூல்கள் சிலவற்றிலும் பின்களப் பணியாளனாக இருந்து செயற்பட்டும் வந்திருக்கிறார். இலங்கைப் பத்திரிகைகளிலும் சர்வதேசப் பத்திரிகைகளிலும் அவர் எழுதி வரும் பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகள் இன்றளவும் முக்கியமானவை. அவை பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன.*

*அரசியலை, மக்கள் உணர்வு நிலையை, போராட்டத்தை, பல்வேறு விழிப்புணர்வூட்டும் செய்திகளை மிகவும் சுவாரசியமான முறையில் இவர் எழுதுகின்றார். வணக்கம் இலண்டன் இணையத்தில் இலக்கியம் மற்றும் அல்புனைவுகள் பகுதியில் நான் கடமையாற்றி வருகின்ற நிலையில், இவரது கட்டுரைகள் பலவற்றை அதில் பதிவேற்றி வருகின்றேன். அவற்றுக்கு வணக்கம் இலண்டன் இணையதளத்தின் வாசகர்கள் மத்தியில் பெருத்த வருவேற்பு காணப்படுகின்றமை இங்கு குறிப்பிட வேண்டிய செய்தி.*

*புலம்பெயர்ந்து அவுஸ்திரேலிய மண்ணில் வாழ்கின்ற போதும், அவரது நினைவுகள் யாவும் ஈழத்தை சுற்றியும் ஈழ விடுதலையைச் சுற்றியுமாகவே இருக்கிறது. அதனால்தான் தினம் தோறும் ஈழம் குறித்து பல கட்டுரைகளை எழுதிக் கொண்டே இருக்கின்றார். எனக்கு மாத்திரமல்ல, பலருக்கும் அது ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது. ஈழத்தின்*

சமகால நிகழ்வுகளை மாத்திரமின்றி, வரலாற்று நிகழ்வுகளையும் நினைவுபடுத்தும் பல முக்கிய கட்டுரைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்.

ஈழத்தின் இலக்கிய ஆளுமைகளைப் பற்றியும், ஈழத்தின் பத்திரிகைத்துறை சார்ந்த தகவல்களையும் பத்திரிகைத்துறை ஆளுமைகள் சார்ந்த தகவல்களையும் கூட தன் எழுத்துக்களில் பதிவு செய்திருக்கிறார். காலத்திற்கு முந்தைய தலைமுறையில் இருந்து இன்றைய தலைமுறை வரையான இந்த அவதானம் வியப்பையும் ஆச்சரியத்தையும் தருகிறது.

ஈழ விடுதலை குறித்த ஆழமான புரிதலை எழுத்தாளர் ஐங்கரன் கொண்டிருப்பதற்கு உலக வரலாறு குறித்த அவரது அரசியல் அறிவும், உலக அரசியல் குறித்த அவரது ஆழமான புரிதலும் தான் அடிப்படை யானவை. உலக அரசியலின் முகங்களை, ஆயுத அரசியலின் அர்த்தங்களை, ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை, சமகால உலக அரசியலில் பொதிந் துள்ள தந்திரங்களின் முகங்களை என இவர் தன் எழுத்துக்களின் வழியாக தரும் செய்திகள் மிகவும் அதிர்வு தரக்கூடியவை.

சில மாதங்களின் முன்னர் வெளியான “பாலஸ்தீனம் எரியும் தேசம்” என்ற கட்டுரை நூல் வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. ஈழத்தில் அல்புனைவு சார்ந்த நூல் ஒன்று அதிகம் விற்றிருப்பது என்பது மகிழ்ச்சி அளிக்கின்ற செய்தியாகும். தற்போது “ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்” என்ற புதிய நூலை ஐங்கரன் வெளியிடுகின்றார். உலக அரசியலை புரிந்துகொள்ள உதவும் இவரின் எழுத்துக்களில் இதுவும் குறிப்பிடத்தக்க ஒரு தொகுதியாக இருக்கும்.

ஈழத் தமிழர்கள் தம்மை பாலஸ்தீன மக்களுக்கு ஒப்பானவர்களாக கருதிக்கொள்ளுகின்ற ஒரு நிலை இருக்கிறது. பாலஸ்தீன மக்களுக்கு ஆதர வானதொரு போக்கு ஈழத்தில் நெடுங்காலம் நிலவுகிறது. அதேவேளை தமக்கென்று ஒரு நாடற்ற நிலையில் இஸ்ரேலை உருவாக்கிய இஸ்ரேலியர் களிடம் இருந்தும் நாம் கற்றுக்கொள்ள பல விடயங்கள் உண்டென்ற பார்வையும் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

இந்த சிக்கலான அரசியலை புரிந்துகொள்ள இந்த நூல் உதவும். இதுபோன்ற உலக அரசியல் சார்ந்த விடயங்களை நாம் அதிகமும் கற்றுக் கொள்வது இன்றைய உலக அரசியலின் போக்கை புரிந்து கொள்ளவும் அதற்கு ஏற்ப ஈழ விடுதலைப் போராட்டத்தை நகர்த்தவும் உதவும். அதற்கு இத்தகு நூல்களின் வரவு, முன் மாதிரியானது. பத்தி எழுத்தாளன் சகோதரன் ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்களுக்கு வாழ்த்து.

தீபச்செல்வன்,

கிளிநொச்சி, ஈழம்.

05.02.2024

# என்னுரை

முடிவிலா துயரின் முடிவில் உருவான தேசமே இஸ்ரேல்!

*நீண்ட கால யூதர்களின் தொடர் துயரங்களுக்கு முற்றுப் புள்ளியாக எழுந்ததே இஸ்ரேல் எனும் தேச உருவாக்கமாகும். இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் யூத இன அழிப்பின் பின்னரும், அதீத தொழில்நுட்ப வளர்ச்சி கொண்ட நாடாக இஸ்ரேல் உருவாகியது.*

*ஹிட்லர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, யூதஇன அழிப்பை நடைமுறைப்படுத்துவது என்பதை ஒவ்வொரு படியாக, "யூதர்களின் கேள்விக்கு இறுதியான தீர்வு" என்று கூறப்பட்ட அழிப்புக் கொள்கையின் படி நிகழ்ந்தது. இதன் முன்பே சுமார் மூவாயிரம் ஆண்டுகால வரலாற்றில் பல்வேறு நாட்டினத்தவர் களால் யூதர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர் என வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.*

*பல ஆயிரம் ஆண்டுகளாக நாடின்றி தவித்த யூதர்களுக்கு, 1948 ஆம் ஆண்டு ஐ.நா.வின் அங்கீகாரத்துடன் அரபு முஸ்லிம்களின் எதிர்ப்பையும் மீறி பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் எனும் நாடு உருவானது. அவர்களின் தீராக் கனவானது, தேசப்பற்றை வெளிக் கொணர்ந்தவர்களாக இன்று உலக அரங்கில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது என்பதை இஸ்ரேல் தேச உருவாக்கத்தின் மூலம் காணலாம்.*

*இஸ்ரேல் தேசத்தின் முக்கிய மூலதனம் அவர்களது திறன்சார் அறிவும் கடும் உழைப்பும்தான். இஸ்ரேல் தேச உருவாக்கம் என்பது யூத மக்களினது இந்த உழைப்பிற்கு கிடைத்த வெற்றியாகும்.*

*இஸ்ரேல் தேசம் உருவானபோது அங்கு யாரும் ஹிப்ரு மொழி பேசவில்லை. எனினும் தாய் மொழியின் அவசியம் கருதி*

அந்த மொழியினை மீட்டெடுக்க வேண்டிய தேவையிருந்ததனால் அனைத்து யூதர்களுக்கும் ஹிப்ரு மொழி கட்டாயமாக பயிற்றுவிக்கப்பட்டது.

முடிவிலா துயரின் முடிவில் உருவானதே இஸ்ரேல் தேச உருவாக்கமாகும்.

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

# 01

## இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல் : வரலாற்றில் யூத தேசம் எங்கெல்லாம் உருவாக இருந்தன?




ஐரோப்பாவில் யூதர்களைக் கண்டு வெறுப்படைந்த காலம் ஒன்று இருந்தது. குறிப்பாக முதலாம் - இரண்டாம் உலகப் போருக்கு முன்பாகவே இத்தகைய வெறுப்பு யூத மக்கள் மீது இருந்தது என பல வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பாவில் குடிபுகுந்த யூதர்களை எப்படி அவர்களை அங்கிருந்து வெளியேற்றுவது என்பதில் ஒவ்வொரு நாடும் பெரும் ஆலோசனைகளில் ஈடுபட்டனர். வேறிடங்களில் குடியேற்றுவது பற்றி புதிய பல திட்டங்களை வகுத்தனர். அதனைப்பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே இந்த ஆக்கமாகும்.

**யூதர்களை பூங்கொத்து கொடுத்து வரவேற்ற பாலஸ்தீனர்!**

*ஐரோப்பாவில் இருந்து வெளியேற்றப்பட்ட யூதர்களை, பாலஸ்தீனியர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள். அங்கு பாலஸ்தீனம் சென்று கால்பதித்து மெல்ல மெல்ல அவர்களின் நிலங்களை அபகரித்து இன்றைக்கு பாலஸ்தீனர்கள் 10%த்திற்கு குறைவான நிலத்தில் வசித்து தங்களின் தாய்நாட்டை இழந்து நிற்கதியாய் இருக்கிறார்கள் என்பது காலக் கொடுமையாகும்.*

*அப்படி பாலஸ்தீனத்தில் யூத மக்கள் வந்திருக்காவிட்டால், வேறு என்ன திட்டங்கள் எல்லாம் இந்த உலக நாடுகள் அவர் களுக்காக வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றி ஆராயும் வரலாற்றுப் பார்வையே அலசலே இந்த ஆக்கம்.*

**இஸ்ரேலின் இருப்பிடச் சிக்கல் :**

*பாலஸ்தீனம் என்னும் தேசம் சரித்திர நியாயங்களின் அடிப் படையிலும், அம்மண்ணின் பூர்வீகக் குடிகள் என்கின்ற முறையிலும் பார்த்தால், கண்டிப்பாக அது பாலஸ்தீன அராபியர்களுக்கு உரியதுதான் என கூறினாலும், யூதர்களும் அந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் தான். யூதர்களும் அந்த மண்ணில் கிட்டத்தட்ட 2000 ஆண்டு களுக்கு முன்பே வந்தேறிகளாக வாழ வந்தவர்கள் தான். அராபிய இனம் மத்திய கிழக்கு நாடுகள் என்று சொல்லப்படும் நாடுகளான சிரியா, ஜோர்டான்,லெபனான், ஈராக், எகிப்து, ஈரான், சவுதி அரேபியா முழுக்க பரவி இருந்த இனம். அந்த இனம் பாலஸ்தீனிலும் பரவி இருந்தது. அதனால் பாலஸ்தீன அராபியர்கள், அல்லது பாலஸ்தீன முஸ்லீம்கள் என்று அழைக்கப்பட்டவர்கள். அவர்கள் ஒரு காலத்திலும் பாலஸ்தீனை விட்டு வெளியேறிய தில்லை.*

*1948ல் அவர்கள் தேசத்திற்குள், அவர்கள் அனுமதியின்றி ஐ.நா மற்றும் அமெரிக்கா, பிரிட்டன் துணையுடன் இஸ்ரேல் என்னும் தேசம் உருவானதாலும், அதனை முன்னிட்டு நடந்த போர்களினாலும் அகதிகளாக்கப்பட்டு சமீபத்தில் முழுமையாக நாடற்றவர்களாக வெளியேற்றப்பட்ட இனமாகி உள்ளனர்.*

**அமெரிக்காவின் யூத நாடு திட்டம்:**

*யூதர்களுக்கு ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என 1825-ல்*




அமெரிக்காவின் நியூ யார்க்கில் உள்ள அரசியல்வாதியும் கதாசிரியருமான மோர்டியாக் மேனுவேல் நோஹ் 27 சதுர மைல் பரப்பளவு கொண்ட ஒரு தீவை வாங்கினார். எறாரத் (ARARAT- city of Refuge) என அந்தத் தீவிற்கு பெயர்சூட்டினார். இதனை அவர் யூதர்களுக்கான தாய்நாடாக மாற்றத் திட்டமிட்டார்.

அந்தத் தீவில் ஒரு பெரும் கல்வெட்டையும் நிறுவினார். அமெரிக்கா சுதந்திரம் பெற்ற 50வது ஆண்டில் இதை ஒரு சாதனையாக அறிவிக்க அவர் முனைந்தார். ஆனால் இந்த யோசனையை யாரும் செவிமடுக்கவில்லை என்பதால் அவர் திட்டத்தைக் கைவிட்டார். ஆனால் அவர் நிறுவிய கல்வெட்டு இன்றைக்கும் அங்கே உள்ளது.

**உகாண்டாவில் யூத நாடு:**

பிரித்தானிய எழுத்தாளர் ஜோசப் சாம்பேர்லென் (Joseph Chamberlain)அவர்களின் காணியாகத் திகழ்ந்த கிழக்கு ஆப்பிரிக்கா வின் ஒரு பகுதியை யூதர்களுக்கான தாயகமாக மாற்றத் திட்ட மிட்டார். இந்தத் திட்டத்தை அவர் 1903-ல் பேசலில் நடைபெற்ற ஆறாவது சர்வதேச யூதர்கள் மாநாட்டில் அறிவித்தார்.

ஐரோப்பா முழுவதும் யூதர்களுக்கு எதிராக பெருகி வரும் எதிர்ப்பலைகளை சுட்டிக்காட்டி இதிலிருந்து தப்பிக்க விரைவில் ஒரு பாதுகாப்பான இடத்தை நாம் தேர்வு செய்தாக வேண்டும் என அவர் வற்புறுத்தினார். இதனை தியோடர் ஹெர்சலே ஒரு தற்காலிகத் தீர்வாக ஒப்புக்கொண்டார். பிரிட்டன் உகாண்டாவில் 5000 சதுர கிலோ மீட்டர் நிலத்தை ஒதுக்கவும் ஒப்புக் கொண்டது.

*1904-ல் ஒரு பெரும் குழு இதனை ஆய்வு செய்ய அங்கே பயணித்தது. ஆனால் 1905-ல் ஆப்பிரிக்காவில் ஒரு யூத தாயகத்தை ஏற்படுத்துவது முதல் மாநாட்டின் தீர்மானங்களில் இல்லை என்பதால் இதனை ஏற்க இயலாது என பெரும் எதிர்ப்புகள் கிளம்பின.*

**யூதர்கள் ரஷ்யாவுக்கு குடிபெயர்வு :**

*சிலுவைப்போரின் பின் அமைந்த இஸ்லாமிய பேரரசு அதாவது துருக்கியை தலைமையிடமாக கொண்டு எகிப்து ஈராக் சிரியா ஜோர்டான் லெபனான் ஆகியவற்றை உள்ளடக்கிய ஓட்டோமான் பேரரசு மீண்டும் யூதர்களை மீள் குடியேற்றம் செய்தது.*

*ஆயினும் அச்சத்தால், பெரும்பாலான யூதர்கள் ரஷ்யாவுக்கு குடிபெயர்ந்தார்கள். ரஷ்யாவுக்கு அதனுடைய அண்டை நாடு லிதுவேனியா எல்லை பிரச்சினை இருந்தது. தங்களுக்கென தனி நாடு அமைக்கும் எண்ணத்தில் இருந்த யூதர்கள் அதன் எல்லைப்பகுதி நிலங்களை ரஷ்ய அதிகாரிகளிடம் லஞ்சம் கொடுத்து வாங்கி குவிக்கத் தொடங்கினர்.*

*அப்போது ரஷ்யப் பேரரசர் அலெக்சாண்டர் II கொல்லப் படவே அது யூதர்களின் சதியாக இருக்கலாம் என்று சந்தேகப்பட்ட ரஷ்ய அதிகாரிகள் யூதர்களை நாட்டை விட்டு விரட்டினார்கள். 150 ஆண்டுகளுக்கு முன் ரஷ்யாவை விட்டு விரட்டப்பட்ட யூதர்களில் பலர் மீண்டும் துருக்கிப் பேரரசில் குடியேறினார்கள்.*

*போலந்து, லிதுவேனியா, இங்கிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகளில் குடியேறியிருந்தார்கள். பெரும்பாலான யூதர்கள் ஜெர்மனியில் குடியேறியிருந்தார்கள். யூதர்களின் நிதி ஆளுமை நடவடிக்கை காரணமாக 50,000 யூதர்கள் லிதுவேனியாவில் கொல்லப்பட்டார்கள்.*

**கிழக்கு ரஷ்யாவில் யூத தேசம் ?**

*யூதர்களின் எண்ணிக்கை படு வேகமாக வளர்ந்துவருவதை ரஷ்யா ஒரு நெருக்கடியாகப் பார்த்தது. அதனால் இதனைக் கட்டுப்படுத்த அவர்களுக்கு என்று ஒரு தனித்த நிலப்பகுதியை ஏற்படுத்த அவர்கள் முடிவு செய்தனர்.*

ரஷ்யா அங்கே சுயாட்சியுடன் கூடிய ஒரு சோசலிச வாழ்க்கையை அளிக்கலாம் என்றும், ஆனால் தேசிய அளவில் அவர்கள் ரஷ்யாவின் ஒரு பகுதியாகவே இருப்பார்கள் என்றும் அறிவித்தது.

கிழக்கு ரஷ்யாவில் சீனாவின் எல்லை அருகில் அவர்களுக்கு ஒரு நிலப்பரப்பையும் அவர்கள் இதற்காக ஒதுக்கினார்கள். இதுதான் பிரோபித்சான் (Birobidzhan) பகுதி ஆகும். கடும் குளிர் பிரதேசமாக இந்தப் பகுதி இருந்தது. அங்கே யூதர்கள் மெல்ல மெல்ல குடியேறினார்கள். ஒரு கட்டத்தில் அந்தப் பகுதியில் 16% பேர் யூதர்களாக வசித்தார்கள். ஆனால் தட்பவெப்பமும் காலமும் ஒத்துழைக்காததால் மெல்ல மெல்ல அங்கிருந்து பல ஊர்களுக்கு இடம்பெயர்ந்தார்கள்.

**யூதர்களை ஜப்பானில் குடியேற்றம்?**

1934-ல் ஜப்பான் மன்னர் ஒரு திட்டத்தை அறிவித்தார். இதற்கு புகு திட்டம் (Fugu plan) என பெயர் சூட்டினார். யூதர்களை ஜப்பானில் குடியேற்றம் செய்தால் தன் வழியே ஜப்பானிற்கு பொருளாதார ரீதியில் பல நன்மைகள் ஏற்படும் என அவர் நம்பினார்.

6 லட்சம் பேரை குடியேற்றம் செய்யும் அளவிற்கு அவர்கள் பெரும் திட்டங்களை வகுத்தார்கள். ஆனால் யூதர்கள் ஆபத் தானவர்கள் என்கிற பயம் ஜப்பானியர்கள் மத்தியில் கடுமையாக இருந்தது. யூதர்கள் அமெரிக்காவிற்கு ஆதரவாகவே நிற்பார்கள், அது ஜப்பானுக்கு ஆபத்தாகவே முடியும் என்று அரசியல் நிபுணர்கள் தெரிவிக்க இந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்.

**ஜெர்மனியில் பல லட்சம் யூதர்கள் கொலை :**

முதல் உலகப்போருக்கு முன் நடந்த போர்களில் இங்கிலாந்து ஜெர்மன் ஆகிய நாடுகளில் யூத ராணுவப்பிரிவு இருந்தன. முதல் உலகப்போரில் இங்கிலாந்து, ரஷ்யா, பிரான்ஸ் ஒரு பக்கமும் ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி, துருக்கி மறுபக்கமுமாக போரிட்டன.

ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சியில் முதல் உலகப்போரின் தோல்விக்கு ஜெர்மனியர்கள் தான் காரணம் என்றும், ஐரோப்பாவின் வறுமைக்கும் காரணம் யூதர்கள் தான் என்று யூதர்களை வேட்டை

*யாடினார். கிட்டத்தட்ட அறுபது லட்சம் யூதர்கள் கொல்லப் பட்டனர். ஜெர்மனி தான் வென்ற நாடுகளான பெல்ஜியம், போலந்து, பிரான்ஸ், நோர்வே ஸ்வீடன் ஆகிய நாடுகளில் உள்ள யூதர்களை தேடித்தேடி கொன்றது.*

**ஜெர்மனி யூதரை மடகாஸ்கரில் குடியேற்ற முயற்சி :**

*1940 ஜூன் மாதம் ஜெர்மனியர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அதாவது ஐரோப்பா முழுவதிலும் உள்ள யூதர்களை அங்கிருந்து அப்படியே வெளியேற்றி, அவர்களை ஆப்பிரிக்கா அருகில் இருக்கும் மடகாஸ்கர் தீவில் குடியமர்த்துவது என்பது தான் அந்தத் திட்டம்.*

*பிரான்ஸ் நாட்டை ஜெர்மனி கைப்பற்றிய நிலையில் பிரான்ஸ் வசம் இருந்த இந்தத் தீவை அப்படியே இந்தத் திட்டத்திற்கு பாவிப்பது என முடிவு செய்தார்கள். அடுத்து பிரிட்டனை வென்று, யூதர்களை ஐரோப்பாவில் இருந்து வெளியேற்ற பிரிட்டனிடம் உள்ள பெரிய கப்பல்களை பாவிப்பது என்றும் தீர்மானித்தார்கள்.*

*ஒரு வருடத்திற்கு பத்து லட்சம் யூதர்கள் என்கிற கணக்கில் நான்கு வருடங்களில் ஐரோப்பாவில் யூதர்களே இல்லாமல் பார்த்துக் கொள்வது என்பதும் அவர்களின் முழு இலக்காக இருந்தது. ஆனால் போரில் பிரிட்டனை ஜெர்மனியர்கள் வீழ்த்த முடியவில்லை என்பதால் இந்தத் திட்டத்தை கைவிட்டார்கள்.*

*இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனி தோற்றது. இங்கிலாந்து பாலஸ்தீனத்தில் கொஞ்சம் கொஞ்சமாக குடியேறி யிருந்த யூதர்கள் பகுதியை பிரித்து இஸ்ரேல் என்ற தனிநாடாக அறிவித்தது.*

**பூங்கொத்து கொடுத்தவர்க்கு குண்டுமழை பரிசா ?**

*இங்கிலாந்து தான் வென்றால் துருக்கியின் கட்டுபாட்டி லிருந்து எகிப்து, சிரியா, ஜோர்டான், லெபனான், ஈராக் ஆகிய வற்றை விடுவிப்பதாகவும் இஸ்ரேலை மீண்டும் உருவாக்கி யூதர் களுக்கு தனிநாடாக அளிப்பதாகவும் அறிவித்தது. போரில் ஜெர்மனி தோற்றதால் துருக்கியிலிருந்து பல நாடுகள் சுதந்திர நாடுகளாக வெளியேறின.*


THE PALESTINE POST

STATE OF ISRAEL IS BORN

*இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் பாலஸ்தீனமும் சுதந்திரமடைந்தது. அப்போது இஸ்ரேல் தோன்றவில்லை. ஜெருசலேத்தை மட்டும் பிரிட்டன் தன் கையில் தக்க வைத்துக் கொண்டது.*

*ஐரோப்பாவில் இருந்து, இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் யூதர்களின் கப்பல் பாலஸ்தீன துறைமுகத்தை நெருங்கிய போது அதில் இருந்தவர்கள் ஒரு பெரும் பதாகையை ஏந்தி வந்தார்கள்* “The Germans destroyed our families and homes - don't you destroy our hopes" *அதாவது ஜெர்மனியர்கள் எங்கள் குடும்பங்களை, வீடுகளை அழித்துவிட்டார்கள், நீங்கள் எங்கள் நம்பிக்கையை அழித்து விடாதீர்கள் என்றது அந்த பதாகை.*

*யூதர்கள் ஹிட்லரின் கொடுங்கோன்மையின் கீழ், ஹிட்லரின் ராணுவத்தின் பிடியில் சிக்கிச் சீரழிந்தது கண்டு உலகே கவலை யுற்றது. ஹிட்லரைச் சாடியது, வரலாறு ஹிட்லரை ஒரு போதும் மன்னிக்காது.*

*யூதர்களை அங்கே சென்று இறக்கி விட்டு விட்டு மெல்ல இந்த விசயத்தில் தங்களின் கைகளை கழுவிக் கொண்டது இங்கிலாந்து. இனி இது எங்கள் பிரச்சினை இல்லை ஐ நா பார்த்துக் கொள்ளட்டும் என விலகிக் கொண்டார்கள்.*

*தற்போது பூங்கொத்து கொடுத்த பாலஸ்தீன மனிதர்களுக்கு பொஸ்பரஸ் குண்டுகளைப் பரிசாகக் கொடுக்கும் வரலாறு ஒரு போதும் மன்னிக்காது.அப்படி ஒரு பதாகையை ஏந்தி வந்தவர்கள் இன்று பாலஸ்தீனர்களின் தாயகத்தை நிர்மூலமாக்கி வருகிறார்கள்.*

# 02

## இஸ்ரேல் தேச உருவாக்கம்:
## முடிவிலா துயரின் முடிவில் உருவான தேசம் !



ஹிட்லர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதிலிருந்து, யூதஇன அழிப்பை நடைமுறைப்படுத்துவது என்பதை ஒவ்வொரு படியாக, ”யூதர்களின் கேள்விக்கு இறுதியான தீர்வு” என்று கூறப்பட்ட அழிப்புக் கொள்கையின் படி நிகழ்ந்தது. இதன் முன்பே சுமார் மூவாயிரம் ஆண்டுகால வரலாற்றில் பல்வேறு நாட்டினத்தவர் களால் யூதர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர் என வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

**இனப் படுகொலை வதை முகாம்கள்:**

இரண்டாம் உலகப் போரின் முன்னாக ஜேர்மனிய அரசு

*யூதர்களை குடியுரிமைச் சமூகத்திலிருந்து வெளியேற்றுவதற்கான சட்டங்களை நிறைவேற்றியது. அதில் நியூரம்பெர்க் சட்டம் **1935** குறிப்பிடத்தக்கது. இப்படுகொலைகளுக்காக **1933** இல் தொடங்கி நாஸிகள் வதை முகாம் வலைப்பின்னல்களை அமைக்கத் தொடங்கினர்.*

*__1941__ இலிருந்து __1945__ வரை, யூதர்கள் ஒரு இனப்படுகொலை மூலம் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டனர். இது ஐரோப்பாவின் பிற மக்களிடையே நடைபெற்ற அடக்குமுறை மற்றும் படுகொலை நிகழ்வுகளின் ஒரு பகுதியாக நிகழ்ந்தது.*

*நாஸி கட்சியின் உயர் தலைமையின் வழிகாட்டல்களுடன், ஜேர்மனி அரசின் அதிகார மையத்தின் ஒவ்வொரு பகுதியும் ஜேர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பா முழுவதும் பெரும் படுகொலைகளை நடத்துவதில், ஏற்பாடுகள் செய்வதில் ஈடுபட்டு வந்தது.*

**ஹாலோகோஸ்ட் (Holocaust) இனப்படுகொலை:**

*இப் பெரும் இன அழிப்பு இரண்டாம் உலகப் போரில், **6** மில்லியன் ஐரோப்பிய யூதர்கள் ஜெர்மனியில் திட்டமிட்டுப் படு கொலை செய்யப்பட்ட நிகழ்வைக் ஹாலோகோஸ்ட் (Holocaust) என்று குறிப்பிடுவர்.*

*ஜேர்மனியில் ஆட்சியில் இருந்த, அடொல்ஃப் ஹிட்லரின் தலைமையிலான தேசிய சோசலிச ஜேர்மன் தொழிலாளர் கட்சியின் (நாஸி) இன அழிப்புக் கொள்கையின் ஒரு பகுதியாக இடம்பெற்றது. யூதர்கள் தவிர வேறும் பிற இனத்தவர்களும், படுகொலை செய்யப் பட்டனர்.*

*இவர்களுள், ஜிப்சிகள், சோவியத் ஒன்றியத்தவர்கள் மற்றும் சோவியத் போர் கைதிகள், பொதுவுடமைவாதிகள், சிலாவிய மக்கள், ஊனமுற்றோர், தன்னினச் சேர்க்கையாளர், அரசியல் எதிரிகள், மாறுபட்ட சமயக்கருத்துக் கொண்டவர்கள், யூஹோவா சாட்சியாளர் என்போரும் அடங்குவர். பல அறிஞர்கள் பெருமளவில் இந்த இன அழிப்பில் கொல்லப்பட்டனர். ஜேர்மன் அரசு இதனை "யூதர் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு" என வர்ணித்தது. நாஸி ஜேர்மனியில் இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட எல்லாப் பிரிவினரதும் மொத்தத் தொகை **9** தொடக்கம் **11** மில்லியன் வரை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.*

**ஆஸ்ச்விட்ஸ் வதைமுகாமில் 'தேர்வு'**

*மே- ஜூன் 1944 இல் ஆஸ்ச்விட்ஸ் வதைமுகாமில் யூத மக்களை கொல்ல "தேர்வு" நடைபெற்றது. வலப்பக்கம் உள்ளவர்கள் அடிமை வேலைக்கும், இடப்பக்கத்தில் உள்ளவர்கள் வாயு அறைக்கும் அனுப்பப்படும் ஒளிப்படங்கள் சாட்சியாக இன்றும் உள்ளன. ஜேர்மனியின் அரசினால் பல படிகளில் யூத படு கொலைகள் நிறைவேற்றப்பட்டன.*

*யூதர்களைக் குடிமக்கள் சமூகத்திலிருந்து விலக்கும் சட்டம் இரண்டாம் உலகப் போர் தொடங்குவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே இயற்றப்பட்டது. வதைமுகாம்கள் அமைக்கப்பட்டு, அங்கே கொண்டு வரப்படுபவர்கள் களைப்பாலும், நோயாலும் இறக்கும்வரை அடிமைகளாக வேலை வாங்கப்பட்டனர்.*

*கிழக்கு ஐரோப்பாவில் புதிய பகுதிகளைக் கைப்பற்றிய ஜெர்மனி, சிறப்புப் படையணிகள் மூலம், யூதர்களையும், அரசியல் எதிரிகளையும் கொன்று குவித்தது. யூதர்களும், ரோமாக்களும் நெருக்கடியான பகுதிகளில் அடைத்து வைக்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து புகையிரத தொடர்வண்டிகள் மூலம் நூற்றுக் கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த கொலை முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக் கொல்லப்பட்டனர்.*

**ஜெர்மனி ஒரு இனப்படுகொலை அரசு:**

*அக்கால ஜேர்மனியின் அதிகார அமைப்பின் ஒவ்வொரு பிரிவும் இக் கொலை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. ஜெர்மனி ஒரு இனப்படுகொலை அரசாக விளங்கியது என ஓர் வரலாற்று அறிஞர் குறிப்பிட்டார்.*

*இந்த நிகழ்வுகள் நாஸிகளால் அதன் நேச நாடுகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பகுதிகளிலும் நிகழ்ந்தது. பெரும் மனித உரிமை மீறல்களை நிகழ்த்தும் நோக்குடன் 42,500க்கும் மேற்பட்ட தடுப்பு முகாம் வசதிகள் பயன்படுத்தப்பட்டன. பெரும் இன அழிப்பு செயலில் ஈடுபட்டவர்களாக 200,000க்கும் அதிகமான நபர்கள் கணக்கிடப்பட்டுள்ளனர்.*

*1939 இல் போர் தொடங்கிய பிறகு ஜேர்மனிய மற்றும் வெளிநாட்டு யூதர்கள் போர்கால முகாம்களில் கூட்டம் கூட்டமாக*



அடைக்கப்பட்டனர். 1941 இல் ஜேர்மனி கிழக்கில் புதிய பகுதிகளைக் கைப்பற்றிய பிறகு எல்லா யூத எதிர்ப்பு செயல்களும் அதிகமாகியது.

சிறப்பு துணை இராணுவப் படையினர் ஓராண்டிற்குள் 2 மில்லியன் யூதர்கள் வரை பெரும் துப்பாக்கிச் சூடுகள் மூலம் படுகொலை செய்தனர்.

1942 இன் நடுப்பகுதியில், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்து தொடரூந்துகள் மூலம் வதை முகாம்களுக்கு கடத்தப் பட்டனர். பயணத்தின் கொடுமையைத் தாங்கி உயிர் பிழைத்தவர் கள் புகை அரங்குகளில் திட்டமிட்டு கொல்லப்பட்டனர். இக் கொடுமை ஐரோப்பாவில் 1945 ஏப்ரல் - மே யில் இரண்டாம் உலகப்போர் முடிவு வரை தொடர்ந்தது.

**வார்சா யூத வீரர்கள் கிளர்ச்சி :**

ஜெர்மனி அரசால் இனப்படுகொலை தொடர்ந்த போது, யூத இளைஞர்கள் தங்களின் கிளர்ச்சி ஆயுதப் படைக் குழுக்களை சிறிய அளவில் உருவாக்கினர்.

மிகக் குறிப்பிடத்தக்க வகையில் 1943 இன் வார்சா கிளர்ச்சி நிகழ்வு எழுந்தது. அதில் ஆயிரக்கணக்கான ஆயுதங்களை கொண்ட யூத வீரர்கள் வாபன் சுத்ஸ்டாபலை கரையில் நான்கு வாரங்களுக்கு ஜேர்மனிய படைகளை தடுத்து போரிட்டனர்.

20000 - 30000 யூத போராளிகள், கிழக்கு ஐரோப்பாவில்

நாஸி படைகளையும் அவர்களது கூட்டாளிகளையும் எதிர்த்து போரிட்டனர். அதே போல பிரஞ்சு யூதர்கள், பிரஞ்சில் நாஸி எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கெடுத்து நாஸி படைகள் மற்றும் விட்சி பிரஞ்சு அதிகாரத்திற்கெதிராக கொரில்லா போர் முறையில் போரிட்டனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆயுதம் தாங்கிய யூத கிளர்ச்சிகள் நடந்தன.

நீண்ட காலமாக யூதர்கள் சந்தித்த ஏமாற்றங்களும் துயரங் களும் எப்படியெல்லாம் அவர்களை உறுதியானவர்களாகவும், மிகுந்த தேசப் பற்றுள்ளவர்களாகவும் இன்று உலக அரங்கில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது என்பதை இஸ்ரேல் தேச உருவாக்கத்தின் மூலம் காணலாம்.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் சர்வதேச வர்த்தகத்தில் எழுபது விகிதம் யூதர்களின் கைவசம் உள்ளது. அதற்கு ஒப்பாக அழகுசாதன பொருட்கள் நாகரிக உடைகள், உணவுப் பொருட்கள் தயாரிப்பு, ஆயுதங்கள் உற்பத்தி என அனைத்திலும் யூதர்களின் பங்கு அதிகம் உள்ளது.

**இஸ்ரேல் தேச உருவாக்கம் :**

இரண்டாயிரம் ஆண்டுகளாக நாடின்றி தவித்த யூதர்களுக்கு, 1948 ஆம் ஆண்டு ஐ.நா.வின் அங்கீகாரத்துடன் அரபு முஸ்லிம்களின் எதிர்ப்பையும் மீறி பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் எனும் நாடு உரு வானது. அவர்களின் தீராக் கனவானது, தேசப்பற்றை வெளிக் கொணர்ந்தவர்களாக இன்று உலக அரங்கில் கொண்டுவந்து நிறுத்தி யுள்ளது என்பதை இஸ்ரேல் தேச உருவாக்கத்தின் மூலம் காணலாம்.

இஸ்ரேல் தேசம் உருவானபோது அங்கு யாரும் ஹிப்ரு மொழி பேசவில்லை. எனினும் தாய் மொழியின் அவசியம் கருதி அந்த மொழியினை மீட்டெடுக்க வேண்டிய தேவையிருந்ததனால் அனைத்து யூதர்களுக்கும் ஹிப்ரு மொழி கட்டாயமாக பயிற்று விக்கப்பட்டது.

உலகில் அதி கூர்மையான அறிஞர்களை படைத்த இனமாக யூத மக்கள் விளங்குகின்றனர். உலக நாடுகளில் இதுவரையில் 902 பேருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அதில் 203 பேர் யூதர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் மருத்துவத்துறையை சார்ந்தவர்கள் 56 அறிஞர்களும் உள்ளனர். அத்துடன் இயந்திரவிய



*லில் நோபல் பெற்றவர்கள் **55** யூத அறிஞர்களும், வேதியியலில் **36,** பொருளாதாரத்தில் **32,** இலக்கியத்தில் **15,** மற்றும் அமைதிக்கான நோபல் பரிசு **9** பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது.*

*ஏவுகணைகளை வழியிலேயே தடுத்து தாக்கியழிக்கும் தொழில்நுட்ப திறனை இஸ்ரேல் உருவாக்கி உள்ளது. இராணுவ தளபாடங்கள், போர் விமானங்கள், நுணுக்கமான இயந்திர தயாரிப்புகள் போன்றவற்றில் பல வளர்ந்த உலகநாடுகளுக்கு கடுமை யான போட்டியாக இஸ்ரேல் நாடு உள்ளது. உலகில் வல்லமை கொண்ட விமானப்படை உள்ள நாடுகளின் வரிசையில் அமெரிக்கா ரஸ்யா சீன ஆகிய நாடுகளுக்கு அடுத்த இடத்தில் இருப்பது இஸ்ரேல் என்பதும் யூதர்களுக்கு பெருமையே.*

*இன்றைய காலகட்டத்தில் அமெரிக்கா ஐரோப்பா கண்டங்களில் அதிஉயர் பதவிகளில் பாரிய எண்ணிக்கையில் இருப்பவர்கள் யூதர்கள் எனலாம். விஞ்ஞானம் சினிமா என எந்த துறையினை எடுத்துக்கொண்டாலும் யூதர்கள் முன்னிலையில் இருக்கின்றார்கள். பல நாடுகளின் பொருளாதர வளர்ச்சிக்கு யூத நிறுவனங்கள் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளன. யூத மக்களினதும், இஸ்ரேல் தேசத்தின் முக்கிய மூலதனம் அவர்களது திறன்சார் அறிவும் கடும் உழைப்பும்தான்.*

# 03

## 1973 யோம் கிப்பூர் போர்:

## தனித்து நின்று அரபு படைகளை வென்ற போர் !




*1967 ஆம் ஆண்டின் ஆறு நாள் அரபு- இஸ்ரேல் போரில் இஸ்ரேல் தீர்க்கமான வெற்றியை பெற்றது. அதன் பிறகு, சிரியாவிலிருந்து கோலன் ஹைட்ஸ், எகிப்திலிருந்து சினாய் தீபகற்ப பிரதேசங்களையும் இஸ்ரேல் கைப்பற்றியது.*

*ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, எகிப்து- சிரியா இணைந்து இரு நாடுகளும் இஸ்ரேல் மீது ஒருங்கிணைந்த தாக்குதலைத் தொடங்கின. 1973 யோம் கிப்பூர் போருக்குப் (Yom Kippur War) பிறகு இஸ்ரேல் மீதான கடந்த அக்டோபர் மாத ஹமாஸின் அதிரடித் தாக்குதலும் ஐம்பது வருடங்கள் கழித்து பண்டிகை காலத்திலேயே நடந்துள்ளது.*

*இது நான்காவது அரபு-இஸ்ரேல் போர் என்றும் அழைக்கப்படுகிறது. 1949, 1956 மற்றும் 1967 ஆகிய மூன்று போர்களுக்குப் பிறகு நடந்த யுத்தமாகும்.*

**யோம் கிப்பூர் 6 அக்டோபர் 1973:**

*அன்வர் சதாத் போட்ட திட்டத்தின்படி, யோம் கிப்பூர் அனுசரிப்புத் தினமான 6 அக்டோபர் 1973 அன்று எகிப்து, சிரியப் படைகள் முறையே சினாய் மற்றும் மேற்குக் கரைப்பகுதிகளை தாக்கின. இத்தாக்குதலுக்கு முன்பே இஸ்ரேலுக்கு இராணுவ உளவுப்படையின் தகவல் போய்ச் சேர்ந்திருந்தது.*

*திடீரென்று நிகழ்ந்த தாக்குதலை முதலில் எதிர்கொள்வது இஸ்ரேலுக்குக் கடினமாக இருந்தது. ஏராளமான உயிரிழப்புகள் நிகழ்ந்தன. நோன்பு அனுசரிப்புக்குச் சென்றிருந்த இஸ்ரேலிய படை அணியினர் உடனே திரும்ப அழைக்கப்பட்டனர். இம்முறையும் இஸ்ரேல் தான் இழந்த பகுதிகளை மீண்டும் கைப்பற்றிக்கொண்டது. அது மட்டுமின்றி இஸ்ரேலின் இராணுவ வலிமை மீண்டும் நிரூபிக்கப்பட்டது.*

*இப்போரின் போது அரபு படைகளில் 18,500 வீரர்கள் கொல்லப்பட்டனர்.*

*35,000காயமடைந்தும், 8,783 பேர் போர் கைதிகளாக இஸ்ரேலால் பிடிக்கப்பட்டனர். அத்துடன் 2,300 கவச தாங்கிகள் அழிக்கப்பட்டன. அரபு படைகளின் 514 வானூர்திகளும் அழிக்கப் பட்டு, 19 கடற் கலங்களும் மூழ்கடிக்கப்பட்டன.*

*இஸ்ரேலிய தரப்பில் 2,800 படையினர் மரணமானதுடன், 8,800 பேர் காயமடைந்தனர். அத்துடன் 293 இஸ்ரேலிய படையினர் போர் கைதிகளாக பிடிபட்டனர். 400 கவச தாங்கிகள் அழிக்கப்பட்டும் 102 வானூர்திகளும் அழிக்கப்பட்டன.*

**யோம் கிப்பூர் யூதர்களின் பண்டிகை:**

*யோம் கிப்பூர் என்பது யூதர்களின் முக்கிய பண்டிகையாகும். நீண்ட விரதங்களைப் பல நாட்களுக்கு அனுசரித்து பண்டிகை நாளில் காலை முதல் மாலை வரை வழிபாட்டிலும், தியானித்தலிலும் செலவிடுவர்.*




அப்படியொரு நாளில் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவது என்பது எகிப்து அன்வர் சதாத்தின் திட்டம். சதாத், நாசருக்குப் பிறகு அதிபர் ஆனவர். எகிப்து அரசரைப் பதவியை விட்டு நீக்கும் புரட்சியில் பங்கேற்றவர்.

பின்னர் இஸ்ரேலுடன் அமைதி உடன்படிக்கை செய்து கொண்ட முதல் அராபியத் தலைவர். இதன் காரணமாகவே சுட்டுக் கொல்லப்பட்டார்.

எகிப்து அன்வர் சதாத்தின் இப் போர் திட்டத்துக்குத் தனது சக அரபு நாடுகளையும் இணைத்துக்கொண்டார். முன் எப்போதும் இல்லாத வகையில் சவூதி அரேபியா உட்படப் பல நாடுகள் சதாத்தின் முயற்சிக்கு ஆதரவளித்தன.

**வல்லரசுகளின் ஆதரவு:**

அரபு நாடுகளுடனான செல்வாக்கைப் பெருக்கும் பொருட்டு சோவியத் ஒன்றியம் எகிப்துக்கும், சிரியாவுக்கும்

இராணுவ உதவிகளைச் செய்தது. உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டன. இஸ்ரேல் அமெரிக்க சார்பாக இருந்ததால் சோவியத் ஆதரவை அரபு நாடுகள் நாடத்துவங்கின.

மோஷே தயான் முன்னாள் இராணுவ தளபதி பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் இஸ்ரேல் 1967-ல் நடந்த போரில் கைப்பற்றிய பகுதிகளைத் தொடர்ந்து தக்க வைத்திருக்கும் என்றும் மேற்கு கரை யில் வசிக்கும் பாலஸ்தீனியர்கள் விரும்பினால் வேறு இடங்களுக்கு இடம் பெயரலாம் என்றும் சொன்னார். இதே மோஷே தயான் இஸ்ரேலுக்காகப் பல போர்க் களங்களைக் கண்டவர். பின்னாளில் பாதுகாப்புத் துறை அமைச்சராகவும் இருந்தார்.

இது ஏற்கனவே எரிச்சலில் இருந்த அராபிய நாடுகளை மேலும் கோபம் கொள்ளச் செய்தது. அன்வர் சதாத் இச்சந்தர்ப் பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டார். ஏற்கனவே இருந்த ஆதரவுடன் லிபியாவின் கடாபியும் சதாத்துக்கு ஆதரவளித்தார்.

லிபியா பிரான்ஸிடமிருந்து நவீன போர் விமானங்களை வாங்கியிருந்தது. நேரடியாகப் போர்க்களத்துக்கு வராவிட்டாலும் லிபியா தளபாடங்களை அளித்தது.

அமெரிக்கா இந்த நேரத்தில் பேண்டம் விமானங்களை இஸ்ரேலுக்கு அளித்தது. வலுவான இஸ்ரேல் தன்னைப் பாது காத்துக்கொள்ளும் என்று நம்பினார் அமெரிக்க அதிபர் நிக்சன். இஸ்ரேலின் விடுதலை பிரகடனக் கூட்டத்தில் பங்கேற்ற இரு பெண்மணிகளில் ஒருவரான கோல்டா மேயர் உலகின் இரண்டாம்



*பெண் பிரதமர். யோம் கிப்பூர் போரின் இழப்புகளுக்குப் பொறுப்பேற்றுப் பதவி விலகினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*இப்போரானது புனித ரமலான் மாத நோன்பும் அனுசரிக் கப்பட்டு வந்தது. அன்வர் சதாத் இதையும் கருத்தில் கொண்டிருந் தாலும், எதிர்பாராத தாக்குதல் அதுவும் அனைத்து நவீன இராணுவத் தளபாடங்களுடன் நிகழ்ந்த தாக்குதலால் இஸ்ரேல் முழுமையாக வீழும் என நினைத்தார்.*

*ஆனால் அது நிகழாதது மட்டுமல்ல, இஸ்ரேலை விரட்ட முடியவில்லை எனும் கோபத்தை நிரந்தரமாக அராபியர்கள் மத்தியில் நிலைக்க வைத்தார் என்ற குற்றச்சாட்டும் எழுந்தது.*

**அராபாத் – ஓஸ்லோ அமைதி உடன்படிக்கை**

*இந்த போரின் முடிவில் அதிருப்தி அடைந்த அராபாத்தின் விடுதலை இயக்கம் இனி அராபிய ஆட்சியாளர்களை நம்பிப் பயனில்லை என்று முடிவெடுத்து கொரில்லா தாக்குதலை அதிகரித்தது.*

*இந்த போரின் விளைவால் எகிப்து அதிபர் அன்வர் சதாத் இஸ்ரேலுடன் 1979இல் அமைதி உடன்படிக்கை செய்து கொண்டார். இதன் மூலம் இஸ்ரேல் தனது கட்டுப்பாட்டிலிருந்த சினாய் பிரதேசத்தை எகிப்திடம் மீண்டும் அளித்தது. பின்னர் 1993, செப்டம்பரில் பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அராபாத்தும் அன்றைய இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ரபினும் ஓஸ்லோ நகரில் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.*

*யாசிர் அராபாத்தும் இஸ்ரேலை அங்கீகரிப்பதாகவும், தனது இயக்கம் வன்முறைப்பாதையைக் கைவிடுவதாகவும் இந்த ஓஸ்லோ உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். அத்துடன் பாலஸ்தீன விடுதலை இயக்கம் பொதுவாக பாலஸ்தீன மக்களின் குரலைப் அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தும் அமைப்பாக ஐ.நாவினால் அங்கீகரிக்கப்பட்டது.*

*பாலஸ்தீன உடன்படிக்கைக்குப் பிறகு இஸ்ரேல் பிரதமர் யிட்சாக் ரபீன் சுட்டுக்கொல்லப்பட்டார். பாலஸ்தீனர்களுக்கு சலுகை காட்டுவதாக யூத வெறியர் ஒருவர் கருதியதால் அவர் கொல்லப்பட்டார். அதற்கு முன்னர் அராபாத்துக்கும் ரபீனுக்கும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டதும் அறிந்ததே.*

# 04

## ஒப்பரேஷன் என்டபே அதிரடி மீட்பு: பாலஸ்தீன போரில் பிணைக் கைதிகள் விவகாரம்



*காசா போரை தற்காலிகமாக நிறுத்துவதற்கு கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் இணக்கம் காணப்பட்டுள்ளதாக இஸ்ரேல் - ஹமாஸ் இடையில் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.*

### பிணைக் கைதிகள் விடுதலை ?

*ஹமாஸ் அமைப்பால் பிணைக் கைதிகளாகப் பிடிக்கப் பட்டுள்ள இஸ்ரேலிய பொதுமக்களில் ஐம்பது பேர் நான்கு நாட்களுக்குள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் இக்காலக்கட்டத்தில் போர் தற்காலிகமாக நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்*

*பட்டுள்ளது.*

*நான்கு நாள் சண்டை நிறுத்த ஒப்பந்தம் போரை முழுமை யாக முடிவுக்கு கொண்டுவர வழிவகுக்கும் என்று கத்தார் பிரதமர் முகமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசிம் அல்தானி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் மேலும் பிணைக்கைதிகளை விடுவித்து, முழுமையான போரைத் தடுக்க முடியுமா என்பதனை இனிவரும் நாட்களிலே தான் பார்க்க முடியும்.*

**யோம் கிப்பூர் போருக்குப் பின் இழப்பு:**

*ஹமாஸ் வசமுள்ள பிணைக்கைதிகள், உலகின் மிக அதிக மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒன்றான காசா பகுதியில் உள்ள ஹமாஸ் மறைவிடங்களில் வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.*

*இவர்களை மீட்க ஹமாஸுக்கு எதிராகப் போரிடுவதற்காக இஸ்ரேல் இராணுவத்திலிருந்து வெளியேறிய சுமார் 300,000 பேர் மீண்டும் இணைந்துள்ளனர் என இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.*

*கடந்த அக்டோபர் 7இல் பல இஸ்ரேலிய பொதுமக்கள் பணயக் கைதிகளாக எல்லையைத் தாண்டி காசாவிற்குள் கொண்டு செல்லப்பட்டனர். ஹமாஸின் தரை, வான் மற்றும் கடல்வழி தாக்குதல்களில் பொதுமக்கள், ராணுவத்தினர் என குறைந்தது 1500 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அரசு உறுதிப் படுத்தியது. 2,000க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.*

*யோம் கிப்பூர் போருக்குப் பிறகு இஸ்ரேலில் நடந்த பாரிய இழப்பாகும்.*

*இஸ்ரேலும் அமெரிக்காவும் பிணைக்கைதிகளை விடுவிக்க தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதாக சபதம் செய்தன. தற்போது காசா பகுதியில் ஹமாஸுக்கு எதிரான தரை வழி தாக்குதல் தீவிரம் அடைந்து ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் கொல்லப் பட்டுள்ளனர்.*




**ஜெர்மனி முயுனிச் ஒலிம்பிக்ஸ் பணய விவகாரம்:**

*பாலஸ்தீன விடுதலை அமைப்புகள் இஸ்ரேலின் மீது நீண்ட காலமாக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. குண்டு வைப்பது, ராக்கெட்டை ஏவி தாக்குவது என அனைத்தையும் கையாண்டன. இஸ்ரேல் எதற்கும் சளைக்கவில்லை. பாலஸ்தீன அமைப்புகளின் தீவிரவாத தாக்குதல்களை திறம்பட எதிர்கொண்டது. உலகிலேயே சிறந்த உளவுப்படை எதுவென்றால் அது இஸ்ரேல் நாட்டின் மொசாட் என நீண்ட காலமாக விளங்கியது.*

*பாலஸ்தீன அமைப்புகளால் வெளி நாடுகளிலும் இஸ்ரேலியர்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.*

*1972 ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் முயுனிச் (*Munich*) நகரத்தில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை* Black September *என்ற பாலஸ்தீனிய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் பணயமாக பிடித்து பின்னர் கொல்லப்பட்டனர்.*

*இதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய உளவு நிறுவனம் ஒலிம்பிக் வீரர்களைக் கொன்ற 11 பாலஸ்தீன தீவிரவாதிகளை உலகம் முழுவதும் சுமார் 20 ஆண்டுகள் தேடி வேட்டையாடிக் கொன்றது. முயுனிச் சம்பவத்தையும் அதன் தொடர்ச்சியாக தீவிரவாதிகளை இஸ்ரேல் இராணுவம் வேட்டையாடுவதையும் மையமாக வைத்து ஸ்டீபன் ஸ்பீல்பர்க் "முயுனிச்" என்ற பெயரில் திரைப்படம் எடுத்து 2005 ஆம் ஆண்டு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.*

**ஏர் பிரான்ஸ் விமான கடத்தல்:**

*1976 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 27இல் இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவ்விலிருந்து பிரான்ஸ் நாட்டின் தலை நகரான பாரிஸ் நகருக்குச் சென்று கொண்டிருந்த ஏர் பிரான்ஸ் விமானம் ஏதன்ஸ் நகரில் தரை இறங்கிய போது, பாப்புலர் ஃப்ரண்ட்* (PFLP) *என்ற பாலஸ்தீனிய அமைப்பைச் சேர்ந்தவர்களும், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பும் சேர்ந்து விமானத்தைக் கடத்தினார்கள்.*

*கடத்தப்பட்ட விமானம் உகண்டா நாட்டில் உள்ள என்டபே விமானத் தளத்திற்கு கடத்திச் செல்லப்பட்டது. விமானத்தில் 304 பயணிகள் மற்றும் 12 சிப்பந்திகள் உட்பட 316 பேர் பயணம் செய்தனர்.*

*இஸ்ரேலிய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்ட பாலஸ்தீன அமைப்பின் கோரிக்கையாக இஸ்ரேலில் உள்ள 40 போராளிகளையும், கென்யா நாட்டில் உள்ள 13 போராளிகளையும் விடுதலை செய்யவேண்டும். இஸ்ரேலிலிருந்து எண்டபே நகரம் சுமார் 4000 கி.மீ தொலைவில் இருந்தது. இஸ்ரேல் உடனடியாக மீட்கும் காரியத்தில் இறங்கியது.*

**ஒபரேஷன் தண்டர்போல்ட்** – Operation Thunderbolt:

*கடத்தப்பட்டவர்களை மீட்க இஸ்ரேலில் ஆபரேஷன் தண்டர்போல்ட்க்கு* (Operation Thunderbolt) *ஏற்பாடுகள் நடந்தன. ஜூலை 3 ஆம் தேதி இரவு, நான்கு கனரக விமானங்கள் (ஹெர்குளிஸ் சி 130) தயாராகின. உருவில் பெரியதாக இருக்கக்கூடிய விமானங்கள். 100 இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் விமானங்களில் ஏறிக்கொண்டனர். இராணுவத் தளபாடங்களும், ஆயுதங்களும் ஏற்றப்பட்டன. மருத்துவர்களும், செவிலியர்களும் ஏற்றப்பட்டனர்.*

*விமானங்கள் எண்டபேக்குக்கான 4000 கி.மீ பயணத்தை தொடங்கின. கடல் மார்க்கமாகவே விமானங்கள் பறந்தன.*

*ஆபிரிக்கா கண்டத்தில் மற்ற நாடுகளின் அருகாமையில் பறக்கும்போது, அவர்களின் ரேடர்களின் பார்வையில் பட்டு விட்டால் விபரீதம் தான். அதனால் ரேடர்களின் பார்வையில் படாமல் இருப்பதற்காக நூறு அடி உயரத்திற்குக் குறைவான உயரத்தில்தான் இஸ்ரேலிய விமானங்கள் பறந்தன.*



இந்த நீண்ட பயணத்தில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. அதாவது விமானங்களுக்கு எரிவாயு தேவைப்படும். போகும் வழியில் விமானங்களுக்கு எரிவாயு நிரப்பப்படவேண்டும். இல்லை யென்றால் இந்த மீட்பு முயற்சி தோல்வியில் முடியும். இஸ்ரேல் அரசாங்கம், கென்யா அரசாங்கத்தின் உதவியை நாடியது. கென்யா அரசாங்கம் எரிவாயு நிரப்ப ஒப்புக்கொண்டது. இதற்காக கென்யா அரசாங்கம் பின்னாளில் பல பின்விளைவுகளை சந்தித்தது.

தொலைதூர பயணத்தின் பின் நான்கு விமானங்களும் எண்டபே விமான நிலையத்தில் சத்தமில்லாமல் தரை இறங்கின. விமானத்திலிருந்து இராணுவ பீரங்கிகள் மற்றும் ஜீப்புகளுடன் இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் இறங்கினர். திடீர் அதிரடியால் பணயக் கைதிகளை விடுவித்து இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் கூட்டிச் செல்லும் வழியில், தீவிரவாதிகள் எதிர்தாக்குதலில் ஈடுபட்டனர்.

அவர்களுடன் உகாண்டா இராணுவமும் சேர்ந்துகொண்டு, மீட்புக் குழுவினருக்கும், தீவிரவாதிகளுக்கும், உகாண்டா இராணுவ வீரர்களுக்கும் நடந்த இந்தச் சண்டையில் மேலும் இரண்டு பணயக் கைதிகளும் ஒரு இஸ்ரேலிய தளபதியான யோனாதன் நேத்தன் யாஹூம் கொல்லப்பட்டனர்.

**பிரதமர் நேத்தன்யாஹூவின் அண்ணன் களப்பலி:**

இவர் வேறுயாரும் அல்ல, இன்றைய இஸ்ரேலின் பிரதம

மந்திரியான பெஞ்சமின் நேத்தன்யாஹூவின் தமையனார். கடத்தல்காரர்கள் தரப்பில் அனைத்து கடத்தல்காரர்களும் உயிரிழந்தனர். உகண்டா இராணுவத்தைச் சேர்ந்த 40 வீரர்களும் நடந்த சண்டையில் கொல்லப்பட்டனர். மீட்பு முயற்சி சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்றது.

ஏனைய பணயக் கைதிகளும், இஸ்ரேலிய இராணுவ வீரர்களும் இஸ்ரேல் நாடு திரும்பினர்.

ஒபரேஷன் தண்டர்போல்ட் வெற்றிகரமான நடவடிக்கை யாவும் "90 Minutes at Entebee" என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. இந்தச் சம்பவங்களை வைத்து ஹாலிவுட்டில் பல திரைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில் The Delta Force எனும் படம் குறிப்பிடத்தக்கது.

நீண்ட கால இராணுவ வெற்றிகளை கண்ட இஸ்ரேலிய இராணுவம், தற்போதய காசா போரில் தரைவழி முன்னேற்றம் அடைந்தாலும், பிணைக் கைதிகளை இன்னமும் விடுவிக்கவில்லை. ஆயினும் போர் நிறுத்தத்திற்கு தொடர்ந்து இஸ்ரேல் மறுத்து வந்த நிலையில், பிணைக் கைதிகளின் உறவினர்கள் மற்றும் மக்கள் போராட்டம், இஸ்ரேலின் முடிவை மறுபரிசீலனை செய்ய வைத்துள்ளது. இதன்பிறகு

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஒப்பந்த மானது நான்கு நாள் போர் நிறுத்தம் மற்றும் பணயக் கைதிகள் விடுதலையை உள்ளடக்கிய உடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது.

# 05

## காசா போரில் இஸ்ரேல் கற்கும் பாடம் : ஈராக் – ஆப்கான் போரில் அமெரிக்க படிப்பினைகள் !



*2005 இல் காசாவில் இருந்து இஸ்ரேல் வெளியேறியதில் இருந்து, இதுவரை நான்கு பெரிய மோதல்களைக் கண்டுள்ளது. 2008, 2014, 2021 மீண்டும் இப்போதைய 2023 காசா சண்டையை இரண்டாம் உலகப் போருக்கு ஒப்பிட்டு எதிர்நோக்குவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.*

*தற்போதைய போரில் ஹமாஸை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நீண்ட முரண்பாடுகளை இஸ்ரேல் எதிர்கொள்கிறது. போரில் வெற்றியடைந்தாலும் அது கடினமான சங்கடத்தை வருங் காலத்தில் எதிர்கொள்ளும் எனவும், மேலும் இந்த அவசரமான போரிலிருந்து பல அபாயம் உள்ளது என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.*



அமெரிக்கா ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் மீது படை யெடுத்து, இறுதியில் அதன் உள்நாட்டு அரசாங்கங்களை மீண்டும் கட்டமைக்க முயன்றபோது பலத்த சிக்கலில் சிக்கியது. இஸ்ரேலியர் களுக்கு இங்கே இதே போன்ற பிரச்சனை உள்ளது என்று இராணுவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

**ஹமாஸை முடிவுக்குக் கொண்டு வருதல்:**

இஸ்ரேல் ஹமாஸை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டு வந்து, அதில் வெற்றி பெற்றாலும், அதன் காசாவில் தலைமைத்து வத்தை மாற்றியமைப்பது மற்றும் காஸாவில் பாலஸ்தீனியர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை பிரதிநிதித்துவப் படுத்துவது என்பதை தெளிவாக இஸ்ரேல் வெளிப்படுத்தத் தவறியுள்ளது.

ஆயினும் பல இஸ்ரேலியர்கள் ஹமாஸை முடிவுக்குக் கொண்டு வருவதைப் பற்றி நினைப்பதற்கு அப்பால், காசாவில் ஒரு நிச்சயமற்ற எதிர்காலம் உள்ளது என்பதை அறிகின்றனர்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க நடவடிக்கை யின் படையெடுப்பு என்பது நீண்டகாலமாக திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் காசா போர் அவசரமான இஸ்ரேலின் போர் வெற்றிக்கு இராணுவ மூலோபாயத்தில் இராணுவ வல்லுநர்கள் தவறிழைத்ததாக கூறுகின்றனர்.

உண்மையில் 9/11 மற்றும் அதைத் தொடர்ந்து நடந்த போர்களில் இருந்து மிக முக்கியமான படிப்பினைகளை பலர் கற்க மறந்து விட்டனர். சண்டை முடிந்தவுடன் காசாவில் யாரிடம் பாதுகாப்பை வழங்கப் போகிறார்கள் என்பது இஸ்ரேலிடம் உள்ள

*மிகப்பெரும் கேள்வியாகும்.*

*குறைந்தது **1,400** பேரைக் கொன்று, ஆயிரக்கணக்கானவர்களைக் காயப்படுத்தி, குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட **200**க்கும் மேற்பட்ட பணயக்கைதிகளைக் கைப்பற்றிய ஹமாஸ் இஸ்ரேலில் அதன் தாக்குதல்களை நடத்திய பின் - இஸ்ரேல் உலக அழிவுப் போர்களை எதிரொலிக்கும் வகையில் காஸாவில் ஒரு முழுமையான போரை கட்டவிழ்த்துள்ளது.*

**காசா இராணுவ மயமாக்கல் :**

*இப்போரில் பல மசூதிகள் இடிக்கப்பட்டன. சாலைகள் உடைந்தன. அகதிகள் மையங்கள் இடிந்து விழுந்தன. மருத்துவ மனைகள் இருளில் மூழ்கி, போதிய தண்ணீர் கிடைக்காமல் பொதுமக்கள் சிரமப்படுகின்றனர்.*

*இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் பாலஸ்தீன சிவிலியன் இலக்குகள் மீது அதிக பலத்துடன் தாக்குவதால், ஆயிரக்கணக்கான அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.*

*காசாவில் மிஞ்சியுள்ள ஒவ்வொரு ஹமாஸ் போராளிகளையும் அழித்து வரும் நிலையில், இஸ்ரேலின் விமானப் படை அந்த பகுதிக்கு எதிராக இடைவிடாத குண்டுவீச்சை நடாத்துகிறது.*

*ஹமாஸை முழுவதுமாக அழிப்பதே அவர்களின் நோக்கம் என்பதில் இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் தெளிவாக உள்ளனர். ஆயினும் அதன் பின்னர் காசாவை யார் வழிநடத்துவார்கள் என்பது எவருக்கும் தெளிவாகத் தெரியவில்லை.*

*அண்மையில் பிரதமர் நெதன்யாகு தன் ஆலோசகர்கள் மத்தியில் பேசுகையில் இஸ்ரேலிய துருப்புக்கள் ஹமாசை அழித்து, குறைந்தபட்சம் இராணுவமயமாக்கப்படும் வரை காசாவில் இருக்கும் என்று பரிந்துரைத்தார். இந்த செயல்முறை பல மாதங்கள் ஆகலாம் என்பதுடன், பாலஸ்தீன பொது மக்களால் ஆரம்பிக்கப்படும் கிளர்ச்சியை அவர்கள் எதிர்கொள்ளவும் கூடும்.*

*இஸ்ரேல் எவ்வளவு காலத்திற்கு காசாப் பகுதியை மீண்டும் ஆக்கிரமிக்கும் அல்லது இறுதியில் அவர்கள் அதை அமைதி காக்கும் படை அல்லது வேறு அதிகாரத்திற்கு மாற்றுவார்களா என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை.*



**ஈராக் - ஆப்கான் அமெரிக்கப் போர் படிப்பினைகள்:**

*இஸ்ரேல் படைகள்(IDF) தனது ஹமாஸ் போரில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் போர்களில் இருந்து படிப்பினைகளை எடுத்துக்கொள்கிறதா என்பது குறித்து கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டது.*

*2003இல் ஈராக்கை ஆக்கிரமிப்பதன் விளைவுகள் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் கொலின் பவல் ஜனாதிபதி ஜார்ஜ் டபிள்யூ புஷ்ஷை தனிப்பட்ட முறையில் எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது.*

*இப்போரில் தெளிவற்ற வழிகாட்டலால் இஸ்ரேலுக்கு ஒரு பிரச்சனையாக உள்ளது. ஏனெனில் போரின் இலக்குகள் என்ன என்பதை அவர்களால் வெளிப்படுத்த முடியவில்லை.*

*2005 இல் காசாவில் இருந்து இஸ்ரேல் வெளியேறியதில் இருந்து, இதுவரை நான்கு பெரிய மோதல்களைக் கொண்டுள்ளது: 2008, 2014, 2021 மீண்டும் இப்போது 2023. உண்மையில் ஹமாஸ் கட்டுப்பாட்டில் உள்ள காஸாவை நோக்கிய இஸ்ரேலின் மூலோபாயம் "புல் வெட்டுதல்" (lawn mowing) என்று இராணுவ வல்லுநர்களால் விவரிக்கப்படுகிறது.*

*புவியியல் காரணங்களால் இஸ்ரேலியர்கள் உண்மையில் காசாவில் தொடர்ந்து நிலைத்து நிற்க முடியாது என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.*

**ஹமாஸுடனான நவீன நகர்ப்புற போர்கள்:**

*ஹமாஸுடனான இஸ்ரேலின் போர் இன்னும் ஆரம்ப கட்டத்தில் உள்ளது. ஆனால் நவீன நகர்ப்புற போர்கள் காசாவில் பாரிய அளவில் ஆரம்பிக்கப்படவில்லை.*

*2014 இல் இஸ்லாமிய அரசை* (ISIS) *வேரோடு பிடுங்குவதற்கான அதன் போராட்டத்தில் ஈராக் அரசாங்கக் கூட்டணியால் ஈராக்கின் மொசூல் நகரின் நீண்ட ஒன்பது மாத முற்றுகை போரில் 11,000 பொதுமக்கள் வரை கொல்லப்பட்டனர்.*

*2004 இல் ஈராக்கின் வலூஜாவில்* (Fallujah Battle) *இருந்து சதாமுக்கு ஆதரவான சுனி கிளர்ச்சியாளர்களை அழிக்க அமெரிக்கா இராணுவம் ஆறு வாரங்களில் சுமார் 2800 பொதுமக்களைக் கொன்றது.*

*இதற்கு நேர்மாறாக, ஒரு மாத காலத்திற்குள், காசாவில் போர் ஏற்கனவே 14800 பேரின் வாழ்க்கையை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது. அவர்களில் 41% பேர் குழந்தைகள் என்று காசாவில் உள்ள சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.*

*இந்த இறப்புகளில் பெரும்பாலானவை இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல்களால் நிகழ்கின்றன. மேலும் நூறாயிரக்கணக்கான பொதுமக்கள் வசிப்பதாக நம்பப்படும் காசா நகரில் 30,000 ஹமாஸ் போராளிகளை தாக்குவதற்கு இஸ்ரேலிய துருப்புக்கள் நகரும் போது இறப்பு எண்ணிக்கை நிச்சயமாக ஏறும்.*

**விருப்பமான போர் அல்ல :**

*இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் என்பது இஸ்ரேலுக்கு விருப்பமான போர் அல்ல எனவும் கூறப்படுகிறது. அக்டோபர் 7 தாக்குதல்களை தடுக்க, காசா மீதான ஹமாஸின் கட்டுப்பாட்டை ஒடுக்க இஸ்ரேலியர்கள் ஒருவித நடவடிக்கை எடுப்பது அவசியமானது என்றும்,*

*இஸ்ரேலியத் தலைவர்கள் தங்கள் ஹமாஸ் சண்டையை இரண்டாம் உலகப் போருடன் நேரடியாக ஒப்பிட்டுள்ளனர். பிரதமர் நெதன்யாகு அக்டோபர் 7 பயங்கரவாத தாக்குதல்களை 1941 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போருக்குள் அமெரிக்காவை இழுத்த பேர்ல் ஹார்பர் குண்டுவெடிப்புடன் ஒப்பிட்டுள்ளார்.*

*ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானுடன் அமெரிக்கா எதிர் கொள்ளாத புவியியல் சவால்களை காஸாவில் இஸ்ரேல் எதிர் கொள்கிறது. இறுதியில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளியேறியது அறிந்ததே.*

*அக்டோபர் மாதத்தின் பிற்பகுதியில் பிரதமர் நெதன்யாகு ஆற்றிய உரையில், 1945 ஆம் ஆண்டு போரின் முடிவில் பிரிட்டிஷ் குண்டுவீச்சு நடவடிக்கையை அவர் சுட்டிக்காட்டினார். ஆங்கிலேய விமானப்படை திட்டமிட்ட இலக்கைத் தவறவிட்டு பள்ளியைத் தாக்கியது. ஹமாஸ் இலக்குகளுக்கு எதிரான தாக்குதல்களின் விளைவாக பொதுமக்கள் கொல்லப்பட்டால் அதை நியாயப்படுத்த நெதன்யாகு இரண்டாம் உலகப் போரில் மேற்கத்திய இராணுவ நடவடிக்கைகளை ஒப்பிடுகிறார்.*

*அது போர்க்குற்றம் அல்ல என்றும் இஸ்ரேல் பிரதமர் வாதிடுகின்றார்.*

*இரண்டாம் உலகப் போரில் 45 மில்லியன் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதன் பின்னரே போர் பிராந்தியங் களில் பொதுமக்களுக்கான பாதுகாப்புகளை நிவர்த்தி செய்ய ஐநாவால் புதிய ஜெனிவா கோட்பாட்டை உருவாக்க வழிவகுத்தது.*

**பாலஸ்தீனியர்களுக்கு விரும்புவதைக் கொடுக்க வேண்டும்**

*அக்டோபர் 7 தாக்குதலுக்குப் பிறகு ஹமாஸுக்கு எதிரான போரில் இஸ்ரேல் வெற்றியடையலாம்.*


*இஸ்ரேல் இந்த முரண்பாடுகளை முறியடித்து, ஹமாஸை அழித்து போரின் நீண்டகால வெற்றி என்பது அமைதியான எதிர் காலத்தை உருவாக்க விரும்பும் பாலஸ்தீனியர்களுக்கு அதிகாரம் அளிப்பதிலேயே தங்கி உள்ளது.*

*பாலஸ்தீனியர்களுக்கு அவர்கள் விரும்புவதைக் கொடுக்க இஸ்ரேல் தயாராக இருக்க வேண்டும். நிச்சயமாக இஸ்ரேலின் இருப்பு என்பது, மேற்குக் கரையிலும் காஸாவிலும் ஒரு நட்புள்ள அரசை உருவாக்க வேண்டும் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.*

*இது சாத்தியமா எனும் கேள்விகளுக்கு அப்பால், இஸ்ரேலியர்கள் ஆக குறைந்தளவு அதிகாரத்தை பாலஸ்தீனியர் களுக்கு கொடுக்காவிடின், எதிர்காலத்தில் இது போன்ற போரும், வன்முறைகளும் தொடர்ந்து நிகழ சாத்தியங்கள் அதிகமாகும்.*

# 06

## சுரங்க பாதையை அழிக்க நுரை குண்டுவீச்சு திட்டம் : காசாவில் ஹமாஸின் முதுகெலும்பு உடைக்கப்படுமா ?




உலகை வியப்புக்குள்ளாக்கிய ஹமாஸின் ரகசிய சுரங்க போர்முறை (Secret Tunnel Warfare) பற்றி தற்போது தகவல்கள் பல வெளியாகின்றன. ஹமாஸ் அமைத்த ரகசிய சுரங்க நகரம் 260 அடி ஆழமாகவும் 500 கி.மீ. தொலைவுக்கு நீள்கிறது என தெரிவிக்கப்படுகிறது.

காசா பகுதியின் முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டு உள்ளன என்றும்,இதில் பல்வேறு சுரங்க பாதைகள் எகிப்து வரை நீள்கின்றன என அமெரிக்க, இஸ்ரேலிய உளவுத் துறை வட்டாரங்கள் கூறியுள்ளன.

2021ம் ஆண்டில் ஹமாஸின் 100 கிலோமீட்டர் நீளம்

கொண்ட சுரங்கத்தை தாங்கள் அழித்துவிட்டோம் என இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது. இந்த ஆக்கம் ஹமாஸின் சுரங்கம் பற்றி அலசும் சிறிய வரலாற்றாய்வாகும்.

**சுரங்கத்தில் ஆயுத கிடங்குகள்:**

இந்த சுரங்கப் பாதைக்குள் பிரம்மாண்ட தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில்தான் இஸ்ரேலிய பிணைக் கைதிகள் அடைக்கப்பட்டு உள்ளனர் எனவும் கூறப்படுகிறது. இதனால் சுரங்கப் பாதை என்று கூறுவதைவிட சுரங்க நகரம் என்றே அழைக்கலாம்.

தரவுகளின் படி ஹமாஸ் போராளிகளின் ஆயுத கிடங்கு களும் சுரங்கப் பாதையில் உள்ளன. அவற்றில் ஆயிரக்கணக்கான ஏவுகணைகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான சுரங்கப் பாதைகள் சிலந்தி வலை பின்னல் போல கட்டப்பட்டு உள்ளன. இந்த பாதைகள் எங்கு தொடங்கி, எங்கு முடிகிறது என்பது ஹமாஸ் அமைப்பினர்க்கு மட்டுமே தெரியும். வீடுகள், மசூதிகளில் சுரங்கப் பாதைகளின் நுழைவு வாயில்கள் உள்ளன.

ஹமாஸ் தலைமைஅலுவலகமும் சுரங்க நகரத்தில் செயல்படு கிறது. சிறிய மருத்துவமனை, மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஜெனரேட்டர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் சுரங்க நகரத்தில் இருக்கின்றன. முன்பு இஸ்ரேல் ராணுவ நடவடிக்கையால் காசா பகுதிக்கான அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் முழுமையாக தடைபட்டிருக்கிறது. ஆனால் ரகசிய சுரங்கப் பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து காசாவுக்கு குடிநீர், உணவு, எரிபொருள், ஆயுதங்கள் உள்ளிட்டவை தொடர்ந்து கடத்தி வரப்படுகின்றன. இதன் காரணமாகவே ஹமாஸ் அமைப்பால் தொடர்ந்து போரில் ஈடுபட முடிகிறது.

மெக்ஸிகோவில் இருந்து அமெரிக்காவுக்கு சுரங்கப் பாதை வழியாக போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன. இந்த சுரங்கப் பாதைகளை அமைக்கவும் ஹமாஸ் தீவிரவாதிகளே உதவி செய்துள்ளனர் என அமெரிக்க, இஸ்ரேலிய உளவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒருகாலத்தில் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட சுரங்கங்கள் தற்போது கட்டுப்பாட்டு அறை, போர் ஆலோசனைகள்,



ஆயுத கிடங்கு போன்றவற்றுக்காக பயன்படுத்தப்படும் அதிநவீன சுரங்கமாக மாறியிருக்கிறது.

இத்தனை ரகசியங்களை வைத்திருக்கும் ஹமாஸின் சுரங்கப்பாதை உண்மையில் எவ்வளவு நீளம், அகலம் போன்றவை எல்லாம் சர்வதேச உளவு அமைப்பிற்கே தெரியாத புதிராக இருந்து வருகிறது.

**சுரங்க பாதையை அடைக்க நுரை குண்டுகள்:**

காசா பகுதியில் ஹமாஸ் தொடர்புடைய இடங்களில் தற்போது இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தி வருகின்றன. தற்போது காசா பகுதியில் தரைவழியாக தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரப் படுத்தியுள்ளது.

ஹமாஸின் சுரங்கப் பாதைகள் இஸ்ரேலுக்கு பெரும் சவாலாக இருப்பதனால், இந்த சவாலை எதிர்கொள்ள நுரை குண்டுகளை இஸ்ரேல் தயார் செய்துள்ளது. இந்த குண்டுகளில் வெடிபொருட்கள் கிடையாது. அதற்குப் பதிலாக பல்வேறு வகையான இரசாயனங்கள் உள்ளன.

ஹமாஸின் சுரங்கப் பாதையை கண்டுபிடித்து உடன் அதன் நுழைவு வாயில்களில் நுரை குண்டுகள் வீசப்படும். இந்த குண்டுகளில் இருந்து நுரை வெளியாகி சுரங்கப் பாதைகளை முழுமையாக அடைத்துவிடும். சுரங்கப் பாதைக்குள் இருக்கும்

*ஹமாஸ் போராளிகளால் வெளியேற முடியாது.*

*அவர்களால் எதிர் தாக்குதல் நடத்தவும் முடியாது. சுரங்கத்துக்குள்ளேயே அவர்கள் மரணிக்கும் சூழல் ஏற்படும் என இஸ்ரேல் கணிப்பிட்டுள்ளது.*

**ஹமாஸ் முதுகெலும்பு முறிக்கப்படுமா?**

*ஹமாஸின் சுரங்க நகரத்தை அழிக்க மற்றொரு திட்டத்தையும் ஆலோசித்து வருவதாக இஸ்ரேல் கூறியுள்ளது.*

*மத்திய தரைக்கடல் பகுதியில் இருந்து மோட்டார் பம்புகள் மூலம் ஹமாஸின் சுரங்க பாதைகளில் தண்ணீரை செலுத்த இஸ்ரேல் திட்டமிட்டுள்ளது.*

*சுரங்க நகரம் தண்ணீரில் மூழ்கினால் ஹமாஸின் முதுகெலும்பு உடைந்துவிடும் என இஸ்ரேலிய ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.*

**260 அடி ஆழ 500 கி.மீ. நீள சுரங்க பாதை:**

*தற்போது இஸ்ரேல் பாலஸ்தீனம் இடையேயான போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வரும் நிலையில், ஹமாஸ் படைக் குழுவின் சுரங்கம் சிறிது சிறிதாக இஸ்ரேலால் தகர்க்கப்படுவது தொடர்பான தகவல்கள் வெளியாகி உள்ளன.*

*வான்வழி தாக்குதல், கடல்வழி தாக்குதல், தரைவழி தாக்குதல் என்று கேள்விப் பட்டிருந்தாலும், நிலக்கீழ் தாக்குதல் அதாவது சுரங்கம் மூலம் தாக்குதல் நடத்துவது எதிரி படையை துவம்சம் செய்யும் யுத்தியாக இருக்கும் என்றும் முதலில் எதிர் பார்க்கப்பட்டது.*

**காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்**


*ஹமாஸ் கடந்த 7-ம் தேதி இஸ்ரேல் ராணுவம் மீது போர் தொடுத்தது. பின்னர் இருதரப்புக்கும் இடையிலான போர் தீவிரமடைந்து வருகிறது. ஹமாஸ் அமைப்பின் தாக்குதலைத் தொடர்ந்து, காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஒரு மாதத்தைக் கடந்துள்ளது.*

வடக்கு காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், 4,000-க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 12,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக பாலஸ்தீன சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் வான் வழி தாக்குதலில் காசா பகுதியில் சுமார் 40 சதவீத கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு உள்ளன. காசாவுக் கான குடிநீர், உணவு பொருட்கள், மின்சாரம், எரிபொருள் விநியோகம் முழுமையாக துண்டிக்கப்பட்டு உள்ளது.

காசாவில் பொதுமக்களின் கட்டடங்கள், வழிபாட்டு தலங்கள், கல்வி நிலையங்களை இஸ்ரேல் குறிவைத்து தாக்குகிறது என்ற குற்றச்சாட்டு எழும் நிலையில், இதற்கு கீழ்தான் ஹமாஸின் சுரங்கம் இருக்கிறது என்றும், அதைத்தான் தாக்குகிறோம் என்று வாதிடுகிறது இஸ்ரேலிய படை.

அல் - குத் மருத்துவமனை மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில், கடும் சேதம் ஏற்பட்டுள்ளதால், அந்த மருத்துவ சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக நிர்வாகம் அறிவித்துள்ளது. மருத்துவமனை கள் மீதும், அகதிகள் முகாம்கள் மீதும் இஸ்ரேல் குண்டுவீசி



*தாக்குதல் நடத்தி உள்ளதாக மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளது.*

**ஹமாஸின் ரகசிய சுரங்க நகரம்:**

*பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் சுமார் 260 அடி ஆழத்தில் 500 கி.மீ. தொலைவுக்கு ரகசிய சுரங்க நகரத்தை ஹமாஸ் அமைத்துள்ளனர் என்றும், இந்த சுரங்க நகரத்தில் பதுங்கியிருந்து இஸ்ரேல் ராணுவத்துக்கு எதிராக அவர்கள் போரிட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.*

*அத்துடன் 2021ம் ஆண்டு, ஹமாஸின் 100 கிலோமீட்டர் நீளம் கொண்ட சுரங்கத்தை நாங்கள் அழித்துவிட்டோம் என்று இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்தது. ஆனால் இதற்கு பதிலடி கொடுத்த ஹமாஸ், நீங்கள் அழித்தது வெறும் 5 சதவீதமான சுரங்கத்தைத்தான். எங்கள் சுரங்க உறைவிடம் மொத்தமாக 500 கிலோமீட்டர் நீளம் கொண்டது என்று தெரிவித்தனர். ஆனாலும் ஹமாஸ் அமைப்பினர், இஸ்ரேல் ராணுவத்துக்கு எதிராக தொடர்ந்தும் போரிட்டு வருகின்றனர். ஹமாஸின் போர் வியூக பின்னணியில் அவர்களின் ரகசிய சுரங்க நகரம் இருப்பது தெரிய வந்துள்ளது.*

*காசாவின் வடக்கு பகுதியில் ராணுவ தாக்குதலில் ஈடுபட்டு வரும் இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினர் பயன்படுத்தி வரும் சுரங்கங்களில் 130 சுரங்க நுழைவாயில்களை அழித்துள்ளதாக தெரிவித்து அதன் காட்சிகளை முதன் முதலில் வெளியிட்டுள்ளனர்.*

*ஆயினும் ஹமாஸ் பிடித்துச்சென்ற பணையக்கைதிகளை விடுவிக்கும்வரை போர் தொடருமென இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உறுதிபட தெரிவித்துள்ளார். உலக நாடுகள் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த நிலையிலும் நெதன்யாகு அதற்கு செவிசாய்க்காமல் உள்ளார்.*

**காசா சுரங்க பாதை வரலாறு:**

*1948 இஸ்ரேல் உருவாகியது முதல் 1967 வரை காசா பகுதி எகிப்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. பின்னர் 1967-ல் நடந்த போரில் எகிப்திடம் இருந்து காசா பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது. இதன்பிறகு எகிப்து, காசா எல்லைப் பகுதியில்*

தடுப்புச் சுவரை எழுப்பியது.

அப்போது எகிப்தில் உள்ள தங்களது உறவினர்களை சந்திக்க காசா பகுதி மக்கள் எகிப்துக்கு ரகசியமாக சுரங்கப் பாதை அமைத்தனர். கடந்த 1994-ம் ஆண்டில் இந்த சுரங்கப் பாதை வழியாக பாலஸ்தீன போராளிகள் ஆயுதங்களை கடத்த தொடங்கினர்.

பாலஸ்தீனத்தின் காசா பகுதி 41 கி.மீ. நீளம், 13 கி.மீ. அகலம் கொண்டதாகும். இதன் தென்மேற்கில் 11 கி.மீ. தொலைவு எல்லையை எகிப்து உடனும் கிழக்கு, மேற்கில் 51 கி.மீ. தொலைவு எல்லையை இஸ்ரேல் உடனும் பகிர்ந்து கொண்டுள்ளது.

இதை தடுக்க அமெரிக்காவின் உதவியுடன் எகிப்து அரசு கடந்த 2009-ம் ஆண்டில் காசா எல்லையில் 16 அடி ஆழத்தில் அஸ்திவாரம் அமைத்து, 20 அடி உயரத்துக்கு இரும்பிலான சுவரை கட்டியது.

**எகிப்து ஊடக எரிபொருள், உணவு, மருந்துகள்:**

இத்தகைய இரும்பு சுவருக்கும் கீழாக காசாவில் இருந்து எகிப்துக்கு ரகசிய சுரங்கப் பாதைகள் அமைக்கப்பட்டன. இந்த பாதைகள் வழியாக எகிப்தில் இருந்து ஆயுதங்கள், எரிபொருள், உணவு பொருட்கள், மருந்துகள், கட்டுமான பொருட்கள் காசாவுக்கு கொண்டு வரப்பட்டன.

கடந்த 2005-ம் ஆண்டில் காசாவில் இருந்து இஸ்ரேல் ராணுவம் முழுமையாக வெளியேறியது. அதன்பிறகு ஹமாஸ் போராளிகள், காசா பகுதியில் பிரம்மாண்ட சுரங்க நகரத்தை நிர்மாணிக்கும் பணியை தொடங்கினர். நாள்தோறும் 22,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சுரங்கப் பாதை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கான கட்டுமான செலவை ஈரானும், முஸ்லிம் அமைப்புகளும் ஏற்றுக் கொண்டன என தெரிவிக்கப்பட்டது. சமீபத்திய புள்ளிவிவரத்தின்படி ஹமாஸ் போராளிகள் காசா பகுதியில் சுமார் 260 அடி ஆழத்தில் 500 கி.மீ. தொலைவு நீளத்துக்கு சுரங்கப் பாதையை அமைத்துள்ளதாக உளவுத் தகவல்கள் வெளிவந்தன.

# 07

## ஹமாஸ் – இஸ்ரேல் போரினால் லாபம் யாருக்கு? ஆயுத நிறுவனங்களின் இலாபங்களுக்காக மக்கள் அழிவா?



*காசாவில் பாலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் கடுமையாக தாக்குதல் தொடுத்துள்ள நிலையில், தற்போது வரை இரு தரப்பிலும் பலி எண்ணிக்கை 5,000க்கும் மேலாக நெருங்கியுள்ளது. இவ்வளவு ஆபத்தை ஏற்பத்தும் போரினால் யாருக்கு லாபம்? யார் பயனடைகிறார்கள்? எனும் கேள்வி சாதாரண மக்கள் மனதில் எழுந்திடும்.*

**ஆயுத வர்த்தகத்தில் அமெரிக்கா:**

*சர்வதேச ஆயுத விற்பனையில் அமெரிக்கா தொடர்ந்து முன்னிலை வகித்து வருவதாக ஆராய்ச்சி புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் சீனா தனது ஆயுத விற்பனையை கடந்த*

காலத்தைக் காட்டிலும் அதிகரித்து வருவதாகவும் தெரிய வந்துள்ளது. தற்போதய ஆயுத வர்த்தகத்தில் அமெரிக்க நிறுவனங் களின் பங்கு 54 சதவீதமாகும். சீனா 13 சதவீத பங்களிப்புடன் இரண்டா மிடத்தில் உள்ளது. இங்கிலாந்து 7.1 சதவீதத்துடன் மூன்றாமிடத்திலும், ரஷ்யா மற்றும் பிரான்ஸ் முறையே4-வது மற்றும் 5-ம் இடத்திலும் உள்ளன. சீன நிறுவனங்களின் ஒட்டு மொத்த வர்த்தக அளவு 6,680 கோடி டாலராகும்.

ஆயுத வர்த்தகத்தில் ஏற்பட்ட உயிர் சேதங்கள் பொருட் சேதங்களுக்குப் பின்னரும், தற்பொழுது அதிகளவில் பாவிக்கப்படும் ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதை கட்டுப்படுத்தும் வகையில் எந்தவொரு பரந்த, பொது நோக்குடன் சர்வதேச சட்டமும் உருவாக்கப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இதே வேலை உலகளாவிய ரீதியில் ஆயுதங்கள் வாழ்க்கை யில் ஒரு முக்கிய பாதுகாப்பு பங்காக இருப்பதைக் காண்பதுடன் அதிகளவிலான கொலைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் ஒரு சமூகமாக சமூகத்தில் திகழ்கின்றது.

**போரின் அழிவுகள்:**

போர்களுக்கு அடிப்படை என்பது ஆயுதங்கள்தான். இந்த ஆயுதங்களை எல்லோராலும் உற்பத்தி செய்துவிட முடியாது. சில குறிப்பிட்ட நிறுவனங்கள்தான் இதை உருவாக்க முடியும். அப்படி யான நிறுவனங்கள்தான் லாக்ஹீட் மார்ட்டின், நார்த்ராப் க்ரம்மன். இவை இரண்டும் அமெரிக்காவை சேர்ந்த ஆயுத உற்பத்தி நிறுவனங் களாகும். ஹமாஸ்-இஸ்ரேல் மோதல் தொடங்கியதிலிருந்து இந்த இரண்டு நிறுவனங்களின் பங்குசந்தை வர்த்தகமும் உயர்ந்து சென்று கொண்டிருக்கிறது. லாக்ஹீட் மார்ட்டின் பங்கு விலை கிட்டத்தட்ட 9 சதவிகிதமும், நார்த்ராப் க்ரம்மன் பங்குகள் சுமார் 12 சதவிகிதமும் அதிகரித்துள்ளன.

உள்நாட்டு பாதுகாப்பு (ஹோம்லேண்ட் செக்யூரிட்டி நியூஸ் வயரின் ) அறிக்கையின்படி, கடந்த 2009ம் ஆண்டு முதல், சுமார் 169 நாடுகளுக்கு 444 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான அளவில் ஆயுத விற்பனையை அமெரிக்கா செய்திருப்பது அம்பலமாகி யுள்ளது.

இதில் லாக்ஹீட் மார்ட்டின் மட்டும் 100 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான சந்தை மூலதனத்தை கொண்டிருக்கிறது.

*இந்நிறுவனம் ஆயுதங்களை தவிர F-35 போர் விமானங்கள், சிகோர்ஸ்கி மற்றும் பிளாக் ஹாக் ஹெலிகாப்டர்களையும் இந்நிறுவனம் உருவாக்கியுள்ளது. எல்லா போர்களிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன.*

**கொடிகட்டி பறக்கும் ஆயுத உற்பத்தி:**

*தற்போது நார்த்ரோப் க்ரம்மன் 70 பில்லியன் டாலர் களுக்கும் அதிகமான மூலதனத்தை கொண்டிருக்கிறது. தற் போதைக்கு ஆயுத உற்பத்தி சந்தையில் இந்த இரண்டு நிறுவனங்கள் தான் கொடிகட்டி பறக்கின்றன. தைவான் உள்ளிட்ட உலகின் பல் வேறு இடங்களுக்கு இந்த ஆயுதங்கள் விநியோகம் செய்யப்படு கிறது. இன்றைய நிலையில் ஆயுத விற்பனையும் இப்படியே போய்க்கொண்டிருந்தால் ஒரு கட்டத்தில் காலநிலை மாற்றம் உச்சமடைந்தது போல பூமியின் தென் துருவத்தில் உள்ள பனி வேகமாக அழிந்துவிடும்.*

*எனவே ஆயுத விற்பனை நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் வலியுறுத்தியுள்ளனர். உலகின் மொத்த ஆயுத விற்பனையில் வல்லரசு நாடான அமெரிக்க நிறுவனங்களின் பங்கு மட்டும் 51% ஆக இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.*

**பாலஸ்தீனத்தை யூதர் ஆக்கிரமிப்பு:**

*ஜெர்மனிய நாஷி தாக்குதலிலிருந்து தப்பி வந்த யூதர்களுக்கு, பாலஸ்தீனர்கள் அடைக்கலம் கொடுத்தனர். ஆனால் அதன் பின்னர் ஐ நா சபை 1947ம் ஆண்டு பாலஸ்தீனத்திலிருந்து பாதிக்கும் அதிக மான பகுதியை பிரித்து கொடுத்து இஸ்ரேலை உருவாக்க முடி வெடுத்தது. கடந்த 75 ஆண்டுகளில் காசா, வெஸ்ட் பேங்க் போன்ற சில இடங்களை தவிர மொத்த பாலஸ்தீனத்தையும் யூதர்கள் ஆக்கிரமித்து இஸ்ரேல் எனும் நாட்டை உருவாக்கிக்கொண்டனர். ஆனால் இதற்கு பாலஸ்தீன மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.*

*பாதிப்படைந்த பாலஸ்தீனர்கள் தற்போதுவரை இஸ்ரேலுக்கு எதிராக சண்டையிட்டு வருகின்றனர்.*

*பாலஸ்தீன விடுதலையை வலியுறுத்தும் ஹமாஸ் அமைப்பு நடத்திய சமீபத்திய தாக்குதலையடுத்து, இஸ்ரேலும் பதில்*




தாக்குதலை நடத்தி வருகிறது. இந்த தாக்குதலில் இரு தரப்பிலும் சுமார் 5000க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

காசா பகுதிக்கு குடிநீர், மின்சாரம் மற்றும் எரிபொருளை வழங்கும் இணைப்பை இஸ்ரேல் துண்டித்திருக்கிறது.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட குழந்தைகளை கூட மருத்துவ மனைக்கு கொண்டு செல்ல காசாவில் உள்ள அம்புலன்ஸ்களில் எரிபொருள் இல்லை. ஏற்கெனவே நடந்துக்கொண்டிருக்கும், ரஷ்யா-உக்ரைன் போர், அதனைத்தொடர்ந்து தற்போது தொடங்கியுள்ள ஹமாஸ்-இஸ்ரேல் மோதல் ஆகியவை உலக நாடுகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளன.

**உலகின் பாரிய ஆயுத வியாபாரி அமெரிக்கா:**

உலகின் மிகப்பெரிய ஆயுத வியாபாரியாக அமெரிக்கா உள்ளது. ஆயுதங்களை வாங்குவதில் 2-வது இடத்தில் இந்தியா.

ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI-Stockhom International Peace Reserch Institute) 2020இல் வெளியிட்ட புள்ளி விவரத்தில், உலகளவில் நடைபெற்றுவரும் ஆயுத விற்பனை குறித்தான தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளது.

ஸ்டாக்ஹோம் நிறுவனப் பட்டியலில் இடம்பெற்றுள்ள முதல் 25 ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் மட்டும் 2018-ம் ஆண்டைக் காட்டிலும் 8.5% அதாவது சுமார் 361 பில்லியன் டாலர் விற்பனையை அதிகரித்திருப்பதாக தெரியவந்துள்ளது. இது ஐ.நா மன்றம் அமைதிக்கான நடவடிக்கைகளுக்கு ஆண்டுதோறும்

செலவிடப்படும் தொகையை விட 50 மடங்கு அதிகமாகும்.

2019-ம் ஆண்டிற்கான புள்ளிவிவரத்தை வெளியிட்டுள்ள ஸ்டாக்ஹோம் ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) கணக்குப்படி, அதிகரித்துவரும் சர்வதேச ஆயுத விற்பனையில் முதல் 25 இடங்களுக்குள் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 12 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. முதல் 25 இடங்களுள் பட்டியலிடப்பட்ட அமெரிக்க நிறுவனங்கள் மட்டும் சுமார் 60% அளவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இதில் அமெரிக்காவைச் சேர்ந்த 12 நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக முதல் 5 இடத்தை பிடித்துள்ள அமெரிக்கா வைச் சேர்ந்த நிறுவனங்களான லாக்ஹீட் மார்ட்டின், போயிங், நார்த்ரோப் க்ரம்மன், ரேதியோன் மற்றும் ஜெனரல் டைனமிக்ஸ் ஆகிய நிறுவனங்கள் ஆக்கிரமித்து சுமார் 166 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அமெரிக்காவிற்குப் பிறகு, ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 6 நிறுவனங்கள் தங்கள் பங்கிற்கு 18% ஆயுதங்களை விற்பனை செய்துள்ளனர்.ஏர்பஸ் மற்றும் தலேஸ் ஆகிய முக்கிய ஐரோப்பிய நிறுவனங்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

பிரான்ஸ் நாட்டின் டசால்ட் ஏவியேசன் நிறுவனமானது, ரஃபேல் போர் விமான ஏற்றுமதியால் 38-வது இடத்திலிருந்து 17-வது இடத்திற்கு உயர்ந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த பட்டியலில் ரஷ்யாவைச் சேர்ந்த 2 ஆயுத நிறுவனங்கள் 3.9% பங்குகளுடன் இடம்பெற்றுள்ளன.

**சீனா ஆயுத நிறுவனங்கள்:**

பட்டியலிடப்பட்டுள்ள சீனாவை சேர்ந்த ஆயுத உற்பத்தி நிறுவனங்கள் 15.7% ஆயுதங்களை விற்பனை செய்துள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கிறது. இதில் சீனா அரசுக்கு சொந்தமான ஏ.வி.ஐ.சி, சி.இ.டி.சி மற்றும் நோரின்கோ ஆகிய ஆயுத நிறுவனங் கள் முறையே ஆறு, எட்டு மற்றும் ஒன்பதாம் இடங்களை பிடித் துள்ளன.ஆனால் அமெரிக்கா பல ஆண்டுகளாக ஆயுத சந்தையில் ஆதிக்கம் செலுத்தி வரும் சூழலில், தற்போது சீனாவைச் சேர்ந்த நிறுவனங்களின் விற்பனை கிட்டத்தட்ட 5% அதிகரித்துள்ளதாக

*“ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின்” ஆயுத மற்றும் இராணுவ செலவினங்களை ஆராயும் திட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது.*

**ஐக்கிய அரபு எமிரேட்ஸ் :**

*ஆச்சரியம் தரும் விதமாக முதன்முறையாக மத்திய கிழக்கு நாட்டின் (ஐக்கிய அரபு எமிரேட்ஸ்) ஆயுத உற்பத்தி நிறுவனமான எட்ஜ் (EDGE) முதல் 25 இடங்களில் சர்வதேச ஆயுத விற்பனைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.*

*தற்போது குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் ஈட்டும் நாடுகள் படிப்படியாக ஆயுத வர்த்தகத்தில் நுழையத் தொடங்கி இருப்பதாகவும், மேலும் பாதுகாப்பு காரணங்களுக்காக செலவிடப் படும் தொகை பல நாடுகளில் அதிகரித்து வரும் சூழல் கவலை அளிக்கக்கூடியதாக இருப்பதாகவும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டி யுள்ளது.*

*சர்வதேச ஆயுத விற்பனையில் ஈடுபடும் பெரும்பாலான நிறுவனங்கள் மேற்குலகைச் சார்ந்தவையாக இருந்தாலும், இந்நிறுவனங்கள் சவூதி அரேபியா, இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் தங்களுக்கான துணை நிறுவனங்களை அமைத்து ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டு வருவது அதிகரித்து வருவதாக புள்ளிவிவரம் காட்டுகின்றது.*

*பொருளாதாரத் தடைகளால் ரஷ்யா மற்றும் சீனா நாடுகளை முடக்கி அவற்றின் உலகளாவிய சந்தையை கட்டுப்படுத்துவதன் காரணமாக, அமெரிக்க நிறுவனங்களுக்கு குறிப்பாக தெற்கு பகுதிகளில் இருக்கும் நாடுகளில் அதிகரித்து வரும் ஆயுத தேவைக்கு போட்டியில்லா சந்தையை வழங்க முடிவதாக ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த ஆராய்ச்சியாளர் சீமோன் வெஸ்மேன் தெரிவித்தார்.*

**இந்திய ஆயுத நிறுவனங்கள்:**

*ஆயுதங்களை விற்பனை செய்வதில் முன்னிலை வகிக்கும் 100 நிறுவனங்கள் பட்டியலில் ஏச்ஏஎல் உட்பட 3 இந்திய நிறு வனங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் இந்தியாவைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (எச்ஏஎல்), இந்திய ஆர்டினன்ஸ்*

*ஆலைகள் (ஐஓஎப்), பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (பிஇஎல்) ஆகிய 3 நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. 2019-ம் ஆண்டிலும் இந்த 3 நிறுவனங்களும் பட்டியலில் இடம்பெற்றிருந்தன.*

*இப் பட்டியலில் எச்ஏஎல் நிறுவனம் 42-வது இடத்தில் உள்ளது. இந்நிறுவனம் 297 கோடி டாலருக்கு ஆயுதங்களை விநியோகம் செய்துள்ளது. இது 2019-ம் ஆண்டை விட 1.5 சதவீதம் அதிக மாகும். இந்திய ஆர்டினன்ஸ் தொழிற்சாலை 60-வது இடத்தில் உள்ளது. இந்நிறுவனம் 190 கோடி டாலருக்கு ஆயுதங்கள் விநியோகம் செய்துள்ளது. இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 0.2% அதிக மாகும். பிஇஎல் 66-வது இடத்தில் உள்ளது. இது 163 கோடி டாலர் அளவுக்கு விநியோகம் செய்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 4% அதிகம்.*

*ஆயுத உற்பத்தி நாடுகளில் மிகக் குறைந்த அளவில் ஏற்றுமதி செய்யும் 11 நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும். அமெரிக்காவைச் சேர்ந்த 41 நிறுவனங்கள் இடம்பெற்று மிக அதிக எண்ணிக்கை யிலான நிறுவனங்களைக் கொண்டநாடுகள் வரிசையில் அமெரிக்கா முதலிடம் வகிக்கிறது.இவற்றின் மொத்த வர்த்தகம் 28,500 கோடி டாலராகும். முந்தைய ஆண்டை விட 1.9 சதவீதம் அதிகமாகும்.*

**ஆயுதங்களை கட்டுப்படுத்தும் பொறுப்பு:**

*ஓர் நாட்டின் மக்களை பாதுகாப்பதும், ஆயுத ஏற்றுமதி, இறக்குமதி போன்றவற்றை கட்டுப்படுத்துதல், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களை மதித்தல் போன்றவற்றிற்கு உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு அரசாங்கமும் ஆயுதங்களை கட்டுப்படுத்தும் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*உலகிலுள்ள வல்லரசு நாடுகள் பல, ஆயுத வர்த்தக நாடுகளாக காணப்படுகின்றன. ஆதலால் இவர்களுக்கே உலகெங்கும் பரவிக் கிடக்கும் இச்சந்தையை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு அதிக மாக உள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவில் நிரந்தர அங்கத்துவம் பெற்றுள்ள ஐந்து நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா இணைந்து உலகில் ஏற்றுமதி செய்யப்படும் 88 சதவீதம் பொதுவான பாவனையிலுள்ள ஆயுதங்கள் காரணமாக உள்ளன. இவ்வாறான ஆயுதங்களே அடிக் கடி நிலவும் கொடிய மனித உரிமை மீறல்களுக்கும் காரணமாக*

வுள்ளது.

ஆயுத கட்டுப்பாட்டுச் சவாலை கூடிய விரைவில் எதிர் கொள்வது எல்லா அரசாங்கங்களினதும் முக்கியமான கடமை யாகும். அரசாங்கங்களின் ஒத்துழைப்பு ஆயுதங்களின் பரவலையும், உற்பத்தியையும் கட்டுப்படுத்த உதவ வேண்டும். குறைந்த பட்சம் மேற்குறிப்பிட்ட ஐந்து வல்லரசு நாடுகளும் மனித உரிமைகளுக் கெதிராக அல்லது மனிதாபிமான ஒர் சட்டதிட்டங்களுக்கெதிராக பயன்படுத்த முனையும் பிரதேசங்களும் ஆயுத விற்பனையை தடை செய்வதில் பங்கு கொள்ள வேண்டியது அவசியம்.

ஆயுதங்கள் வறுமைக்கும் துன்பத்திற்கும் நேரடியாக வழி வகுக்கின்றன. நாள்தோறும் ஆயுத வன்முறைகளால் பல லட்சக் கணக்கான ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் அச்சத்திலும் கலக்கத்திலும் வாழ்கின்றனர். இதனால் ஒவ்வொரு நிமிடமும் ஒர் உயிர் பலியாகின்றது.

கட்டுப்பாடின்றி அதிகரித்து வரும் ஆயுதங்கள் தவறான பாவனைக்காக அரசாங்கப் படைத்தரப்பினாலும், ஆயுதக் குழுக் களினாலும் உபயோகத்திற்குள்ளாகின்றது. இதனால் பெருமள விலான உயிரிழப்பு, வருமான இழப்பு, வறுமையில் இருந்து மீளும் வாய்ப்புகள் குறைதல் போன்றவற்றிற்கு ஊக்கத் தொகை வருடத்திற்கு, சராசரியாக 22 மில்லியன் அமெரிக்க டாலர்களை வியாபார நடவடிக்கைகளுக்காக ஆபிரிக்க, ஆசிய, மத்திய மற்றும் தென் அமெரிக்க பிராந்தியங்களில் விரயமாக்கப்படுகிறது.

போரால் சிதைந்த மேற்குறிப்பிட்ட பிராந்தியங்களில் உள்ள நாடுகளில் அபிவிருத்தி இலக்குகளான கல்வி, மற்றும் வறுமை ஒழிப்பு, மற்றும் தாய்மார் மற்று சிசு மரண வீதத்தை குறைக்க வழிவகை செய்ய வேண்டும்.

நாள்தோறும் ஆயுத பாவனையினால் மனித உரிமைகளுக்கு எதிராக ஏற்படும் வன்முறைகள் மற்றும் போர், வறுமை ஆகியவைகளை ஒழிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகில் கட்டுப்பாடற்ற ஆயுதங்கள் பரவலாக அதிகரித்து வரும் நிலையில் சட்டவிரோத ஆயுதங்களின் பாவனை பல பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பதே உண்மை யாகும்.

# 08

## இஸ்ரேலின் நவீன "டிஜிட்டல் ஆர்மி" : விலைக்கு வாங்கப்பட்ட பிரபலங்கள்!




*காசாவில் பாலஸ்தீன மக்களைப் படுகொலை செய்யத் துவங்கியதிலிருந்து இஸ்ரேலின் இனப்படுகொலையை மறைத்து பாலஸ்தீனத்திற்கு எதிராக போலிச் செய்திகளை சமூக ஊடகத்தில் பரப்புவதற்கு சமூக ஊடக பிரபலங்களுக்கு இஸ்ரேலின் "டிஜிட்டல் ஆர்மி" (Digital Army) பணம் கொடுத்து வருவது அம்பலமாகியுள்ளது.*

### இஸ்ரேலின் போலிப் பிரச்சாரக் குழு

*இதற்காக சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்தி வரும் கணக்குகளுக்கு (Media Influencers) இஸ்ரேல் அரசு சார்பில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல் மற்றும் மெசேஜ்களின் ஸ்கிரீன்*

ஷாட்கள் (screen shot) வெளியாகியுள்ளன. இஸ்ரேலின் போலிப் பிரச்சாரக் குழு HAMAS is ISIS மற்றும் Stand With Israel என்ற ஹேஷ்டேக்குகளுடன் எக்ஸ் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் வீடியோக்களை வெளியிட்டு வருகிறார்கள்.

அத்துடன் கிம் கர்தாஷியன், மடோனா, கேல் கடோட், கேசி நீஸ்டாட் மற்றும் பல பிரபலங்கள் ஏற்கனவே இப்போலிப் பிரச்சாரத்தில் இணைந்துள்ளனர் என்பதும் அம்பலமாகியுள்ளது. காசா பகுதியை இஸ்ரேல் ராணுவம் முற்றுகையிட்டு பாலஸ்தீனர் களின் வீடுகள், அவர்கள் பாதுகாப்பு தேடி தஞ்சம் புகுந்த மருத்துவமனைகள், தேவாலயங்கள், மசூதிகள், அம்புலன்ஸ் என அனைத்து இடங்களிலும் குண்டுகளை வீசி அழித்து வருகிறது.

மேலும் அங்கு வாழும் அப்பாவி பாலஸ்தீனர்களுக்கு தேவையான அத்தியாவசியமான உணவு, குடிநீர், மின்சாரம், எரிபொருள், மருத்துவப் பொருட்களைத் தடுத்து சர்வதேச விதிகளை மீறி, இனப்படுகொலையில் ஈடுபட்டு வருகிறது.

**போர் குற்ற மறைப்பு:**

இஸ்ரேல் தனது போர் குற்றங்களையும் இனப்படுகொலை யையும் மறைத்து உலக மக்களின் அனுதாபங்களைத் தனது பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காகவும், தனது பயங்கரவாதத்தை நியாயப்படுத்திக் கொள்வதற்கும் போலிப் பிரச்சாரங்களை மேற் கொள்கிறது. இதற்காக உலகளவில் சமூக ஊடகத்தில் அதிக செல்வாக்கு செலுத்தி வரும் நபர்களை அணுகி அவர்கள் மூலம் பல போலிச் செய்திகளை பரப்பிவருகிறது.

அப்படி போலிப் பிரச்சாரத்திற்காக அணுகும் நோக்குடன் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்களில் ஒன்று கசிந்துள்ளது.

**சமூக ஊடக பிரபலங்களை விலைக்கு வாங்கும் இஸ்ரேல்:**

ஹமாஸை பயங்கரவாதிகளாகவும், இஸ்ரேலில் 40 குழந்தைகளின் தலையை வெட்டி ஹமாஸ் அமைப்பினர் கொலை செய்துள்ளனர் என்றும் போர் துவங்கிய போது பொய்ப் பிரச்சாரத்தை பரப்பியது இவர்கள்தான்.

இந்நிலையில் சில சமூக ஊடகப் பிரபலங்கள், இஸ்ரேலை அம்பலப்படுத்தியும் உள்ளனர். சாரா வாட்சன் என்பவர்

*பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக தனது டிக் டாக் (TikTok) பக்கத்தில் வீடியோ வெளியிட்டு இருந்தார்.*

*அந்த ஆதரவை திரும்பப் பெற வேண்டும் என இஸ்ரேலிய அரசு தன்னை அணுகி வற்புறுத்தியதாகவும், அதற்காக லஞ்சம் கொடுக்க முன் வந்ததாகவும் தனது ட்விட்டர் பக்கத்தில் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், "நீங்கள் நினைப்பது நடக்காது, என் அறநெறியை உங்களால் விலைக்கு வாங்க முடியாது" என அவர் ஒரு வீடியோவில் தெரிவித்துள்ளார்.*

*அதுமட்டுமல்லாமல் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக அவர் இன்ஸ்டகிராமில் பதிவிட்ட பதிவையும் நீக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்காகவும் ஒரு பெரிய தொகையை பேரம் பேசியதாகவும் அதையும் தான் மறுத்துவிட்டதாகவும் அவர் வீடியோவில் தெரிவித்துள்ளார்.*

**இஸ்ரேலை அம்பலப்படுத்திய ஊடகங்கள்:**

*சுலைமான் அகமது என்ற மற்றொரு சமூக ஊடக பிரபலம், இஸ்ரேல் அரசு சமூக ஊடகத்தில் செல்வாக்கு செலுத்துபவர்களுக்கு ஒவ்வொரு வீடியோவிற்கும் கிட்டத்தட்ட $ 1,000 செலுத்துகிறது என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.*

*இது தகவல்களை கட்டுப்படுத்தி உண்மைகளை திரிப்ப தாகும் அமெரிக்காவைப் போலவே உலகில் உள்ள மக்களுக்கு நீங்கள் (இஸ்ரேலிய அரசு) செய்யும் கொடூரமான விஷயங்களை நியாயப்*






படுத்துவது என்று அவர் இஸ்ரேலின் செயல்பாட்டை கடுமையாக விமர்சித்துள்ளார்.

**போலிப் பிரச்சார உக்திகள் :**

இஸ்ரேலின் போலிப் பிரச்சாரக் குழு கிம் கர்தாஷியன், மடோனா, கேல் கடோட், கேசி நீஸ்டாட் மற்றும் பல பிரபலங்கள் இப்போலிப் பிரச்சாரத்தில் இணைந்துள்ளனர் என்பதும் அம்பல மாகியுள்ளதால் தற்போது இத்தகைய சமூக வலைத்தளங்களில் வேறு பிரச்சார வீடியோக்களை வெளியிட்டு உலகை இஸ்ரேல் ஏமாற்ற முயல்வது தெளிவாகி உள்ளது.

ஈராக் போருக்கு முன்பாக அமெரிக்கா எவ்வண்ணம் போலிச் செய்திகளை சமூக ஊடகத்தில் பரப்பியது. அதற்கு ஒப்பாக தற்போதய காசா போரில் சமூக ஊடக பிரபலங்களுக்கு இஸ்ரேலின் “டிஜிட்டல் ஆர்மி” (Digital Army) பணம் கொடுத்து வருவது அம்பலமாகியுள்ளது.

இதற்காகவே இஸ்ரேலின் போலிப் பிரச்சாரக் குழு #HAMASisISIS மற்றும் #StandWithIsrael என்ற ஹேஷ்டேக்குகளுடன் எக்ஸ் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் பல வீடியோக்களை வெளியிட்டுள்ளமை என்பது போரின் கொடூரத்தை மறைக்கும் முயற்சியாகவே கருதப்படுகிறது. அத்துடன் இஸ்ரேல் தனது போர் குற்றங்களையும் இனப் படுகொலையையும் மறைத்து உலக மக்களின் அனுதாபங்களைத் தனது பக்கம் திருப்ப வேண்டும் என்பதற்காகவே இத்தகைய போலிப் பிரச்சார உக்திகளை பயன்படுத்துகிறது.

# 09

## கட்டார் இராஜதந்திரம் போரை நிறுத்துமா ? காசா யுத்த நிறுத்தமும் பிணைக் கைதிகள் விடுவிப்பும்!



*கட்டார் அரசின் இராஜதந்திரத்தாலும், மத்தியஸ்தத்தாலும் மேலும் பணயக்கைதிகளை விடுவித்து, முழுமையான போரைத் தடுக்க முடியுமா என்பதனை இனிவரும் நாட்களிலே தான் பார்க்க முடியும்.*

*ஹமாஸால் பணயக் கைதிகளாக இருந்த அமெரிக்கத் தாய் மற்றும் மகளின் திடீர் விடுதலைக்கு கட்டார் அரசு முக்கிய பங்கு வகித்தது. இப்போது ஹமாஸ் வசமுள்ள சிறைபிடிக்கப்பட்டவர் களை விடுவிப்பது, முழு அளவிலான போரைத் தடுக்கும் நோக்கில், கட்டார் அரசு பரந்த உரையாடல் அல்லது மத்தியஸ்தத்திற்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.*

*இரண்டு பணயக்கைதிகளை நிபந்தனையின்றி விடுவிப்பது நம்பிக்கையை வளர்க்கும் நடவடிக்கையாக இருக்கும் என்று பேச்சுவார்த்தையாளர்கள் ஹமாஸை சமாதானப்படுத்த முடிந்தது.*

*ஹமாஸ் உடனான வெற்றிகரமான பணயக்கைதிகள் பேச்சுவார்த்தை கட்டாரை இந்த நெருக்கடியில் இராஜதந்திரத்தின் மையமாக காட்ட அனுமதித்தது என்று பிரிட்டிஷ் சிந்தனைக் குழுவான லண்டன் குளோபல் ஸ்ட்ரேடஜி இன்ஸ்டிட்யூட்டின் கூறியுள்ளது. எண்ணெய் வளம் கொண்ட பாரசீக வளைகுடாவில் உள்ள கட்டார் அரசின் தொடர் இராஜதந்திர முயற்சிகளில் இது சமீபத்திய வெற்றியாகும். கட்டார் அரசால் சமீபத்தில் அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் கைதிகள் பரிமாற்றம் நிகழ்ந்தது. மற்றும் ரஷ்யாவிலிருந்து நான்கு உக்ரேனிய குழந்தைகளை விடுவிப்பதற்கு பேச்சுவார்த்தைக்கு உதவியது.*

***2021** இல் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா வெளி யேறுவதற்கு முன்பு தலிபான்களுடன் சமாதானப் பேச்சுக்களையும் நடத்தியது. ஆனால் ஹமாஸின் அரசியல் தலைவர்களுக்கு அடைக் கலம் கொடுத்த கட்டாரின் செயலால், இஸ்ரேலுக்கு தன்னை ஒரு மத்தியஸ்தராக முன்வைக்கும் முயற்சியை சிக்கலாக்கி உள்ளது.*

**ஹமாஸ் பிடித்த பணயக் கைதிகள்:**

*இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல் நீடித்து வரும் நிலையில், ஹமாஸ் குழு, பணயக் கைதிகள் அனைவரையும் நிபந்தனையுடன் விடுவிக்க முன்வந்தது. காஸா மீதான வான்வழித் தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தினால், அனைத்து பொதுமக்களையும் பணயக் கைதிகளை உடனடியாக விடுவிக்க தயாராக இருப்பதாக ஹமாஸின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளதாக* NBC *நிறுவனம் செய்தி வெளியிட்டது.*

*இஸ்ரேலியப் படைகள் காஸா பகுதியில் இராணுவத் தாக்குதலை நிறுத்தினால், ஒரு மணி நேரத்திற்குள் அனைத்து பணயக்கைதிகளையும் விடுவிக்க ஹமாஸ் அதிகாரி தயாராக இருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் காஸா நகர மருத்துவமனை மீது இஸ்ரேலின் வான்வழி தாக்குதல் நடத்தப் பட்டதில் சுமார் **500** பேர் கொல்லப் பட்டதாக தகவல்கள் தெரி வித்தன. எனினும் மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு இஸ்ரேலின் இராணுவம் பொறுப்பேற்க மறுத்து விட்டது. இதன் பின்*



பாலஸ்தீன மக்கள் வசிக்கும் பகுதிகளில் முன்னறிவிப்பின்றி நடத்தப் படும் ஒவ்வொரு தாக்குதலின் போதும் ஒரு இஸ்ரேலிய பணயக்கைதி கொல்லப்படுவார் என ஹமாஸ் தற்போது அறிவித்துள்ளது.

பாலஸ்தீன மக்கள் மீது தாக்குதல் நடத்தினால் ஒவ்வொரு பணயக் கைதிகளாக உயிரிழப்பார்கள் என ஹமாஸ் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. இஸ்ரேல் மீதான சமீபத்திய தாக்குதலுக் குப் பின்னர் ஹமாஸ் அமைப்பால் பல இஸ்ரேலியர்களை பணயக் கைதிகளாகப் பிடித்து சென்றுள்ளனர். இவ்வாறு பணய கைதிகளாக கொண்டு செல்லப் பட்ட மக்கள் கொல்லப்படுவார்கள் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தப் பணயக்கைதிகள், உலகின் மிக அதிக மக்கள் தொகை கொண்ட இடங்களில் ஒன்றான காசா பகுதியில் உள்ள ஹமாஸ் மறைவிடங்களில் வைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

இதேவேளை, ஹமாஸுக்கு எதிராகப் போரிடுவதற்காக இஸ்ரேல் இராணுவத்திலிருந்து வெளியேறிய சுமார் 300,000 பேர் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

**யோம் கிப்பூர் போருக்குப் பின் இழப்பு:**

யோம் கிப்பூர் போருக்குப் பிறகு இஸ்ரேலில் நடந்த வன்முறையிலேயே, பல பணயக் கைதிகள் எல்லையைத் தாண்டி காசாவிற்குள் கொண்டு செல்லப்பட்டனர். ஹமாஸின் தரை, வான்

*மற்றும் கடல்வழி தாக்குதல்களில் பொதுமக்கள், ராணுவத்தினர் என குறைந்தது 1500 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அரசு உறுதிப்படுத்தியுள்ளது. 2,000க்கும் மேற்பட்டோர் காய மடைந்துள்ளனர். ஏவப்பட்ட 7,000 ராக்கெட்டுகளுடன் கூடுதலாக 5,000க்கும் மேற்பட்ட ராக்கெட்டுகள் இஸ்ரேலிய எல்லைக்குள் ஏவப்பட்டதாக இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது*

*இஸ்ரேலும் அமெரிக்காவும் பணயக்கைதிகளை விடுவிக்க தங்களால் இயன்ற அனைத்தையும் செய்வதாக சபதம் செய்துள்ளன. தற்போது காசா பகுதியில் ஹமாஸூக்கு எதிரான தரை வழி தாக்குதலை ஆரம்பிக்கும் என்று இஸ்ரேல் அறிவித்ததை அடுத்து, ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் புகலிடம் தேடி தெற்கு காசாவிற்கு தப்பிச் சென்றுள்ளனர்.*

**ஜெர்மனி முயுனிச் ஒலிம்பிக்ஸ் பணய விவகாரம்:**

*பாலஸ்தீன விடுதலை அமைப்புகள் இஸ்ரேலின் மீது நீண்ட காலமாக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன. குண்டு வைப்பது, ராக்கெட்டை ஏவி தாக்குவது என அனைத்தையும் கையாண்டன. இஸ்ரேல் எதற்கும் சளைக்கவில்லை. பாலஸ்தீன தீவிரவாத தாக்குதல்களை திறம்பட எதிர்கொண்டது. உலகிலேயே சிறந்த உளவுப்படை எதுவென்றால் அது இஸ்ரேல் நாட்டின் மொசாட் என நீண்ட காலமாக விளங்கியது.*

*பாலஸ்தீன அமைப்புகளால் வெளி நாடுகளிலும் இஸ்ரேலியர்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.*

*1972 ஆம் ஆண்டு ஜெர்மனி நாட்டில் முயுனிச் (*Munich*) நகரத்தில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற 11 இஸ்ரேலிய விளையாட்டு வீரர்களை* Black September *என்ற பாலஸ்தீனிய இயக்கதைச் சேர்ந்தவர்கள் பணயமாக பிடித்து பின்னர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாக இஸ்ரேலிய உளவு நிறுவனம் ஒலிம்பிக் வீரர்களைக் கொன்ற 11 பாலஸ்தீன தீவிரவாதி களை உலகம் முழுவதும் சுமார் 20 ஆண்டுகள் தேடி வேட்டையாடிக் கொன்றது. முயுனிச் சம்பவத்தையும் அதன் தொடர்ச்சியாக தீவிரவாதிகளை இஸ்ரேல் இராணுவம் வேட்டையாடுவதையும் மையமாக வைத்து ஸ்டீபன் ஸ்பீல்பர்க் "முயுனிச்" என்ற பெயரில் திரைப்படம் எடுத்து 2005 ஆம் ஆண்டு வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.*




**ஏர் பிரான்ஸ் விமான கடத்தல்:**

*1976 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 27இல் இஸ்ரேல் தலை நகரான டெல் அவிவ்விலிருந்து பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸ் நகருக்குச் சென்று கொண்டிருந்த ஏர் பிரான்ஸ் விமானம் ஏதன்ஸ் நகரில் தரை இறங்கிய போது, பாப்புலர் ஃப்ரண்ட்* (PFLP) *என்ற பாலஸ்தீனிய அமைப்பைச் சேர்ந்தவர்களும், ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ஒரு தீவிரவாத அமைப்பும் சேர்ந்து விமானத்தைக் கடத்தினார்கள்.*

*கடத்தப்பட்ட விமானம் உகாண்டா நாட்டில் உள்ள எண்டபி விமானத் தளத்திற்கு கடத்திச் செல்லப்பட்டது. விமானத்தில் 304 பயணிகள் மற்றும் 12 சிப்பந்திகள் உட்பட 316 பேர் பயணம் செய்தனர்.*

*இஸ்ரேலிய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்ட பாலஸ்தீன தீவிரவாதிகளின் கோரிக்கையாக இஸ்ரேலில் உள்ள 40 தீவிரவாதிகளையும், கென்யா நாட்டில் உள்ள 13 தீவிரவாதிகளையும் விடுதலை செய்யவேண்டும்.*

*இஸ்ரேலிலிருந்து எண்டபி நகரம் சுமார் 4000 கி.மீ தொலைவில் இருந்தது. இஸ்ரேல் காரியத்தில் இறங்கியது.*

**ஒபரேஷன் தண்டர்போல்ட் –** Operation Thunderbolt:

*பதிலடியாக இஸ்ரேலில் ஆபரேஷன் தண்டர்போல்ட்க்கு (*Operation Thunderbolt*) ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. ஜூலை 3*

*ஆம் தேதி இரவு, நான்கு கனரக விமானங்கள் (ஹெர்குளிஸ் சி 130) தயாராகின. உருவில் பெரியதாக இருக்கக்கூடிய விமானங்கள். 100 இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் விமானங்களில் ஏறிக்கொண்டனர்.*

*இராணுவத் தளபாடங்களும், ஆயுதங்களும் ஏற்றப்பட்டன. மருத்துவர்களும், செவிலியர்களும் ஏற்றப்பட்டனர். விமானங்கள் எண்டபிக்கான 4000 கி.மீ பயணத்தை தொடங்கின. கடல் மார்க்க மாகவே விமானங்கள் ஓட்டிச் செல்லப்பட்டன.*

*நான்கு விமானங்களும் எண்டபி விமான நிலையத்தில் சத்தமில்லாமல் தரை இறங்கின.*

*விமானத்திலிருந்து இராணுவ பீரங்கிகள் மற்றும் ஜீப்பு களுடன் இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் இறங்கினர். திடீர் அதிரடி யால் பணயக் கைதிகளை விடுவித்து இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் கூட்டிச் செல்லும் வழியில், தீவிரவாதிகள் எதிர்தாக்குதலில் ஈடுபட்டனர்.*

*அவர்களுடன் உகாண்டா இராணுவமும் சேர்ந்துகொண்டு, மீட்புக் குழுவினருக்கும், தீவிரவாதிகளுக்கும்/உகாண்டா இராணுவ வீரர்களுக்கும் நடந்த இந்தச் சண்டையில் மேலும் இரண்டு பணயக் கைதிகளும் ஒரு இஸ்ரேலிய தளபதியான யோனாதன் நேத்தன் யாஹூம் கொல்லப்பட்டனர்.*

**பிரதமர் நேத்தன்யாஹஜீவின் அண்ணன் களப்பலி:**

*இவர் வேறுயாறும் அல்ல, இன்றைய இஸ்ரேலின் பிரதம மந்திரியான பெஞ்சமின் நேத்தன்யாஹூவின் தமையனார். கடத்தல் காரர்கள் தரப்பில் அனைத்து கடத்தல்காரர்களும் உயிரிழந்தனர். உகாண்டா இராணுவத்தைச் சேர்ந்த 40 வீரர்களும் நடந்த சண்டை யில் கொல்லப்பட்டனர். மீட்பு முயற்சி சுமார் 90 நிமிடங்கள் நடைபெற்றது.*

*ஏனைய பணயக் கைதிகளும், இஸ்ரேலிய இராணுவ வீரர்களும் இஸ்ரேல் திரும்பினர்.*

*ஒபரேஷன் தண்டர்போல்ட் வெற்றிகரமான நடவடிக்கை யாவும் 90* Minutes at Entebee *என்ற பெயரில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது. இந்தச் சம்பவங்களை வைத்து ஹாலிவுட்டில் பல திரைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில்* The Delta Force *எனும் படம் குறிப்பிடத்தக்கது*

**போர் நிறுத்தம் வாய்ப்பு இல்லை?**

*ஹமாஸ் உடன் போர் நிறுத்தம் செய்ய வாய்ப்பு இல்லை என தற்போது இஸ்ரேல் பிரதமர் அறிவித்துள்ளார். ஹமாஸ் அமைப்பிடம் 199 பேர் பிணைக் கைதிகளாக உள்ளனர் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் ஹமாஸ் இடையே தொடர்ந்து போர் நடந்து வருகிறது. தற்போது 199 பேர் பணய கைதிகளை விடுவிக்கும் வரை போரை நிறுத்துவது பற்றியோ, அல்லது படைகளுடைய எண்ணிக்கையை குறைப்பது பற்றியோ எந்த முடிவுக்கும் வர முடியாது என இஸ்ரேல் ராணுவம் தெளிவாக கூறியுள்ளது.*

*காசா பகுதிகளில் உள்ள நிலத்தடி சுரங்க பகுதிகளில் ஹமாஸ் அமைப்பினர் இவர்களை பிடித்து வைத்துள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. அவர்களை மீட்பதற்காகத்தான் வடக்கு நோக்கி முற்றுகை தொடர்வதாக கூறப்படுகிறது. இஸ்ரேலில் ஏற்கனவே அவசர நிலை பிரகனப்படுத்தப்பட்ட நிலையில், பதட்ட மான சூழல் இன்னமும் நிலவிக் கொண்டிருக்கிறது. இந்தப் போரின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.*

*இந்தப் போரால் மக்கள் பெருமளவில் பாதிக்கப் பட்டுள்ளனர். தண்ணீர் விநியோகம் தெற்கு காசா பகுதியில் விநியோகிக்கப்பட்டாலும் அங்கு குழாய்கள் உடைக்கப்பட்டதன் காரணமாக மக்களுக்கு போதிய அளவில் கிடைக்கவில்லை என ஐ நா தெரிவித்துள்ளது.*

*இந்தப் போரை நிறுத்த எங்களுக்கு என்ன வழி செய்வது என்று தெரியவில்லை என வெளிப்படையாகவே ஐ நாவின் பொது செயலாளர் தெரிவித்துள்ளார். எங்களுக்கு உதவி தேவை, பாது காப்பான இடங்கள் பற்றிய தெளிவு தெரியவில்லை. குறிப்பாக மக்களை வெளியேற்றுவதற்கு இஸ்ரேல் தாக்குதல் நடத்தாமல் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.*

*ஆயினும் தற்போது ஹமாஸ் உடன் போர் நிறுத்தம் செய்ய வாய்ப்பு இல்லை என இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.*

# 10

## இஸ்ரேல் வலதுசாரி நெதன்யாகு அரசு : ஆட்சி கவிழ்க்கப்படுவது சாத்தியமா?



தற்போதய டெல் அவிவ் (Tel Aviv) நிகழ்வுகள் இஸ்ரேலிய அரசுக்கு எதிராக மட்டுமல்ல, இந்த பிராந்தியம் முழுவதும் மற்றும் சர்வதேச அளவிலும் எதிரொலிக்க ஆரம்பித்துள்ளது.

டெல் அவிவில் தொடரும் வெகுஜன எதிர்ப்பானது, இஸ்ரேல், மத்திய கிழக்கு மற்றும் உலகின் அரசியல் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கிறது. இஸ்ரேலிய நாட்டின் வரலாற்றில் மிகவும் தீவிர வலதுசாரிகள், இனவாதிகள் நிரம்பிய கூட்டணி அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, சுமார் 100,000 பேர் ஹபிமா சதுக்கத்தில் கூடி, நீதித்துறையின் மீது நேரடி அரசியல் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தும் புதிய ஆட்சியின் திட்டங்களை எதிர்த்தனர்.

மேலும் ஆயிரக்கணக்கானோர் ஜெருசலேமில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் வீட்டிற்கு வெளியேயும், ஹைஃபா மற்றும் ரோஷ் பினாவிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரு கின்றனர். புதிய அரசாங்கத்திற்கான எதிர்ப்பு பாரிய அளவில் நீண்டுள்ளது. நெதன்யாகுவின் கூட்டணியில் அவரது சொந்த லிகுட் கட்சி, இனவாதக் கட்சிகளான சியோனிசம், யூத சக்திமற்றும் நோம் (Religious Zionism, Jewish Power and Noam) மற்றும் வலதுசாரி மதக் கட்சி களான ஷாஸ் மற்றும் யுனைடெட் டோரா யூத மதம் (Shas and United Torah Judaism) ஆகியவைஅடங்கும். இது யூத மேலாதிக்கம் மற்றும் நிறவெறி ஆட்சியைக் குறிக்கிறது.

இது பாலஸ்தீன பிரதேசங்களை நிரந்தரமாக கைப்பற்றுதல், அல்-அக்ஸா மசூதியில் யூதர்களின் பிரார்த்தனை, இஸ்ரேலின் சட்ட அமைப்பில் பெரும் மாற்றங்கள் மூலம் இனப்பாகுபாடு எதிர்ப்பு நடவடிக்கைகளை திரும்பப் பெறுதல் இஸ்ரேலில் உள்ள பாலஸ் தீனியர்கள் மற்றும் தொழிலாளர்கள், யூதர்கள் மற்றும் பாலஸ்தீனி யர்கள் ஆகியோருக்கு எதிராக பொலிஸ் மற்றும் இராணுவ அடக்கு முறையை முடுக்கிவிடுதல் என்பனவற்றை எப்போதும் ஆதரிக்கின்றது.

**இஸ்ரேல் தீவிர வலதுசாரி அரசு :**

இஸ்ரேல் வரலாற்றில் இதுவரை காணாத தீவிர வலதுசாரி அரசு ஒன்றை அமைப்பதற்கு உடன்படிக்கை எட்டப்பட்டதை அடுத்து பென்ஜமின் நெதன்யாகு மீண்டும் அதிகாரத்திற்கு கடந்த வருடம் பதவி ஏற்றார். கடந்த நவம்பரில் நடந்த தேர்தலில் வெற்றி யீட்டிய நெதன்யாகு ஆறாவது தவணைக்காக பிரதமராக பதவி ஏற்றார். அவரது கூட்டணியில் அரபு எதிர்ப்பு இனவாத செயலில் ஈடுபட்டதற்காக குற்றங்காணப்பட்ட தீவிர வலதுசாரி கட்சிகளும் உள்ளடங்கியுள்ளன. இந்த புதிய அரசு ஆக்கிரமிப்பு மேற்குக் கரையில் இஸ்ரேலின் பிடியை அதிகரிக்கும் என்று பலஸ்தீனர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரச்சினைக்கு சர்வதேச தீர்வாக உள்ள இரு நாட்டுக் கொள்கையை நெதன்யாகுவின் கூட்டணி கட்சிகள் முழுமையாக நிராகரிக்கின்றன. இதில் இஸ்ரேல் பாராளுமன்றத்தில் மூன்றாவது அதிக இடங்களைப் பிடித்த மதவாத சியோனிச கட்சி மேற்குக் கரையை இஸ்ரேல் தனது ஆட்புலத்திற்குள் இணைத்து அங்கு பரந்த அளவு அதிகாரங்களை பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறது.



**பாலஸ்தீனம் மீதான அடக்குமுறை:**

*1967 போரில் மேற்குக் கரை, கிழக்கு ஜெரூசலத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது. இங்கு தற்போது 600,000க்கும் அதிகமான யூதக் குடியேறிகள் வாழ்கின்றனர். இந்தக் குடியேற்றங்கள் சர்வதேச சட்டத்திற்கு எதிரானதாகும்.*

*இந்நிலையில் ஆட்சி அமைத்த புதிய அரசின் சீர்திருத்தத் திட்டங்கள் குறித்து சட்டமா அதிபர் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதில் உச்ச நீதிமன்ற தீர்ப்புகளை மீறிச் செயற்பட எம்.பிக்களுக்கு அதிகாரம் அளிப்பது இஸ்ரேலிய ஜனநாயகத்தை அச்சுறுத்தும் செயல் என கூறுகின்றனர்.*

**தலைநகரில் பெண்கள் போராட்டம்:**

*இஸ்ரேலில் நீதித்துறை மறுசீரமைப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து இஸ்ரேல் தலைநகரில் ஆயிரக்கணக்கான பெண்கள் சிவப்பு நிற உடை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*இஸ்ரேலில் நீதித்துறையை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வர, அதிபர் நெதன்யாகு தலைமையிலான வலதுசாரி அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில், சர்வதேச பெண்கள் தினத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் சிவப்பு உடை அணிந்து டெல் அவிவ் நகரில் பேரணியில் ஈடுபட்டனர்.*

*இத்திட்டத்தை இஸ்ரேல் அரசு கைவிடும் வரை*

போராட்டம் தொடரும் என பேரணியில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்தனர். இதில் எந்த சமரசமும் இல்லை என்றும் அவர்கள் உறுதிபட தெரிவித்துள்ளனர்.

சர்வதேச மகளிர் தினம் தங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும் நாள் என்றாலும் கூட, உரிமைக்காக போராட வேண்டியது அவசியம் என்று போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

**தெருக்களில் இறங்கி போராட தயார்:**

இஸ்ரேலில் மீண்டும் அதி தீவிர வலதுசாரிகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள நிலையில், மக்களின் பிரச்சனை களுக்காக மீண்டும் தெருக்களில் இறங்கிப் போராட தாங்கள் தயாராக இருப்பதாக இஸ்ரேல் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இஸ்ரேலில் அரசியல் நிலைத்தன்மை சீர் குலைந்து, கடந்த ஐந்து ஆண்டுகளில் நான்கு முறை நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடந்திருக்கிறது. தேர்தல் மீது மக்களுக்கான நம்பிக்கை குறைந்து காணப்படுகிறது.

இந்த நிலையை தீவிர வலதுசாரிகள் தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். நிலையான ஆட்சியைத் தங்களால் தான் தர முடியும் என்று தீவிரமாகப் பிரச்சாரம் செய்தனர்.

இந்தப் பிரச்சாரத்திற்கு மக்களில் ஒரு பகுதியினர் பலியாகி விட்டனர் என்பதை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

கடந்த தேர்தலில் முன்னாள் பிரதமர் பெஞ்சமின் நேதன் யாஹூ தலைமையிலான லிகுட் கட்சி 32 இடங்களில் வெற்றி பெற்றது. அதன் கூட்டணிக் கட்சிகளோடு இணைந்து நாடாளு மன்றத்தில் மொத்தமுள்ள 120 இடங்களில் 64 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மை பலத்தைப் பெற்றது. இதன் மூலம் மீண்டும் நேதன்யாஹூ பிரதமராகப் பொறுப்பேற்றார்.

அத்துடன் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் நாடாளு மன்றத்திற்கு அதிக அதிகாரம் வழங்கும் சட்டத்தையும் அமைச்சர் லெவின் முன் மொழிந்தார்.

இந்தநிலையில் தற்போதைய மசோதாவில், நாடாளு மன்றத்திற்கு அதிக அதிகாரம் கொண்டதாக மாற்றப்பட்டுள் அதுவும் வலதுசாரி மற்றும் மதரீதியிலான பழமைவாத ஆளும்

கூட்டணியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று கூறப் பட்டுள்ளது. மேலும் சுதந்திரமாக நிபுணர்களைப் பயன்படுத்து வதற்குப் பதிலாக அமைச்சர்கள் தங்கள் சொந்த சட்ட ஆலோசகர் களைத் தேர்ந்தெடுக்க அனுமதிக்கும் வகையிலும் சீர்திருத்தம் முன் மொழியப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் உள்ள பழமைவாதிகள் மற்றும் வலதுசாரிகள் நீண்ட காலமாக நீதித்துறை இடதுசாரி சார்பாக உள்ளது என கூறி வருகின்றனர். இதை ஒரு தடையாகவே அவர்கள் பார்க்கின்றனர். மேலும், நெதன்யாகுவின் கூட்டணி அரசாங்கம் இஸ்ரேலியர்கள் சட்ட அமைப்பில் நம்பிக்கை இழந்துவிட்டதாகவும், அதன் சீர் திருத்தத் திட்டங்கள் நீதிபதிகள் தேர்ந்தெடுப்பதில் தலையிட்டு பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தை கொடுக்கும் என்றும் கூறியுள்ளனர்.

மேலும், பாலஸ்தீனிய நிலம், தன்னின சேர்க்கை சமூகத்தை பாதிக்கும் சமூக சீர்திருத்தங்களை குறைக்கவும் அரசாங்கம் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை தங்கள் அதிகாரத்திற்கு உட்படுத்துவதாக கூறியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் லேபிட் (Lapid) கூறுகையில், இந்த சீர்திருத்தம் நாட்டை அழிக்க அச்சுறுத்துகிறது என்று எச்சரித்தார். இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டால், மாநிலத்தின் ஜனநாயக அத்தியாயம் முடிவுக்கு வரும் என்று கூறினார். முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பென்னி காண்ட்ஸூம் இது உள்நாட்டு போருக்கு வழிவகுக்கும் எனவும் எச்சரித்துள்ளார்.

**கூட்டணி அரசு கவிழ்க்கப்படுமா ?**

இதற்கிடையில், நெதன்யாகு தனது விமர்சகர்கள் “நாட்டை அராஜகத்தை நோக்கி அழைத்துச் செல்வதாக” குற்றம் சாட்டினார். மேலும் அவர், “இஸ்ரேலின் பெரும்பாலான குடிமக்கள் அராஜகத்தை விரும்பவில்லை. அவர்கள் கவனம் செலுத்தும் சொற்பொழிவை விரும்புகிறார்கள், இறுதியில் அவர்கள் ஒற்றுமையை விரும்பு கிறார்கள்” என்று கூறினார்.

ஆயினும் பாலஸ்தீனிய நிலம் மீதான ஆக்கிரமிப்பும், அச்சுறுத்தலும் இந்த புதிய அரசியல் சமூக சீர்திருத்தங்களை குறைக்க முடியாது என்பது உண்மையாகும். வரும் நாட்களில் நெதன்யாகு வின் கூட்டணி அரசானது அவரது சொந்த லிகுட் கட்சியாலேயே கவிழ்க்கப்படும் சாத்தியங்கள் உள்ளதாக அறியப்படுகிறது.

# 11

## ஈரானை போருக்கு இழுக்கும் ட்ரோன் தாக்குதல் : இஸ்ரேலில் வலதுசாரி நெதன்யாகு அரசின் திட்டம் !




*மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அணு தொழில் நுட்பத்தை சிறிது சிறிதாக வளர்த்துக் கொண்டிருக்கும் ஈரான் மீது அமெரிக்காவோ, இஸ்ரேலோ அதிரடித் தாக்குதல்கள் எதனையும் தொடுக்குமா என வியந்து கொண்டிருக்கும் வேளையில் 28.1.23 இரவு ஈரான் ராணுவ தொழிற்சாலை மீது ட்ரோன் (Drone Attack) தாக்குதலை இஸ்ரேல் மேற் கொண்டுள்ளது.*

*இந்தத் தாக்குதல்கள், பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகு வின் கீழ், இஸ்ரேலில் புதிதாக நிறுவப்பட்ட அதி தீவிர வலதுசாரி அரசாங்கத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முதல் இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளாகும்.*

*ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் கடந்த வாரம் நிகழ்ந்த பாலஸ்தீன "ஜெனின்" படுகொலையைத் தொடர்ந்து கிட்டத்தட்ட உள்நாட்டுப் போர் மீண்டும் வெடிக்கும் அபாயத்தை யும் இவ் அரசு ஏற்படுத்தி உள்ளது.*

**மத்திய கிழக்கின் பனிப்போர் :**

*ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு இடையே பல காலமாக பனிப்போர் இருந்து வருகிறது. அத்துடன் இஸ்ரேலுக்கு எதிராக செயல்படும் தீவிரவாத அமைப்புகளுக்கு ஈரான் நாடு ஆயுதங்கள் வழங்கி வருவதாக இஸ்ரேல் நீண்ட காலமாக குற்றம் சாட்டி வருகிறது. பாலஸ்தீன மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படாததாலும், லெபனானில் நடை பெறும் நிகழ்வுகளாலும், ஏற்கனவே வெகுவாகக் குழம்பிப் போயுள்ள மத்திய கிழக்கின் ஸ்திர நிலை, ஈரான் நாட்டின் ராணுவ தொழிற்சாலை மீது ட்ரோன் தாக்குதலுடன் மேலும் குழம்பிப் போகுமா என ஐயமுற வேண்டி உள்ளது.*

**கச்சாய் எண்ணெய் விலை உயருமா?**

*ஈரான், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அணு வல்லரசாக மாற எத்தனிக்கும் வேளையில் ராணுவ தொழிற்சாலை மீதான ட்ரோன் தாக்குதல் (Drone Attack) இரண்டு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து மேலும் பகைமையை உருவாக்கி வருகிறது.*

*ஈரானில் ராணுவ தொழிற்சாலை கட்டடத்தின் மீது ஆளில்லா விமானத் தாக்குதலை தொடர்ந்து சர்வதேச ரீதியில் கச்சாய் எண்ணெய் விலை உயர சாத்தியம் என்று உலகப் பொருளியலாளர்கள் கருதுகின்றனர்.*

*மத்திய ஈரானில் இஸ்ஃபர்ஹான் (Isfarhan) நகரில் உள்ள ராணுவ தொழிற்சாலை மேலான தாக்குதலில், இஸ்ரேல் ஏவிய வெடிகுண்டுகளுடன் மூன்று ட்ரோன்கள் வந்துள்ளதாகவும் அதில் இரண்டு ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டு வெற்றிகரமாக அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.*

*ஒரு ட்ரோன் மட்டும் ராணுவ தொழிற்சாலை மீது விழுந்து வெடித்ததாக ஈரான் ராணுவம் தெரிவித்துள்ளது.*

இந்த தாக்குதலில் தொழிற்சாலையின் ஒரு பகுதியில் பெரிய அளவில் தீப்பற்றி எரிந்ததாக தகவல்கள் கூறப்படுகின்றன. ஆனால் உயிர் சேதம் ஏதும் ஏற்படவில்லை என கூறப்படுகிறது.

**மத்திய ஈரானில் தாக்குதல் :**

தலைநகரான தெஹ்ரானில் இருந்து 350 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இஸ்ஃபர்ஹான் (Isfarhan) நகரில் இருக்கும் ராணுவக் கட்டடத்தைக் குறிவைத்தே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக ஈரானியத் பாதுகாப்பு அமைச்சு கூறியது.

சர்வதேச ரீதியில் அநேக நாடுகளுக்கு எரிபொருளை வழங்கிக் கொண்டிருக்கும் இப்பிராந்தியத்தில் ஏற்படும் ஸ்திரமற்ற நிலைமை, குறிப்பாக ஈரான் மீதான தாக்குதல் எரிபொருட்களின் விலை மேலும் உயர வழி செய்யுமா என்றும் ஐயமுற வேண்டி உள்ளது. இது இன்றைய உலகில் பரபரப்பாக விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கேள்வியாகும்.

அதுமட்டுமின்றி ஈரானின் அணு ஆயுத திட்டங்கள் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உள்ள மற்ற நாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக இஸ்ரேல் தெரிவித்து இருந்தாலும் தன் நாட்டில் உள்ள அணு ஆயுத வளம் பற்றி எப்போதும் மூடி மறைத்தே வருகிறது. இது தொடர்பாக இரண்டு நாடுகளுக்கும் இடையே தொடர்ந்து கடும் பனிப் போர் இருந்து வருகிறது.





ஈரானின் முக்கிய அணு எரிபொருள் செறிவூட்டல் நிலைய மான NatanZ இஸ்பஹான் மாகாணத்தில் அமைந்துள்ளது. ஆனால் நகரத்திலிருந்து வெகு தொலைவில் இந்த நிலையம் அமைந் துள்ளது. மேலும், இது சமீபத்திய தாக்குதல்களின் இலக்காகத் தெரியவில்லை. ஒரு பெரிய விமானப்படைத் தளமும் ஈரான் விண்வெளி ஆராய்ச்சி மைய தளமும், ட்ரோன் தாக்குதலால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்சம் ஒரு வெடிமருந்துக் கிடங்கு அல்லது தொழிற்சாலை உட்பட பல சிறிய இராணுவத் தொடர்புடைய வசதிகளும் இங்கு தாக்கப்பட்டு உள்ளதாக மேற்கத்தய செய்திகள் தெரிவித்துள்ளன.

**சி.ஐ.ஏ இயக்குனர் ஜெருசலேம் விஜயம் :**

சி.ஐ.ஏ இயக்குனர் வில்லியம் பேர்ன்ஸ் இஸ்ரேலிய அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக ஜெருசலேமுக்கு விஜயம் செய்ததை அடுத்து, இரண்டு நாள் உத்தியோகபூர்வ கூட்டங்களைத் தொடங்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆண்டனி பிளிங்கனின் வருகையுடன் இந்த தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

கிழக்கு மத்தியதரைக் கடலிலும் இஸ்ரேலியப் பகுதியிலும் 7,500க்கும் மேற்பட்ட துருப்புக்களைக் கொண்ட மிகப் பெரிய அமெரிக்க-இஸ்ரேலிய கூட்டு இராணுவப் பயிற்சிகளை தொடர்ந்து இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஈரானுக்கு எதிரான ஒரு பெரிய போரின் ஆரம்ப கட்டங்களில் வான் பாதுகாப்பு அமைப்புகளை அகற்றுவதற்கான முன்கூட்டிய தாக்குதல்கள் மற்றும் போர் விமானங்களுக்கு வான்வழி எரிபொருள் நிரப்புதல் உட்பட,

*முக்கியமானதாக இருக்கும் அமைப்புகளை சோதிக்கும் நடவடிக்கைகள் இப்பயிற்சியில் அடங்கும்.*

**சி.ஐ.ஏ - மொசாட் இணைந்த தாக்குதல் :**

*இத்தாக்குதல் பற்றி இஸ்ரேல் பத்திரிகை "ஜெருசலேம் போஸ்ட்" பின்வருமாறு எழுதியது:*

*"அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான் போன்ற இலக்குகளைத் தாக்குவதற்கு ஒரு வாரம் முழுவதும் இராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். எனவே இந்தப் பயிற்சிகளுக்குப் பிறகு உடனடியாக அத்தகைய தாக்குதலை நடத்துவது அவர்களின் தீவிரத் தன்மைக்கு ஒரு செய்தியை அனுப்புவதாகும். தாக்குதலுக்கு சற்று முன்பு சி.ஐ.ஏ இயக்குனர் வில்லியம் பர்ன்ஸ் இஸ்ரேலுக்குச் சென்றது, தாக்குதலைத் திட்டமிடும் சி.ஐ.ஏ மற்றும் மொசாட் தலைவர்களுக்கு இடையே ஒரு சிறப்பு நேருக்கு நேர் சந்திப்பின் அவசியத்தை நிரூபிக்கும் என்று அவர்கள் நம்பினர்."*

*இஸ்ரேலின் வரலாற்றில் புதிய நெதன்யாகு வலதுசாரி அரசாங்கம் பிற்போக்குத்தனமான விரிவாக்க நோக்கங்களை மிக அதிக அளவில் உறுதிப்படுத்தி பதவியேற்றுள்ளது. அதன் கொள்கைப் பிரகடன அறிக்கை, இஸ்ரேல் மற்றும் ஆக்கிரமிக்கப் பட்ட மேற்குக் கரையில் யூத மக்களின் "பிரத்தியேக உரிமையை" வலியுறுத்துகிறது.*

*நெதன்யாகு அவ்வாறு செய்யத் தேர்ந்தெடுக்கும் போது மேற்குக் கரையை முறையாக இணைப்பதற்கும், தற்போதைய இஸ்ரேலிய சட்டத்தின் கீழ் கூட சட்டவிரோதமான டஜன் கணக் கான அங்கீகரிக்கப்படாத குடியேற்றங்களை சட்டப்பூர்வமாக்கு வதற்கும் உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த கூட்டணி அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.*

*சமீப வரலாற்றில் உச்ச நீதிமன்றத்தை செயலற்றதாக்கி மற்றும் முழுமையான சர்வ அதிகாரத்தை பெறுவதற்கான இக்கூட்டணியின் அச்சுறுத்தலுக்கு எதிராக யூதர்கள் மற்றும் அரேபியர்கள் பங்கேற்ற மிகப்பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே கண்டுள்ளது.*

# 12

## சிறிலங்கா போரில் இஸ்ரேலின் பங்களிப்பு : ஐ.நா. சபை மூலம் விசாரிக்க வேண்டுதல்!




சிறிலங்காவில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் குறிப்பிடத்தக்க அல்ல பாரிய பங்கைக் கொண்டிருந்தன என மனித உரிமை அமைப்புகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்காக போராடும் Yesh Gvul மற்றும் Torat Tzedek (Israeli human rights organisations Combatant for Peace) ஆகிய செயற்பாட்டாளர்கள் திரட்டிய சான்றுகள், இலங்கையில் நடந்த அட்டூழியங்களில் இஸ்ரேலிய ஆயுதங்களும் இராணுவ உபகரணங்களும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்பதை தெளிவாக வெளிப்படுத்து உள்ளனர்.

**சிறிலங்காவின் போர்க் குற்றங்கள்:**

*சிறிலங்காவின் போர்க் குற்றங்களுக்கு இஸ்ரேல் உடந்தை யாக இருந்தது பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை மூலம் இந்த மனித உரிமை அமைப்புகள் தற்போது கோரியுள்ளன.*

*சிறிலங்காவின் உள்நாட்டுப் போரின் போது, இஸ்ரேல் ஆயுதங்களை விற்று, இலங்கை இராணுவம் கடுமையான அட்டூழியங்களைச் செய்யும் போது அதற்கு ஆதரவாக இருந்தது என தற்போது பல குற்றச்சாட்டுக்களை ஐக்கிய நாடுகள் சபை மூலம் மனித உரிமை அமைப்புகள் தற்போது எழுப்பியுள்ளன.*

*சிறிலங்காவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து 14 ஆண்டுகளுக்கும் மேலாகிறது. 30 ஆண்டுகால மோதலால் அழிக்கப்பட்ட நாட்டின் சில பகுதிகளில் அமைதியின் சாயல் அரிதாக திரும்பியிருந்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி வழங்கப்படவில்லை என்பதே உண்மை.*

*பல ஆண்டுகளாக, ஐக்கிய நாடுகள் சபையும் மனித உரிமை அமைப்புகளும் போரின் போது நடந்த போர்க்குற்றங்களை சிரத்தையுடன் ஆவணப்படுத்தியுள்ளன. அரசாங்கப் படைகளால் நடத்தப்பட்ட அட்டூழியங்கள் மீது ஐநாவின் கவனம் முக்கியமாக இருந்தது. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்திற்கு ஆதரவான நாடுகள் சிவிலியன்களுக்கு எதிராக இழைத்த போர்க்குற்றங்களுக்கு உடந்தை யாக இருந்திருக்கலாம் என்பது பற்றி அதிக கவனம் செலுத்தப்பட வில்லை.*

*அதிக கவனம் செலுத்தப்படாத விடயங்களில், அதில் இஸ்ரேலின் போருக்கான உடந்தையும் ஒன்று. 2000களில், இஸ்ரேலின் இராணுவ தொழில்நுட்பத்தை கணிசமான அளவில் கொள்வனவு செய்து, ஆசியாவில் இஸ்ரேலின் மிக முக்கியமான வாடிக்கையாளர்களில் ஒன்றாக இலங்கை ஆனது. அத்துடன் போரில் ஈடுபட்ட இலங்கைப் படையினருக்கும் இஸ்ரேலியர்கள் பல ஆண்டுகளாக பயிற்சி அளித்தனர்.*

*இந்தக் குற்றங்களில் இஸ்ரேலின் உடந்தையை அம்பலப் படுத்தவும், வழக்குத் தொடரவும் தாங்கள் விரும்புவதாக இஸ்ரேலிய மனித உரிமை அமைப்புகளின் அமைதிக்காக போராடும்* Yesh Gvul *மற்றும்* Torat Tzedek *ஆகிய செயற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.*



**ஆளில்லா UAV விமானங்கள் :**

இலங்கை வானில் இஸ்ரேலிய ஆளில்லா UAV விமானங்கள் பல பயன்படுத்தப்பட்டன.

1970 களின் நடுப்பகுதியில், வியட்நாம் போரில் அமெரிக்கா முன்னர் பயன்படுத்திய பழமையான கண்காணிப்பு ஆளில்லா வான்வழி வாகனங்களை (UAVs) இஸ்ரேல் வாங்கி அவற்றை உருவாக்கத் தொடங்கியது. 1980 களில், இஸ்ரேலிய இராணுவம் லெபனானில் நடந்த போரின் போது இந்த ஆளில்லாத விமானத்தை அட்டூழியமான முறையில் பயன்படுத்தியது. பின்னர் பலஸ்தீன போராட்ட காலத்தில் காசா பகுதியில் அதன் தாக்குதல்களில் பல ஆளில்லா வான்வழி கலங்களை (UAV) பயன்படுத்தியது.

இந்த தாக்குதல் UAVக்கள் முன்மாதிரிகளை உருவாக்கி மத்திய கிழக்கில் பொதுமக்கள் மற்றும் இராணுவ இலக்குகள் மீது மீண்டும் மீண்டும் இஸ்ரேலால் சோதிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் இஸ்ரேலின் மிகவும் விரும்பப்படும் தயாரிப்புகளில் ஒன்றாக இது மாறியது. 1990 கள் மற்றும் 2000 களில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் தீவிரமடைந்திருந்த நிலையில் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலிடம் இருந்து செய்த முக்கிய இராணுவக் கொள்வனவுகளில் இவையும் அடங்கும்.

இலங்கை இராணுவத்தின் சொந்த வார்த்தைகளில் கூறினால்,

இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட UAV கள் “போரில் முக்கிய பங்கு வகித்தன” என மனித உரிமை அமைப்புகள் தற்போது குரல் எழுப்பியுள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படை அதிகாரிகள் பலமுறை பேட்டிகள் மற்றும் அறிக்கைகளில், தாக்குதல்களுக்கு முன், “பொதுமக்களுக்கு பூஜ்ஜிய தீங்கு” என்ற கொள்கையின்படி, அப்பகுதியில் பொதுமக்கள் யாரும் காணப்படவில்லை என்பதை சரிபார்க்க, UAV படம்பிடிக்கப் பயன்படுத்தப்பட்டன என்று கூறியுள்ளனர்.

**பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்பு**

ஆனால், உண்மையில் பொதுமக்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டதற்கான ஆதாரங்களை ஐ.நா.வும், பல மனித உரிமை அமைப்புகளும் தற்போது குற்றஞ்சாட்டியுள்ளன.

ஐ.நா மதிப்பீடுகளின்படி, போரின் கடைசி மாதங்களில் மட்டும், 40,000 முதல் 75,000 வரையிலான தமிழ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் பெரும்பானோர் அரசாங்க பாது காப்புப் படையினரின் வேண்டுமென்றே துப்பாக்கிச் சூடு நடத்திய தால் கொல்லப்பட்டனர் என மனித உரிமை அமைப்புகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

2015 ஐ.நா அறிக்கை UAV களின் பயன்பாட்டைக் கருத்தில் கொண்டு, பொதுமக்கள் உயிர் இழப்பு மற்றும் பொதுமக்களின் சொத்துக்களுக்கு சேதம் உண்டாகியது உண்மையே. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை மீறி அரசாங்கம் மற்றும் இராணுவத் தலைவர்களின் உத்தரவுப்படி இஸ்ரேலிய UAV கள் பொதுமக்களின் மரணங்களை பாரியளவில் உருவாக்கியது. இதன் மூலம் இலங்கை யில் நடந்த போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் மற்ற இஸ்ரேலிய ஆயுதங்களும் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன என்பதனை உறுதிப்படுத்தியது.

**தமிழர்க்கு எதிரான போர்:**

தமிழருக்கு எதிரான போரில், இஸ்ரேலில் தயாரிக்கப்பட்ட Kfir போர் விமானங்கள், Dvora மற்றும் Shaldag போர்க்கப்பல்கள், தாக்குதல் பீரங்கி அமைப்புகள் மற்றும் Gabriel கடலில் இருந்து



கடலுக்கு வீசும் ஏவுகணைகளையும் இலங்கை வாங்கியது.

அத்துடன் இஸ்ரேலிய கண்காணிப்பு UAV கள் இந்த கனரக ஆயுதங்களுக்கு வழிகாட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவை வேண்டுமென்றே பொதுமக்கள் மற்றும் மனிதாபிமான தளங்களை குண்டுவீசி அழித்தன. அத்துடன் கடுமையான செலவில் தமிழருக்கு எதிரான போரை வெல்ல இந்த ஆயுதங்கள் உதவியதும் உண்மையே.

செஞ்சோலை கிராமத்தில் உள்ள சிறுமிகள் காப்பகத்தின் மீது இலங்கை விமானப்படை குண்டுவீசி 80 குழந்தைகளைக் கொன்றதுடன், பலரை காயப்படுத்தியது. ஆகஸ்ட் 14, 2006 இல் இஸ்ரேல் தயாரிப்பு முகசை விமானங்களை உக்ரேனிய விமானிகளே ஓட்டி வந்து இக் கொடூர சம்பவத்தை விளைவித்தனர்.

**செஞ்சோலை படுகொலை:**

இலங்கையில் உள்ள அரசுக்கு ஆயுதங்கள் மற்றும் பயிற்சி களை மற்ற நாடுகளும் வழங்கின. அத்துடன் இஸ்ரேலிய இராணுவ ஆய்வாளர் ஷ்லோமி யாஸின் கூற்றுப்படி, “வழங்கப்பட்ட ஆயுதங் களின் பெறுமதி, பல நூற்றுக்கணக்கான மில்லியன் அமெரிக்க டாலர்களை எட்டுகிறது.” போருக்குப் பின்னர் இஸ்ரேலுக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட இலங்கையின் முன்னாள் தலைமை அதிகாரி டொனால்ட் பெரேராவும் இதனை உறுதிப்படுத்தி யுள்ளார்.

*ஜூலை **21, 2010** அன்று இஸ்ரேலிய Ynet News இணையத் தளத்திற்கு அவர் அளித்த பேட்டியில், பல ஆண்டுகளாக இஸ்ரேல் தமிழர்க்கு எதிரான நமது போருக்கு தகவல் பரிமாற்றம் மற்றும் இராணுவ தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை வழங்கி உதவியது.*

**இஸ்ரேலிலும் இலங்கையிலும் நீதி கேட்கும் தமிழர்:**

*போரின் போது நடந்த அட்டூழியங்கள் குறித்து சர்வதேச அமைப்புகள் மற்றும் மனித உரிமை அமைப்புகளிடமிருந்து திரட்டப்பட்ட சான்றுகள் மற்றும் பல அறிக்கைகள் இருந்த போதிலும், அவர்களுக்கு நேரடியாகப் பொறுப்பானவர்கள் அல்லது இஸ்ரேல் மற்றும் பிற நாடுகளில் இருந்து அவர்களுக்கு மறைமுகமாக உதவியவர்கள் மீது வழக்குத் இதுவரை தொடரப்பட வில்லை.*

*ஐ.நா. இறுதிப் போரின் போது பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. இது **2011** இல் ஊடகங்களுக்கு கசிந்த அதன் சொந்த உள்ளக அறிக்கையில் பிரதிபலித்தது. போருக்குப் பிறகு, ஐ.நா. பாதிக்கப்பட்ட பொதுமக்களை மீண்டும் தோல்வியுறச் செய்யும் வண்ணம், போர்க்குற்றங்கள் மற்றும் குற்றங்களுக்கான நீதியை அவர்களுக்கு வழங்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடந்த மனித குலத்திற்கு எதிராக நடந்த கொடுமைகளை விசாரிக்கவில்லை.*

*பொதுவாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தும் மேற்கத்திய நாடுகள், தமது குறுகிய பொருளா தார, இராணுவ மற்றும் அரசியல் நலன்களுக்காக இலங்கை அரசாங்கத்துடன் வழக்கம் போல் வணிகத்தைத் தொடரவே விரும்புகின்றன.*

*இது உலகெங்கிலும் உள்ள சர்வாதிகாரிகள் மற்றும் அடக்கு முறை ஆட்சிகளுக்கு சிவிலியன்கள் மீதான தாக்குதல்கள் முழுமை யான அளவில் செய்யப்படலாம் என்ற சமிக்ஞையை அனுப்பி யுள்ளது.*

*சமீபத்திய ஆண்டுகளில், இஸ்ரேலிய மனித உரிமை ஆர்வலர்கள், இஸ்ரேலின் நிறவெறிக் கொள்கைகள், மனித நேயத் திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் பாலஸ்தீன மக்களுக்கு எதிரான போர்க்குற்றங்களைத் தடுக்கவும் முயல்கின்றனர்.*

**இஸ்ரேலிய ஈடுபாடு :**

பெப்ரவரி 2002 மற்றும் மே இடையே இலங்கை உள்நாட்டுப் போரில் இஸ்ரேலிய ஈடுபாடு பற்றிய தகவல்களை சேகரித்த அவர்கள், 2009 சர்வதேச மற்றும் இஸ்ரேலிய தண்டனைச் சட்டத்தின் கீழ், இஸ்ரேலிய நிறுவனங்கள், அதிகாரிகள் மற்றும் தனியார் தனிநபர்கள் செய்த குற்றங்களில் ஈடுபட்டுள்ள குற்றவியல் விசாரணையை நியாயப்படுத்த போதுமான ஆதாரங்கள் உள்ளன என கூறியுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட இஸ்ரேலியர்களுக்கு எதிராக குற்றவியல் விசாரணையை ஆரம்பிக்கு மாறு இஸ்ரேலின் அட்டர்னி ஜெனரலிடம் கோரிக்கையை முன்வைக்க அவர்கள் தீர்மானித்துள்ளனர். அதனை சர்வதேச அரங்கிலும் செய்ய முயல்கின்றனர்.

ஆயினும் சட்ட நடவடிக்கைக்கான வாய்ப்பு மிகக் குறைவு. ஒருவேளை இலங்கையில் நடந்த குற்றங்களை உலகம் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் விடலாம்.

காஸாவிலும் மேற்குக் கரையிலும் இஸ்ரேல் தொடர்ந்து குற்றங்களைச் செய்கிறதும் உலகம் அறிந்ததே.

# 13

## இனப்படுகொலையும் சர்வதேச சட்டங்களும்: மானுட வரலாற்றின் துயரமான அத்தியாயங்கள்!



*“இனப்படுகொலை”(Genocide) என்பது முறைப்படுத்தப் பட்ட மற்றும் விரிவான முறையில் இனவரையறை, நிற பேதமை, மதம் மற்றும் தேசியம் என்ற ஏதாவதொரு வகையில் ஒரு இனத்தை பாகுபடுத்தி, அந்த இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதி யாகவோ அழிப்பது ஆகும்.*

*இனப்படுகொலைக்கு எதிராக ஐக்கிய நாட்டு அமைப்பின் புதிய சட்டம் **1951** ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தபின், அதன் அப்போதைய **80** உறுப்பு நாடுகளும் அந்த சட்டத்தின் சரத்துக்களை தங்கள் நாட்டு சொந்த சட்டத்தில் இணைத்தன. இந்த செயலானது, குற்றவாளிகளை பரந்த அளவில் அடையாளம் காண்பதற்கு உதவி புரிந்தது எனலாம்.*

*உலகம் முழுவதும் பல நாடுகளிலும் கடந்த 250 ஆண்டு களில் இனப்படுகொலைகள் என்ற பெயரில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் என ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை லட்சமோ, கோடியோ அல்ல் பல மில்லியன் களைத் தாண்டுகிறது என்பதுதான் உண்மை.*

*ஓர் இனத்தை அது இருந்த சுவடே தெரியாமல் அழிப்ப தாகவும், ஓர் இனத்தின் அல்லது அந்தக் குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழு உறுப்பினர்களுக்கு உடல் மற்றும் உள ரீதியாக மோசமான விளைவுகளை ஏற்படுத்துவதே இனப் படுகொலையாகக் கருதப்படுகிறது. ஓர் இனத்தைச் சேர்ந்த மக்களை கொத்துக் கொத்தாக கொன்று குவிப்பதுடன், அடுத்த தலைமுறை உருவாக விடாமல் தடுப்பதும் இனப்படுகொலையாகப் பார்க்கப்படுகிறது.*

**இனப்படுகொலையானது ஆங்கிலத்தில்** (Genocide*)*

*ஜெனோசைட் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஜெனோ சைட் என்ற வார்த்தையை ரஃபேல் லெம்கின் என்ற போலந்து நாட்டைச் சேர்ந்த யூத வழக்கறிஞர், நாஸி தாக்குதலிலிருந்து தப்பி, அமெரிக்காவில் தஞ்சமடைந்தபோது லத்தீன் - கிரேக்க - பிரெஞ்ச் மூலங்களிலிருந்து உருவாக்கினார் என அறியப்படுகிறது.*

***1933** ஆம் ஆண்டு ஈராக்கில் நடந்த அசீரிய* (Assyrian*) இனப் படுகொலையானது, ரஃபேல் லெம்கின் நினைவை முதலாம் உலகப் போரின்போது நடந்த ஆர்மீனியப் படுகொலையை நோக்கி நினைவு படுத்திச் சென்றது. எனவே இனப்படுகொலை என்ற காட்டு மிராண்டி செயலுக்கெதிரான சர்வதேச சட்ட வடிவுக்கான ஒரு முன் வரவை அவர் ஸ்பெய்ன் தலைநகர் மாட்ரிட்டில் இருந்த சர்வதேச நாடுகள் கூட்டமைப்பின் (லீன் ஆஃப் நேஷன்ஸ்) சட்ட கவுன்சிலுக்கு அப்போது வழங்கினார்.*

*உலகில் இனப்படுகொலை என்பதற்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளும் படியான ஒரு விளக்கத்தை இன்று வரை பெற முடியாததற்கு இந்த அரசியல் பிரச்சனைகளே காரணம் என்றும், விமர்சிக்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு நாடும் தனது அரசியல் நலனுக்கேற்ப இந்த விஷயத்தில் நடந்து கொள்கின்றன.*

*ஒரு இனப்படுகொலை நடந்து முடிந்த பிறகு குற்றவாளி களை தண்டிப்பதற்கு சர்வதேச அளவில் சில நாடுகள் நடவடிக்கை*



எடுக்கின்றன. ஆனால் அந்தப் படுகொலை நடவடிக்கையில் அந்த நாடுகள் ஏன் எதுவுமே செய்வதில்லை என்ற பாரதூரமான விமர்சனம் எப்போதும் உண்டு.

**சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள்:**

இனப் படுகொலை ஒரு சர்வதேச சட்டத்தின் கீழ் தண்டிக்கப் படும் ஒரு குற்றமாகும். இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பிறகு, இனப் படுகொலை என்பது கட்டாயத் தேவையின்படி, ஒரு மாபெரும் சர்வதேச குற்றமாக கருதப்பட்டாலும், அதை விசாரிக்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றங்கள் இருந்தாலும், சம்பந்தப்பட்ட நாடுகளோ அல்லது வலிமை வாய்ந்த நாடுகளோ ஒத்துழைக்காமல் சட்டத்தாலும், நீதிமன்றத்தாலும் எதுவும் செய்துவிட முடியாது என்பது மட்டும் உண்மை.

ஈரானில் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பஹாய் (Bahai) என்ற சமயத்தின் நம்பிக்கையாளர்கள் சுமார் 25 ஆயிரம் பேரை அந்நாட்டு ஷியா இஸ்லாமிய அரசாங்கம் கொன்று குவித்தது. அவர்களின் சொத்துக்களையும், உரிமைகளையும் பறித்தது. பலரை நாட்டை விட்டு விரட்டியது. இன்று வரை அந்நாட்டில் பஹாய்களுக்கு கொடுமைகள் நடந்தவண்ணம் உள்ளன.

தொடரும் துயரமாக முதலாம் உலகப்போர் சமயத்தில் ஆர்மீனியா நிலத்தில் துருக்கியர்களால் லட்சக்கணக்கில் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர். ஈராக் மற்றும் துருக்கி பிராந்தியத்தின் ஆயிரக்கணக்கான குர்துக்கள் கொல்லப்பட்டனர்.

பின்னர் இரண்டாம் உலகப் போரின் போது, பல லட்சம் யூதர்களை ஹிட்லரின் நாஸிச அரசு படுகொலை செய்தது.

**உலகப் போர்களில் இனப்படுகொலை:**

முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு சேர்ந்த துருக்கி தோல்வியடைந்தது. தோல்விக்கு பழிவாங்கும் முகமாக ஆர்மீனியர்கள் மீது மிகவும் கோபமடைந்தது ஓட்டோமன் அரசு.

துருக்கு பேரரசைச் சேர்ந்த ராணுவத்தின் மூலம் ஆர்மேனியர்கள் துரோகிகள் என அவர்கள் குற்றம் சாட்டப்பட்டு, கைது செய்து பலர் கொல்லப்பட்டனர். 1915இல் துருக்கி ஓட்டோமன் பேரரசு, முதல் உலகப்போர் தொடங்கும் சமயத்தில் தங்களது இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ள அந்தப் போரில் ஈடுபட முடிவு செய்தது.

ஏற்கெனவே இழந்த செல்வாக்கினை மீட்க இது உதவும் என்று நம்பி அவர்கள் அதில் இறங்கினர். முதல் உலகப்போரில் ஜெர்மனியோடு இணைந்து களம் கண்டது ஓட்டோமன் அரசு.

துருக்கியின் உள்நாட்டில் அதிகாரச்சண்டை அந்நாட்டிற்கு மற்றொரு தலைவலியாக அமைந்தது. இந்த நிலையில் நிறைய புரட்சி இயக்கங்கள், நாடு முழுவதும் பலவாறாகத் தோன்றின. இதற்கெல்லாம் காரணம் யார் என்று ஆராய்ந்தபோது, ஆர்மீனியர்கள்தான் என்று குற்றஞ்சாட்டி அவர்களை படுகொலை செய்தது.

இவ்வாறாக 1915 முதல் 1918-ம் ஆண்டுவரை ஓட்டோமன் அரசால் 5 முதல் 12 லட்சம் ஆர்மீனியர்கள் கொல்லப்பட்டனர்.

**ஹிட்லரின் யூத படுகொலை :**

யூதர்களை கொடுமைப்படுத்துவது, துன்புறுத்துவது, கொலைசெய்வது என இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த சூழலில், தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. உண்மையில் ஹிட்லரால் ஜெர்மனியில் யூதர்கள் கொடூரமாக திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

யூதர்கள் நெருக்கடியான பகுதிகளில் அடைத்து வைக்கப்பட்டு, பின்னர் அங்கிருந்து சரக்குத் தொடர் வண்டிகள் மூலம் நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்த வதை



*முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். பலர் வழியிலேயே இறந்து போயினர். எஞ்சியோர் நச்சுவாயு அறைகளுள் அடைத்துக் கொல்லப்பட்டனர்.*

*இரண்டு வகையான முகாம்களை நாஜிக்கள் அமைத்தனர். ஒன்று, சாதாரண கைதி முகாம். இதில் கைதிகளை அடிமைபோல் நடத்தி, அவர்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்குவார்கள். தேவை யில்லாமல் கொல்லமாட்டார்கள். இன்னொன்று வதை முகாம்கள், இவை யூதர்களை கொல்வதற்காகவே உருவாக்கப்பட்டதாகும்.*

**கம்போடியாவில் பொல் பொட் அரசின் கோரம் :**

*கம்போடியாவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டும் என்று எண்ணினார் ஆட்சியேறிய பொல் பொட் (* Pol Pot *)அரசு. அனைவரும் விவசாயம் செய்ய வேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்பட்டனர். குறிப்பாக **1975-1979** காலகட்டத்தில், பொது மக்களின் சொத்துக்கள் அனைத்தும் பொதுவுடைமை ஆக்கப்பட்டு, பொல் பொட் அரசால் கைப்பற்றப்பட்டது.*

***1953**-ம் ஆண்டு கம்போடியா பிரான்ஸிடமிருந்து விடுதலை அடைந்த பின், சிஹானக் கம்போடியா அரசனாகப் பொறுப் பேற்றார். கம்போடியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (கிமேர் ரூஜ்) தலைவர் ஆன பொல் பொட் சிஹானக்கை பதவியிறக்கி, பின்னர் **1976**-ல் பொல் பொட் பிரதமராகப் பதவியேற்றார். வணிகம், மருத்துவம், தொழில்துறை எனப் பல துறைகள் எல்லாம் நிறுத்தப்பட்டன.*

*ஆட்சியாளர்களை எதிர்த்து போராடிய மக்களைச் சிறையி லடைத்து சித்ரவதை செய்தும் பசி, பட்டினி மற்றும் சட்டவிரோத மான முறையிலும் படுகொலைகள் அரங்கேற்றப்பட்டன.*

*குருட்டுத்தனமான கொள்கையும், செயல்முறைப்படுத்தாத திறனும் மக்களை வாட்டின. சுமார் 20 லட்சம் மக்கள் இம்முறையில் கொல்லப்பட்டனர்.*

**தொடரும் படுகொலைகள்:**

*1975-ல் கிழக்குத் திமோர் மீது இந்தோனேஷியா எடுத்த படையெடுப்பு இனப்படுகொலைகளாக முன்வைக்கின்றனர். அமெரிக்க செவ்விந்தியர்கள், பாலஸ்தீனியர்கள், காங்கோ, சோமாலியா, கொசாவா என உலக நாடுகளின் வரலாற்றில் "இனப் படுகொலைகள்" தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கின்றன என்பது நிதர்சனம். பரவலாக பல நூற்றாண்டுகளில் நடந்த மத மோதல்கள் ஏராளமான மக்கள் தேவையின்றி அழிவதற்கு காரண மாயின. ஒரு மதம், தான் பரவ வேண்டும் என்பதற்காக இன்னொரு மதத்தை அழித்தது. ஆயினும் உலகில் தோன்றிய எத்தனையோ மறைநெறிகள் இந்தக் கொடுமையை தடுப்பதற்கான போதனைகளை கூறிய போதிலும், மனிதர்கள் தொடர்ந்து அதை மறந்து விடு கிறார்கள் என்பதே நிஜமாகும்.*

**ருவாண்டா இனப்படுகொலை (1994)**

*ஜெர்மனியின் காலனியாதிக்கத்தின்கீழ் இருந்த நாடு ருவண்டா, புருண்டி. இங்கு டூட்சி, ஹூட்டு என்ற இரண்டு இன குழுக்கள் வாழ்ந்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக டூட்சி இன மக்கள் ஆண்டுவர, பல நூற்றாண்டு காத்திருப்புக்குப் பிறகு, 1972-ல் புருண்டியில் ஹூட்டுகளின் புரட்சி தொடங்கியது.*

*1994 ஏப்ரல் 7 அன்று ஹூட்டு இன மக்கள், டூட்சி இனத்தவரை கொல்லத் திட்டமிட்டனர். பெரியவர், சிறியவர் எனப் பாரபட்சம் இல்லாமல் அனைவரையும் கொன்று குவித்தனர் ஹூட்டு இனத்தினர். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சத்துக்கும் மேற்பட்டோர் அகதி களாக அண்டை நாடுகளில் தஞ்சமடைந்தனர். அத்துடன் ஆயிரக் கணக்கானோர் முடமாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.*




**போஸ்னியா இனப்படுகொலை**

*பால்க்கன் பிராந்தியத்தில் யூகோஸ்லாவியாவிடமிருந்து பிரிந்த நாடு போஸ்னியா ஆகும். 1990களில் புதிதாக உருவாக்கப் பட்ட தேசம் என்பதால் நாடு முழுவதும் குழப்பம் ஏற்பட்டது. அங்கே போஸ்னியர்கள், செர்பியர்கள், குரேஷியர்கள் என மூன்று வகையான இன மக்கள் வாழ்ந்து வந்தனர். குரேஷிய அதிபருக்கும், போஸ்னிய அதிபருக்கும் ஓர் ஒப்பந்தத்தில் முரண்பாடு ஏற்பட, அங்கிருந்து தொடங்கியது இப்பிரச்சினை.*

*போஸ்னியாவில் 1993-ம் ஆண்டில் 2000 பேர் கொலை செய்யபட்டனர். 64 இஸ்லாமியர்களைக் கைது செய்து பேருந்தில் அடைத்து, தீவைத்துக் கொளுத்தினர். இதில் 56 பேர் இறந்தனர்.*

*செர்பிய ராணுவ ஆட்சியில் 1992-1995 காலகட்டத்தில் இரண்டு லட்சம் பேர் கொல்லப்பட்டனர். நான்கு லட்சம் பேர் காணாமல் போனார்கள்.*

**டார்ஃபுர் - சூடான் இனப்படுகொலை**

*ஆப்பிரிக்காவின் சூடானில் உள்ள டார்ஃபுர் மாநிலத்தில் நடைபெற்ற இப்படுகொலை பொருளாதார ரீதியாக முக்கியமான தாகும். சூடானின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகள் சண்டை யிட்டுக் கொள்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தன. இந்நிலை யில் மேற்கு சூடானில் உள்ள டார்ஃபுரில் எண்ணெய் வளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வடக்கு மற்றும் தெற்கு பிரச்னை*

மேலும் கொளுந்துவிட்டு எரிந்தது. இவ்வாறாக 1972-ல் உள்நாட்டு யுத்தம் முடிந்து, 1983-ல் மீண்டும் துளிர்விட ஆரம்பித்தது.

கிட்டத்தட்ட 20 வருடங்களில் 20 லட்சம் பேர் உயிரிழந்தனர். 40 லட்சம் பேர் வீடுகளை இழந்து அகதிகளாகினர். தென் சூடான் தனி நாடாக ஜூலை 2011-ல் அமைதி உடன்படிக் கையில் கையெழுத்திட்டது சூடான் அரசு.

**ஈழத்தில் தமிழர் படுகொலை :**

ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலை பெரும் வலியையும், ஆற்றாமையையும் இப்போதும் எங்கள் ஈழமண் துயரங்களுடன் தேக்கி வைத்திருக்கிறது. விடியலுக்கான நீண்ட பயணம் தொடர்கிறது.

1983-ம் ஆண்டு "கறுப்பு ஜூலை" சம்பவம் இன்றளவும் நீங்கா வடுவாக தமிழர்கள் மத்தியில் நிலவுகிறது. கண்ணில்பட்ட எல்லோரையும் கொன்று, பெண்கள் பலரும் பாலியல் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன், படுகொலையும் செய்யப்பட்டனர்.

1958, 1977, 1983-ம் ஆண்டுகளில் நடந்த இனக்கலவரங்கள் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. ஈழப் போராட்டம் ஆரம்பித்த பின்பு வானூர்திகளிலிருந்து கண்மூடித்தனமாக குண்டுவீசுதல், ஏவுகணை வீச்சு, நேரடித் தாக்குதல் போன்றவற்றின் மூலம் இதுவரை சுமார் லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் அகதிகளாயினர்.

இன்னமும் தொடரும் துயரமாக, அரசியல் மற்றும் பொருளாதார தேவைகள் மட்டுமே மனிதர்கள் அழிய காரணமாவ தில்லை. பல சமயங்களில் அதைவிட சித்தாந்தம், கொள்கை, இனப்பெருமை போன்ற விஷயங்கள் பெரும்பாலான மனித அழிவிற்கு காரணமாகின்றன.

வரலாற்றில் மனித இனம் தோன்றியதிலிருந்து ஒரு இனம் மற்றொரு இனத்தை அழித்து, தனது தேவைகளுக்காக அவர்களின் சொத்துக்களை கவர்ந்து, அவர்களின் இடத்தை ஆக்கிரமித்து வாழ்ந்து வருவதானது இன்று வரையில் ஏதாவது ஒரு வடிவத்தில் தொடர்ந்து வருகிறது. மானுட தர்மம் நீதியற்று போயுள்ளதையே வரலாற்றின் துயரமாக பார்க்கலாம்.

# 14

## அரபு – சர்வதேச அமைதிப்படை : மீண்டும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு ?




காசாவில் போருக்கு பின்னரான தீர்வுத் திட்டம் என்னவாக இருக்கும் என்பதில் பல்வேறு ஊகங்கள் எழுந்துள்ளன. மேற்கு கரை (West Bank) போன்ற பாலஸ்தீனிய அதிகாரம் திரும்புதல், அல்லது அரபு - சர்வதேச இராணுவ அமைதிப்படை பிரசன்னம் அல்லது இஸ்ரேலிய மறு ஆக்கிரமிப்பு ஆகிய அனைத்தும் காசாவின் எதிர் காலத்திற்கான திட்டங்கள் என இராணுவ அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**அரபு -சர்வதேச அமைதிப்படை :**

ஆயினும் அரபு - சர்வதேச அமைதிப்படை பிரசன்னத்தை

*விட மீள இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி நிரலே சாத்தியமாக இடமுண்டு.*

*காசா போரின் உடனடி தாக்கம் என்பது, மத்திய கிழக்கு முழுவதும் மேலும் பரவும் பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கும் என்றே முதலில் எதிர்பார்க்கப்பட்டது.*

*ஹமாஸ் அமைப்பு தெற்கு இஸ்ரேலில் ஊடுருவி தாக்கிய பிறகு, போரில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கு முக்கிய கேள்வியாக, காசாவின் எதிர் காலத்தில் கவனம் செலுத்துவது இப்போது மிகவும் முக்கியமானது.*

*போர் முடிவின்பிறகு காஸாவில் என்ன அரசியல் ஒழுங்கு உருவாகும் என்பது தெளிவாக இல்லை. எவ்வாறாயினும், அமெரிக்க வெள்ளை மாளிகை தரப்பில் பாலஸ்தீனிய அதிகார சபையின்* (PA) *பிரதிநிதிகள் முன்னணி பாத்திரத்தை வகிப்பது முக்கியம் என்று ஜோ பைடன் நிர்வாகம் தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளது. ஆயினும் காசா பகுதிக்குள் இஸ்ரேல் புகுந்து ஹமாஸிடம் இருந்து கைப்பற்று வது சட்ட பூர்வமற்றதாகவே பல அரபு நாடுகள் கருதுகின்றன.*

*இந்த யுத்தம் முடிவடைந்தவுடன் காசாவில் ஹமாஸுக்குப் பதிலாக பாலஸ்தீனிய அதிகார சபையின் மஹ்மூத் அப்பாஸ் தலைமை ஏற்க சாத்தியக்கூறுகளை பைடன் அரசு சுட்டிக்காட்டி உள்ளது. இருப்பினும், இந்த யோசனை மிகவும் சிக்கலானது ஆகும். காசாவில் உள்ள பாலஸ்தீனியர்களில் ஒரு சிறிய சதவீதத்தினர் மட்டுமே அப்பாஸின் அரசுக்கு ஆதரவு என தெரிவிக்கின்றனர்.*

**காசாவில் அப்பாஸ் ஆதரவு இல்லை:**

*அக்டோபர் 7 ஆம் தேதி நடந்த திடீர் தாக்குதலுக்கு இஸ்ரேலின் பதிலடியின் எதிர்பாராத விளைவுகளில் ஒன்று, பல ஆண்டுகளாக மேற்குக் கரையில் ஆதரவை இழந்து வரும் அப்பாஸின் ஃபத்தா கட்சியின் ஆதரவு இன்னமும் குறைவதாகும். ஆனாலும் ஹமாஸின் புகழ் அதிகரித்தது என்பது உண்மையே.*

*அமெரிக்கா, இஸ்ரேலால் நியமிக்கப்பட்டவர் என்றும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் ஊழல் வேலைக்காரன் "அப்பாஸ்" என்று பாலஸ்தீனியர்களிடையே பெயரைப் பெற்றுள்ளார். இதன் விளைவாகவே ஆளும் ஃபத்தாவின் பிரபல்யத்தில் பாரிய சரிவு ஏற்பட்டது.*



மஹ்மூத் அப்பாஸ் ஒரு பாலஸ்தீனியத் தலைவராகினும், முற்றிலும் பயனற்றவர், மேலும் அவர் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவிடமிருந்து உத்தரவை ஏற்றுக்கொள்கிறார் என்ற குற்றச்சாட்டும் பரவலாக உள்ளது.

பாலஸ்தீனியர்களுக்கு எதிரான யூத குடியேற்றவாசிகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைத் தடுக்க இஸ்ரேல் எந்தவிதமான கட்டுப்பாட்டையும் காட்டாதபோது அல்லது இஸ்ரேலுடனான ஒத்துழைப்பால் மஹ்மூத் அப்பாஸ் அரசால் என்ன நன்மைகள் உள்ளன என்ற பாலஸ்தீன மக்களின் ஆவேசமும் உள்ளது.

இந்த இக்கட்டான சமீபத்திய ஆண்டுகளில் மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதன் பிரதிபலிப்பாக, காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் மஹ்மூத் அப்பாஸ் அரசு ஆட்சியை ஏற்க காணும் வாய்ப்பு அதிகம் என்றே கருதுகின்றனர்.

ஆயினும் ஜனநாயக வழியில் காஸாவில் பாலஸ்தீனியர் களால் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலில் தேர்ந்தெடுக் கப்படுவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவு என்றே கருதப்படுகிறது.

காசா நகரில் இஸ்ரேலிய தாக்குதல்களால் ஏற்பட்ட அழிவின் மத்தியில் இடம்பெயர்ந்த பாலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளிலிருந்து அகதிகளாக அல்லற்படும் வேளையில், எந்த ஒரு அரபு நாட்டின் இராணுவமும் உதவவில்லை என்ற ஆதங்கமும் உண்டு.

**போருக்கு பிந்திய நிர்வாகம்:**

*காசாவில் போருக்குப் பிந்திய நிர்வாகத்தை நிர்வகிக்கும் அரபு-சர்வதேச அமைதிப்படை பற்றி சில எண்ணங்கள் உள்ளன. ஆனால் அரபு நாடுகளின் கண்ணோட்டத்தில், பாலஸ்தீனத்தை இஸ்ரேலும் அதன் மேற்கத்திய ஆதரவு அரசுகளுமே நிர்வகிக்க வேண்டிய நெருக்கடி என்றும், அதை நிர்வகிப்பது அரபு நாடுகளின் பொறுப்பல்ல என்ற கண்ணோட்டமும் உள்ளது.*

*மேலும், காசாவின் பாதுகாப்பு பொறுப்பில் அமர்த்தப்படும் எந்தவொரு அமைதிக்கான அரேபிய இராணுவப் படையும் பெரும் ஆபத்துக்களுக்கு உட்படும். பஹ்ரைன், எகிப்திய, அல்லது ஜோர்டானியப் படைகள் இஸ்ரேலின் பங்காளிகளாகவோ மாற வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்ற அச்சமும் உள்ளது.*

*இதனாலேயே போருக்குப் பிந்தைய காசா ஆளுகையின் பொறுப்பை அரபு - சர்வதேச அரசுகள் ஏற்றுக்கொள்வதில் சாத்தியங்கள் அரிதாக உள்ளன. காசாவில் தற்போதைய மோதலுக்குப் பிறகு பொதுமக்கள் இன்னும் அதிகமாக ஆத்திரத்துடன் இருக்கும் தருணத்தில், காசா ஆளுகையின் பொறுப்பை எந்த அரபு - சர்வதேச அரசுகள் ஏற்றுக்கொள்வதை எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்ற சந்தேகங்களும் உள்ளன.*

*காசாவில் மனிதாபிமான தேவைகள் அதிகமாக இருக்கும் வேளையில், மக்கள் ஆத்திரம் மற்றும் வெறுப்பு நிறைந்தவர்களாக உள்ளார்கள்.*

*டிசம்பர் மாத தொடக்கத்தில் பஹ்ரைனில் நடந்த ஐஐஎஸ்எஸ் (IISS) மனமா பாதுகாப்பு உச்சி மாநாட்டில் ஜோர்டானின் வெளியுறவு மந்திரி அய்மன் சஃபாடி பேசுகையில், காசாவிற்கு அரபு துருப்புக்கள் எதுவும் செல்லாது என்றும் அரபு நாடுகளை பாலஸ்தீன பொதுமக்கள் எதிரிகளாக பார்க்க வேண்டிய தேவையில்லை என்றும் வலியுறுத்தினார்.*

*அரபு அமைதிப்படை பற்றிய யோசனை நிராகரிக்கப்பட வேண்டும் என்பதில் அரபு அரசாங்கங்கள் முழுதாக உடன்படுகின்றன என்று அம்மானின் தலைமை இராஜதந்திரி வலியுறுத்தினார். இந்த யோசனையை ஏற்பது இஸ்ரேலின் அரசாங்கத்திற்கு அரபு நாடுகள் உங்கள் குழப்பத்தை சுத்தம் செய்ய தயாராக இருப்பதாக தவறான செய்தியை அனுப்பும் எனவும் கூறினார்.*




**காசாவை இஸ்ரேல் மீண்டும் ஆக்கிரமிப்பு:**

*பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாஹுவின் தீவிர வலதுசாரி அரசாங்கம், காசா ஆளுகையின் எதிர்காலத்தில் இஸ்ரேல் நேரடிப் பங்கை வகிப்பதைப் பற்றிக் குரல் கொடுத்துள்ளது.*

*ஆயினும் ஹமாஸுக்குப் பிந்தைய காலகட்டத்தில், காசா மீதான நேரடி இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு திரும்பக் கூடாது என்று அமெரிக்க பைடனின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.*

*6,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட குறைந்தது 18,000 பாலஸ்தீனியர்கள் காசாவில் அக்டோபர் 7 முதல் இஸ்ரேலால் கொல்லப்பட்டுள்ளனர்.*

*எனவே, இஸ்ரேல் காசாவில் தனது இராணுவப் பிரசன்னத்தை நிலைநிறுத்துவதில் உறுதியாக இருந்தால், காசாவின் எதிர்காலத்தில் தொடர் வன்முறை மற்றும் ஆயுதமேந்திய எதிர்ப்பிற்கான செய்முறைக்கு வழிவகுக்கும். இதுவே இஸ்ரேலின் இராணுவத்திற்கு தொடர்ந்து உயிரிழப்புகளை ஏற்படுத்தும்.*

*இஸ்ரேல் ஏற்கனவே நிலத்தை ஆக்கிரமித்துள்ளது, ஆனால் ஒரு தந்திரோபாய ஆக்கிரமிப்பு என்பது அமைதிக்கான வெற்றியிலிருந்து வெகு தொலைவில் உள்ளது. அமைதி அங்கே திரும்புவது வெகு தொலைவில் தான்.*

*நிலைமை சீரடைவதற்கு நீண்ட காலம் ஆகும், என்று*

*மிலனை தளமாகக் கொண்ட சர்வதேச அரசியல் ஆய்வுகள் நிறுவனத்தின் (ISPI) அறிக்கை விளக்கியுள்ளது.*

*இறுதியில், காசாவில் போருக்குப் பிந்தைய நிலைமைக்கு இஸ்ரேலிய தலைமை ஒரு தெளிவான, யதார்த்தமான மூலோபாயத்தை வகுக்கத் தவறிவிட்டது என்று உறுதியாகக் கூறலாம்.*

*அதேவேளை பாலஸ்தீனியர்கள் அழிக்கப்பட்ட பகுதிக்கு திரும்ப முடியாது. அத்தகைய மறுசீரமைப்புக்கான பொருளாதார பலம் அவர்களிடம் இல்லை. எனவே, அவர்கள் எங்கு வாழ வைக்கப்படுவார்கள் என்பதும் பாரிய ஒரு கேள்விக்குறியாகும்.*

**இரு நாடுகள் தீர்வு :**

*சர்வதேச சமூகம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் பாலஸ்தீன பிரச்சினைக்கு இரு நாடுகளின் தீர்வு குறித்து அக்கறை காட்டுகின்றனவா என்பதும் சந்தேகத்துக்குரியதாக உள்ளது.*

*துரதிர்ஷ்டவசமாக, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய கொள்கை வகுப்பாளர்கள் ஹமாஸை மோதலுக்குக் காரணம் என்று மதிப்பிடுகிறார்கள். மோதலுக்கு ஹமாஸ் மட்டும் காரணம் அல்ல. பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலை எதிர்க்கக் காரணமான அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல், காசாவிலோ அல்லது இஸ்ரேலிலோ எந்த நேரத்திலும் அமைதி இருக்காது என்பது வரலாற்றுப் பாடமாகும்.*

*காசாவில் இன்னோர் “நக்பா” என்ற திட்டத்தை நிறைவேற்ற தற்போதைய இஸ்ரேலிய அரசாங்கம் முயலுமா என்பது பற்றி இப்போது கூற முடியாது விட்டாலும், இஸ்ரேல் அடைய விரும்பும் இன அழிப்பு இலக்குகள் ஆபத்தானவையாக தெரிகிறது.*

# 15

## எகிப்தின் போர் நிறுத்த திட்டம்: ஹமாஸ் மறுதலிப்பால் யாருக்கு அழிவு?



*பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு, முன்பு ஹமாஸ் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் 2.3 மில்லியனில் பெரும்பான்மையான மக்கள் இடம்பெயர்ந்து உள்ளனர். காசா பகுதியில் இஸ்ரேலின் போரில் நிரந்தரப் போர்நிறுத்தத்தை ஏற்படுத்த ஹமாஸ் மற்றும் அதன் கூட்டணி இஸ்லாமிய ஜிஹாத் இடையே எகிப்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.*

*காசாவில் மனிதாபிமான பேரழிவு தொடர்கிறது, சர்வதேச சமூகம் இதைத் தடுக்க அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும் என காசாவில் போரை முடிவுக்கு கொண்டுவரும் திட்டத்தை எகிப்து முன்வைத்துள்ளது.*

*காசாவில் 8,200 குழந்தைகள் உட்பட 20,400க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களைக் கொன்று குவித்த வான்வழி மற்றும் தரைவழிப் போரை இஸ்ரேல் தொடர்கிறது. இவ்வேளை எகிப்தின் காசா போர்நிறுத்த திட்டத்தை விவாதிக்க இஸ்ரேலின் பிளவுபட்ட போர் அமைச்சரவையும் கூடி ஆராய்ந்துள்ளது.*

*ஆனால் இத்திட்டத்தின் படி காசாவில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான ஆலோசனையை ஹமாஸ் நிராகரிப்பதாக அறிவித்து உள்ளது.*

**எகிப்தின் முன்மொழிவுகள் :**

*எகிப்திய அரசால் 25.12.2023 திங்களன்று இஸ்ரேல், ஹமாஸ், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய அரசாங்கங்களுக்கு முன் வைக்கப்பட்ட இந்த முன்மொழிவு, காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் முழுமையாக வெளியேறுவதையும், ஹமாஸ் கைதிகள் மற்றும் பல பாலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்படுவதையும், பாலஸ்தீன அரசாங்கம் நிறுவப்படுவதை, வளைகுடா நாடான கத்தாருடன் இணைந்து இந்த முன்மொழிவு உருவாக்கப்பட்டது.*

*பல சுற்று கைதிகள் பரிமாற்றங்களை உள்ளடக்கியதுடன், நிரந்தர போர்நிறுத்தத்திற்கு ஈடாக காசா பகுதியில் உள்ள அதிகாரத்தை ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் கைவிட வேண்டும் என்று எகிப்து முன்மொழிகிறது என எகிப்திய ஊடக வட்டாரங்கள் தெரிவித்தன.*

*ஆனால் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் அத்தகைய முன்மொழிவை நிராகரித்ததாக எகிப்திய வட்டாரங்கள் பின்னர் தெரிவித்தன. காசா போருக்குப் பிந்தைய எதிர்காலத்தை பாலஸ் தீனர்களே தீர்மானிக்க வேண்டும், வெளிநாட்டு ஆணையின்படி அல்ல என்று இரு குழுக்களின் தலைவர்களும் பலமுறை வலியுறுத்தி வருகின்றனர்.*

*பிரதம மந்திரி பெஞ்சமின் நெதன்யாகு ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் முழுதாக அழிக்கப்பட வேண்டும் என்று இஸ்ரேல் இராணுவத்திடம் கோரியுள்ளார். இது காசா மக்களின் அனைத்து ஆளுகை திறன்களையும் தகர்ப்பதுடன் காசா மக்களின் வாழ்வை சீரழிக்கும்.*

*தற்போது காசாவில் போராளிக் குழுக்களை அதிகாரத்தில்*




இருந்து அகற்றுவது நிறைவேறுமா என்பது உடனடி சாத்தியமாக தெரியவில்லை.

**எகிப்து போர்நிறுத்த பரிந்துரை:**

எகிப்து பல கட்ட போர்நிறுத்தத்தை பரிந்துரைத்துள்ளது. ஆரம்ப தற்காலிக போர்நிறுத்தம் ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு நீடிக்கும் என்று எகிப்திய வட்டாரங்கள் தெரிவித்தன. தற்காலிக போர் நிறுத்தம் மீள புதுப்பிக்கப்படலாம்.

பாலஸ்தீன அதிகாரிகளின் கூற்றுப்படி, இது மூன்று கட்ட போர்நிறுத்தம் என்று கூறப்பட்டது.

முதல் 10 நாள் மனிதாபிமான போர்நிறுத்தத்தின் போது ஹமாஸ் சிறைபிடிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் அனைவரையும் விடுவிக்கும். பதிலுக்கு, இஸ்ரேல் ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையிலான பாலஸ்தீன கைதிகளை அதே வகைகளில் விடுவிக்கும். அனைத்து சண்டைகளையும் நிறுத்தி, மக்கள் வசிக்கும் பகுதிக்கு மருத்துவ மற்றும் உணவு உதவி, எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு விநியோகத்தை அனுமதிக்கும். வடக்கு காசாவிற்கு மக்கள் மீண்டும் செல்லவும் இது அனுமதிக்கும்.

இரண்டாவது கட்டத்தில் ஹமாஸ் அனைத்து இஸ்ரேலிய பெண் வீரர்களையும் விடுவிக்கும். பதிலுக்கு இஸ்ரேல் சிறையில்

அடைக்கப்பட்ட பாலஸ்தீனர்களின் மற்றொரு குழுவை விடு விக்கும். மூன்றாவது கட்டம் ஒரு மாதம் நீடிக்கும், மேலும் பேச்சு வார்த்தைகள் நடக்கையில் பாலஸ்தீனிய கைதிகளின் எண்ணிக் கைக்கு ஈடாக ஹமாஸ் காவலில் உள்ள அனைத்து பிணைக் கைதி களையும் விடுவிக்க வேண்டும். இஸ்ரேல் காசாவில் இருந்து டாங்கிகளை திரும்பப் பெறுவ துடன் இரு தரப்பும் அனைத்து போர் விரோத நடவடிக்கைகளையும் நிறுத்தும்.

**எகிப்தின் திட்டம் ஹமாஸ் நிராகரிப்பு:**

கெய்ரோவில் எகிப்திய மத்தியஸ்தர்களுடன் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தி வரும் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் ஆகிய இரண்டும் இஸ்ரேலின் “ஆக்கிரமிப்பு” முடிவுக்கு வரும் வரை சண்டையை நிறுத்தாது என்று தெரிவித்தன.

ஹமாஸின் மூத்த அதிகாரி ஒசாமா ஹம்டன், லெபனானில் செய்தியாளர் சந்திப்பின் போது, போர்நிறுத்தம் குறித்த ஹமாஸ் இயக்கத்திற்கு முன்வைக்கப்பட்ட முன்முயற்சிகள் குறித்து கேட்டபோது, பல யோசனைகள் உள்ளன, அவை முன்வைக்கப்படு கின்றன, நாங்கள் அந்த யோசனைகளைக் கையாளுகிறோம், நாங்கள் ஆக்கிரமிப்புக்கு ஒரு விரிவான முடிவை விரும்புகிறோம், தற்காலிக சண்டைகள் அல்ல. அதற்கு வழிவகுக்கும் யோசனைகளுக்கு நாங்கள் கதவை திறந்திருக்கிறோம் என்று ஹம்தான் கூறினார்.

இஸ்ரேலிய சிறைகளில் உள்ள அனைத்து பாலஸ்தீனியர் களும் விடுவிக்கப்பட வேண்டும் என்று ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தை வலியுறுத்துகின்றன.

இஸ்ரேல் மற்றொரு மட்டுப் படுத்தப்பட்ட போர்நிறுத்தத் திற்கு கதவை திறந்துள்ளது. ஆனால் போரை நிறுத்த வேண்டும் மற்றும் காசாவில் இருந்து படைகளை திரும்பப் பெற வேண்டும் என்ற பாலஸ்தீனிய போராளிகளின் கோரிக்கைகளை நிராகரித் துள்ளது.

**போருக்குப் பிந்திய காசா நிர்வாகம்:**

போருக்குப் பிந்திய காசா நிர்வாகம் பற்றிய யோசனையில், காசாவின் நிவாரண உதவி மற்றும் புனரமைப்பு மற்றும் தேர்தலை நடத்தி அரசாங்கத்தை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தைகளை எகிப்து உருவாக்கியுள்ளது.



*எகிப்தின் இந்த பிரேரணையின் இறுதிக் கட்டம் காசாவி லிருந்து இஸ்ரேல் வெளியேறுவதுடன், இடம்பெயர்ந்தவர்களைத் திரும்ப அனுமதிக்கும்.*

**இஸ்ரேலின் போர் அமைச்சரவை:**

*இஸ்ரேலின் போர் அமைச்சரவை 25.12.2023 திங்களன்று இந்த திட்டத்தை விவாதித்தது. ஆயினும் அதன் இராணுவம் கிறிஸ்மஸ் விடுமுறையில் காசாவைத் தொடர்ந்து தாக்கி, 12 மணி நேரத்திற்குள் குறைந்தது 100 பாலஸ்தீனியர்களைக் கொன்றது.*

*தற்போது எஞ்சிய பிணைக் கைதிகளை வீட்டிற்கு அழைத்து வருவதற்கு கடுமையான அழுத்தத்திற்கு உள்ளான இஸ்ரேல் அமைச்சரவை பிளவுபட்டுள்ளது. இதனால் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் சில நிபந்தனைகளை ஏற்க கூடும் என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வும் ஹமாஸை ஒழிப்பதற்கான அவரின் பிரகடனத்தில் இருந்து இன்னமும் பின் வாங்கவில்லை. ஒருபுறம் நெதன்யாகு மறைமுகமாக ஹமாஸுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார், ஆனால் அதே நேரத்தில் அவரது முக்கிய திட்டம் ஹமாஸை அடியோடு ஒழிப்ப தாகும் என்பது சாத்தியப்பட முடியாததாகும். ஆயினும் எகிப்தின் போர்நிறுத்த வரைவை ஹமாஸ் நிராகரித்தாலும், இஸ்ரேலுடன் இன்னமும் எவ்வளவு காலம் போரைத் தொடர்வார்கள் என்பதும் கேள்விக்குறியே? அத்துடன் எகிப்தின் போர் நிறுத்த வரைவை*

*ஹமாஸ் மறுதலிப்பால் யாருக்கு அழிவு என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.*

# 16

## லெபனானில் திறக்கப்படும் போர்முனை ?
## ஹிஸ்புல்லா மீது இஸ்ரேல் தாக்குதல் :



**லெபனானில் இஸ்ரேல் தாக்குதல் :**

இஸ்ரேலுக்கும் லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா (Hezbollah) அமைப்புக்கும் தற்போது மோதல்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. கடந்த வாரம் இஸ்ரேல் ராணுவத்தின் ஆளில்லா விமானம் பெய்ஷரூட் குடியிருப்பு மீது நடத்திய தாக்குதலில், ஹமாஸ் துணை தளபதி சலே அல் அஷரூரியும் அவரது பாது காவலர்கள் **6** பேரும் உயிரிழந்தனர்.

அஷரூரியை கொன்றவர்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப் படும் என்று லெபனானில் செயல்படும் ஹிஸ்புல்லா அமைப்பு தெரிவித்தது. அதன் படி இஸ்ரேலின் மெரோன் விமான

கட்டுப்பாட்டு தளம் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

ஏவுகணை தாக்குதலால் விமான ஓடு பாதை சேதம் அடைந்தது என்றும் மெரோன் வான் கட்டுப்பாட்டு தளத்தில் இருந்து இஸ்ரேலிய விமானப்படையால் போர் விமானங்களை இயக்க முடியவில்லை என்றும் தகவல் வெளியாகியது. இந்நிலை யில், தெற்கு லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பினரின் இடங்களின் மீது இஸ்ரேல் விமான படை பல குண்டுகளை வீசியது.

**ஹிஸ்புல்லா தளபதி பலி :**

இந்த குண்டு வீச்சு குறித்து லெபனான் பாதுகாப்பு அதிகாரி கூறுகையில், ஹிஸ்புல்லாவின் உயரடுக்கு பிரிவான ராட்வான் படையின் மூத்த தளபதி ஒருவர் கிர்பெட் செல்ம் என்ற கிராமத்துக்கு காரில் சென்றார். அப்போது இஸ்ரேல் குண்டுவீச்சில் அவர் உயிரிழந்தார் என்றார்.

இஸ்ரேலுக்கு இந்த ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இடையில் பல தாக்குதல்கள் நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக 2006ம் ஆண்டு நடந்த மிகப் பெரிய போருக்கு பிறகு இருதரப்பும் அடிக்கடி மோதிக்கொள்கின்றன.

ஹமாஸுக்கு ஹிஸ்புல்லா அமைப்பு ஆதரவு தெரிவித் திருப்பதனால், இது இந்த மோதலை இன்னும் விரிவான போராக மாற்ற வழிவகுக்கும் என அஞ்சப்படுகிறது.

ஏனென்றால் ஈரானின் துணையுடன் இயங்கிவரும் ஹிஸ்புல்லா அமைப்பு, கடந்த வாரம் வடக்கு இஸ்ரேலில் சில ஏவுகணைகளை வீசியது. எனினும் இப்போது மிகப் பெரிய போர் ஏற்படாமல் தவிர்க்க ஹிஸ்புல்லா அமைப்பின் தாக்குதல்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அக்டோபர் 15ம் தேதி இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர், “எங்களுக்கு வடக்கு எல்லையில் போரிடுவதில் விருப்பம் இல்லை. ஹிஸ்புல்லா அவர்களது தாக்குதலை கட்டுப்படுத்தினால் நாங்களும் அப்படியே இருப்போம்” எனக் கூறினார்.

**ஹிஸ்புல்லா உருவாக்கம் :**

ஹிஸ்புல்லா இயக்கத்தின் போராட்ட எண்ணக் கருத்துக்கள்



1960,70களில் வேர்விட்டு உத்வேகங் கொண்டது. ஆனால் இயக்கமாக ஹிஸ்புல்லா உருவானது 1982களில் தான். அது தெற்கு லெபனானில் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்திய காலகட்டம். அப்போது ஈரானின் ஷியா முஸ்லீம் தலைவர்களில் ஆதரவுடன் தொடங்கப்பட்ட இயக்கம்.

ஈரானின் இஸ்லாமிய புரட்சியை பரப்பும் முயற்சியாக ஹிஸ்புல்லா பார்க்கப்பட்டது. உள்நாட்டுப்போர் நடந்துவந்த லெபனானில் இருந்த ஷியா முஸ்லீம்களை சேர்த்துக்கொண்டு வலுவடைந்தது ஹிஸ்புல்லா அமைப்பு.

2000ம் ஆண்டில் லெபனானை ஆக்கிரமிக்கும் முயற்சிகளில் இருந்து இஸ்ரேல் பின்வாங்கிய பிறகு, ஹிஸ்புல்லா அமைப்பு ஆயுதங்களைக் கைவிட வேண்டும் என அழுத்தம் கொடுக்கப் பட்டது.

ஆனால் இஸ்ரேல் மூலம் தொடர்ந்து அச்சுறுத்தல் இருப்ப தாக கருதிய ஹிஸ்புல்லா தங்களது இராணுவத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தியது. ஒரு மறைமுகமான அமைப்பாக தொடங்கப்பட்டு இன்று லெபனான் அரசில் ஆதிக்கம் செலுத்தும் இடத்துக்கு வந்திருக்கிறது ஹிஸ்புல்லா அமைப்பு.

அமெரிக்கா, இஸ்ரேல், மேற்கத்திய நாடுகள் மற்றும் சில அரபு நாடுகளும் இந்த இயக்கத்தை தீவிரவாத அமைப்பாக கருதுகின்றன.

**ஹிஸ்புல்லாவின் இராணுவம்:**

*ஹிஸ்புல்லா இராணுவம் தெற்கு லெபனானில் ஷியா முஸ்லீம்கள் அதிகம் வாழும் பகுதியில் வளர்ந்திருக்கிறது. இந்த பகுதியை இஸ்ரேல் கைப்பற்ற முயன்ற போது பல கொரில்லா போர் களை மேற்கொண்டு 2000ம் ஆண்டு இஸ்ரேலை பின்வாங்க செய்தது.*

*2006ம் ஆண்டு இஸ்ரேலுடன் மீண்டும் போர் ஏற்பட்ட போது தங்களது இராணுவம் முன்னேற்றம் அடைந்துள்ளதை உலகுக்கு வெளிப்படுத்தியது ஹிஸ்புல்லா அமைப்பு. சில இஸ்ரேலிய இராணுவ வீரர்களைக் கொன்று இருவரை கடத்தி வந்தது.*

*5 வாரம் நீடித்த இந்த மோதலில் ஹிஸ்புல்லா ஆயிரக் கணக்கான ராக்கெட்டுகளை ஏவியது. இதில் லெபனான் மக்களும் பாதிக்கப்பட்டனர். லெபனானில் 1200 பேர் வரைக் கொல்லப் பட்டனர். பெரும்பாலும் பொதுமக்கள். இஸ்ரேல் வீரர்கள் 158 பேர் கொல்லப்பட்டனர்.*

**ஈரானின் ஆதரவுடன் ஹிஸ்புல்லா:**

*ஈரானின் ஷியா முஸ்லீம்கள் ஆதரவுடன் ஹிஸ்புல்லா செயல்படுகிறது. சிரியாவில் அதிபர் அல்-அசத்துக்கு ஆதரவாக சுன்னி முஸ்லீம்களை எதிர்த்து போரிட்டது இந்த அமைப்பு. இந்த தருணத்தில் ஹிஸ்புல்லா அமைப்பின் இராணுவபலம் பெருகியது.*

*இந்த அமைப்பிடம் துல்லியமான ராக்கெட்டுகள் மற்றும் ட்ரோன்கள் இருக்கின்றன. இஸ்ரேலின் எந்த ஒரு பகுதியையும் தங்களால் தாக்க முடியும் என்கின்றனர்.*

*2021ம் ஆண்டு ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் செய்யது ஹசன் நஸ்ரல்லா, அவர்களிடம் 1 லட்சம் வீரர்கள் இருப்பதாகக் கூறியிருக்கிறார்.*

**இஸ்ரேல் ஹமாஸ் போரில் ஹிஸ்புல்லா:**

*ஹமாஸூம் சரி, ஹிஸ்புல்லாவும் சரி மற்றொரு பாலஸ்தீன அமைப்பான இஸ்லாமிக் ஜிகாத்தும் சரி ஈரானின் துணையுடனே செயல்பட்டு வருகின்றன.*

*ஈரானிய ஆதரவு குழுக்களுக்கு ஹிஸ்புல்லா பக்கபலமாக*




இருந்துள்ளது. யேமனில் ஹவுதி படையினருக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா சண்டையிட்டது என சவுதி அரேபியா குற்றம் சாட்டியிருக்கிறது. ஆனால் இதனை ஹிஸ்புல்லா மறுத்துள்ளது.

இதுபோலவே ஹமாஸுக்கு ஆதரவாக வடக்கு லெபனானில் இருந்து இஸ்ரேல் நோக்கி ஏவுகணைகளை வீசியது ஹிஸ்புல்லா. ஆனால் இஸ்ரேலின் அடுத்தடுத்த எச்சரிக்கைகளைத் தொடர்ந்து தாக்குதல் நிறுத்தப்பட்டுள்ளது.

**லெபனான் பாராளுமன்றில் ஹிஸ்புல்லா:**

இஸ்ரேல் தாக்குதலில் இருந்து லெபனானைக் காப்பதாக ஹிஸ்புல்லா கூறிக்கொள்கிறது. அங்குள்ள ஷியா, மக்களிடம் பிரசித்தி பெற்ற அமைப்பாக திகழ்கிறது.

லெபனான் நாடாளுமன்றத்தில் ஹிஸ்புல்லாவைச் சேர்ந்தவர்கள் அமைச்சர்களாகவும் உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர்.

ஆனாலும் அமெரிக்காவையும் அதன் நட்புநாடுகளான அரபு நாடுகளும் இஸ்ரேலும் ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்பாகவே கருதுகின்றனர். மேற்கத்திய நாடுகளின் தூதரகங்கள் மீது ஹிஸ்புல்லா தாக்குதல் நடத்தியதாக மேற்கத்திய நாடுகள் குற்ற்ம் சுமத்துகின்றன.



# Sooriyakumar! Our dear friend.

Nathan Sooriyakumar, our cherished friend, led a life of profound impact. His existence was characterized by selflessness, genuine care, and pure love. Despite Soori being a couple of years older than me, we formed a strong friendship through our shared connection at church. Soori provided unwavering support in every aspect of my life.

During the tumultuous times of war in Jaffna, we met daily to uplift each other and strategize our next steps in life. Eventually, both of us relocated to Colombo, with Soori making the move before me. When I arrived, Soori generously offered me space in his room, for which I am profoundly grateful. It was a timely and invaluable gesture.

Our friendship transcended distances. Soori and I navigated separate locations, with him in Jaffna, Kandy, Brunei, and Sydney while I resided in Colombo and Melbourne. Despite the physical separation, our connection remained strong. Soori took the initiative to sustain our friendship, showcasing his ability to establish connections wherever he went. His vibrant personality and networking skills introduced me to numerous individuals, creating lasting connections.

Soori possessed a remarkable sense of humour. His delivery, mimicry, and out-of-the-box thinking kept everyone entertained. We fondly remember his jokes and actions, bringing laughter to our hearts.

He carried a deep concern for children's education, particularly those affected by war. Initiating the SJC87 project, Soori made a significant impact, and the initiative has flourished, benefiting many.

Though Soori's time on this Earth was relatively short, his legacy will endure. While we mourn his absence, we take solace in knowing he is free from pain and sickness, residing in a better place. We express our gratitude for his contributions and commit to continuing his remarkable work.

- Egerton S. Niranjan



# சூரியகுமார்!
# எங்கள் அன்பான நண்பர்

நாதன் சூரியகுமார், எங்களின் அன்பிற்குரிய நண்பர், ஆழமான அர்த்தம் கொண்ட வாழ்க்கையை கொண்டவர். அவரது இருப்பு தன்னலமற்ற தன்மை, உண்மையான கவனிப்பு மற்றும் தூய அன்பு ஆகியவற்றால் வகைப்படுத்தப்பட்டது.

சூரி என்னை விட இரண்டு வயது மூத்தவராக இருந்தாலும், சமூகத்தில் எங்களுடைய பகிரப்பட்ட தொடர்பு மூலம் நாங்கள் வலுவான நட்பை உருவாக்கினோம். என் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் சூரி அசைக்க முடியாத ஆதரவை வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் போர் பதற்றமான காலக்கட்டத்தில், ஒருவரையொருவர் உயர்த்திக் கொள்ளவும், வாழ்வின் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு வியூகம் வகுக்கவும் தினமும் சந்தித்துக் கொண்டிருந்தோம். இறுதியில், நாங்கள் இருவரும் கொழும்புக்கு இடம் பெயர்ந்தோம், சூரி எனக்கு முன் நகர்ந்தார். நான் வந்ததும், சூரி தன் அறையில் தாராளமாக எனக்கு இடம் கொடுத்தார், அதற்காக நான் ஆழ்ந்த நன்றியுடன் இருக்கிறேன்.

எங்கள் நட்பு எல்லைகளை கடந்தது. நானும் சூரியும் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றோம். அவர் யாழ்ப்பாணம், கண்டி, புருனே மற்றும் சிட்னி ஆகிய இடங்களில் நான் கொழும்பு மற்றும் மெல்பேர்னில் தங்கியிருந்தோம். நிலரீதியாக பிரிந்த போதிலும், எங்கள் இணைப்பு வலுவாக இருந்தது. சூரி எங்கள் நட்பைத் தக்கவைக்க முன்முயற்சி என்றும் எடுத்தார். அவர் எங்கு சென்றாலும் தொடர்புகளை நிறுவும் திறனை எப்போதும் வெளிப்படுத்தினார். அவரது துடிப்பான ஆளுமை மற்றும் கணனி, இணைய திறன்கள் என்னை பல நபர்களுக்கு அறிமுகப்படுத்தியது. அத்துடன் நீடித்த பல நட்பு இணைப்புகளை உருவாக்கியது.

சூரி குறிப்பிடத்தக்க நகைச்சுவை உணர்வைக் கொண்டிருந்தார். அவரது பன்முக வீச்சும், மிமிக்கிரியும், சிந்தனையும் அனைவரையும் மகிழ்வித்தது. அவரது நகைச்சுவைகளையும் செயல்களையும் நாங்கள் அன்புடன் நினைவில் கொள்கிறோம், எங்கள் இதயங்களில் சிரிப்பை வரவழைக்கிறோம்.

குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வியில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். SJC87 திட்டத்தை துவக்கி, சூரி குறிப்பிடத்தக்க உதவிகளை ஏற்படுத்தினார். மேலும் இந்த முயற்சி செழித்து, பலருக்கு பயனளிக்கிறது.

இந்த பூமியில் சூரியின் காலம் ஒப்பீட்டளவில் குறுகியதாக இருந்தாலும், அவரது மரபும் நினைவும் என்றும் நிலைத்திருக்கும். அவர் இல்லாததை எண்ணி துக்கம் அனுசரிக்கும் போது, அவர் வலி மற்றும் நோயிலிருந்து விடுபட்டு, சிறந்த இடத்தில் வசிக்கிறார் என்பதை அறிந்து ஆறுதல் அடைகிறோம். அவரது தாயக கல்விப் பங்களிப்புகளுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது குறிப்பிடத்தக்க சிறந்த பணியைத் தொடர உறுதியளிக்கிறோம்.

- எகர்டன் எஸ். நிரஞ்சன்



ஈழ விடுதலை குறித்த ஆழமான புரிதலும்...
உலக அரசியலை புரிய வைக்கும் எழுத்தும்...

ஈழ விடுதலை குறித்த ஆழமான புரிதலை எழுத்தாளர் ஐங்கரன் கொண்டிருப்பதற்கு உலக வரலாறு குறித்த அவரது அரசியல் அறிவும், உலக அரசியல் குறித்த அவரது ஆழமான புரிதலும் தான் அடிப்படையானவை. அரசியலை, மக்கள் உணர்வு நிலையை, போராட்டத்தை, பல்வேறு விழிப்புணர்வூட்டும் செய்திகளை மிகவும் சுவாரசியமான முறையில் இவர் எழுதுகின்றார்.

உலக அரசியலின் முகங்களை, ஆயுத அரசியலின் அர்த்தங்களை, ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை, சமகால உலக அரசியலில் பொதிந்துள்ள தந்திரங்களின் முகங்களை என இவர் தன் எழுத்துக்களின் வழியாக தரும் செய்திகள் மிகவும் அதிர்வு தரக்கூடியவை.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு பங்காளனாக, செயற்பாட்டாளனாக தன் பயணத்தை தொடங்கிய விக்கினேஸ்வரா ஐங்கரன் அவர்கள், எழுத்து வழியாக மிக நெடுங்காலமாக ஈழ விடுதலைக்கும் இலக்கியத்திற்கும் பெரும் பங்களிப்பை செய்து வருபவர்.

எழுத்தாகட்டும், மனிதாபிமானச் செயல்களாட்டும் துடிதுடிப்பான ஒரு இளைஞனாகவே எழுத்துக்களின் வழியும் செயற்பாடுகளின் வழியும் தென்படுகின்றார். கவிதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் என்று இடையறாத பயணத்தை தொடர்கின்ற ஐங்கரன், ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் வெளிவந்த முக்கிய இலக்கிய நூல்கள் சிலவற்றிலும் பின்களப் பணியாளனாக இருந்து செயற்பட்டும் வந்திருக்கிறார்.

இலங்கைப் பத்திரிகைகளிலும் சர்வதேசப் பத்திரிகைகளிலும் அவர் எழுதி வரும் பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகள் இன்றளவும் முக்கியமானவை. அவை பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

– தீபச்செல்வன்

ISBN 955524963-6
9789555249638